கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(21.10.2018 - 21 ஐப்பசி 2018 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 09, கதிர் - 194, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /72 / NEWS / 2018

# ஞான ஒளி

ඥාන ඕලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05

## உலக மறைபரப்பு ஞாயிறு 21.10.2018

# அனைத்தையும் இழக்கத் துணிந்து இயேசுவை மட்டுமே பின்பற்றியவர்கள்

### புனித பட்ட சிறப்புத் திருப்பலியில் திருத்தந்தையின் மறையுரை


**அனைத்தையும் இழக்கத் துணிவு கொண்டு, இயேசுவை மட்டுமே பின்பற்ற விழைந்த புனிதர்கள், பாரம் ஏதுமின்றி, சுதந்திரமாக, மகிழ்வாக வாழ்ந்தவர்கள்** - திருத்தந்தை

திருத்தந்தை 6ம் பவுல், சான் சால்வதோர் பேராயர் ஆஸ்கர் ரொமேரோ உட்பட, ஏழு அருளாளர்களுக்கு புனித பட்டம் வழங்கும் சிறப்புத் திருப்பலியை, வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில், தலைமையேற்று நடத்தியத் திருத்தந்தை, தன் மறையுரையில் சுதந்திரமான அன்புக்குத் தடையாக இருப்பது, இவ்வுலக செல்வங்கள் மீது நாம் கொள்ளும் பற்று என்று எடுத்துரைத்தார்.

**நம் உள்ளங்கள் காந்தம் போன்றவை**

அன்பை நோக்கி கவர்ந்திழுக்கப்படும் நம் உள்ளங்கள் காந்தங்கள் போன்றவை என்று கூறியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அன்புக்குப் பதிலாக, இவ்வுலக செல்வங்களால் ஈர்க்கப்படும் உள்ளங்கள், அங்கேயே தங்கிவிடும் ஆபத்து உள்ளது என்று கூறினார். அனைத்தையும் தியாகம் செய்ய மனமின்றி, செல்வங்களிலேயே சிறைப்படும் நாமும், நம் திருஅவையும், நம்மை மையமாக்கி, அங்கேயே நிறைவு காணும் ஆபத்து உள்ளது என்றும், அத்தகைய வாழ்வு, இயந்திர கதியில், ஒரே விதமாகச் செல்லும் வாழ்வாக மாறிவிடுகிறது என்றும் திருத்தந்தை தன் மறையுரையில் எச்சரிக்கை விடுத்தார்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..



### இறைப்பணியாளரான அதிமேதகு. தோமஸ் கர்தினால் குரே (நி.ம.தி.ச) ஆண்டகையின் 30வது நினைவு அஞ்சலி திருப்பலி

**ஐப்பசி 27ஆம் திகதி சனிக்கிழமை**

இறைபணியாளரான அதிமேதகு. தோமஸ் கர்தினால் குரே (நி.ம.தி.ச) ஆண்டகை மரணமாகி 30 ஆண்டு நிறைவு நினைவஞ்சலித் தின திருப்பலியானது ஐப்பசி மாதம் 27ம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ராகமை, தேவத்தை, இலங்கை அன்னையின் தேசிய பெசிலிக்காவில் நடைபெறும்.

கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெறவிருக்கும் இத்திருப்பலியில் கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர்களான மேதகு மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை, மேதகு ஜே.டீ. அந்தனி ஆண்டகை, ஓய்வு பெற்ற பேராயர்களான அதிமேதகு. நிக்லஸ் மார்க்ஸ் பர்னாந்து ஆண்டகை, மற்றும் அதிமேதகு. ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை உள்ளிட்டோர் கலந்து கொள்வார்கள். 29ம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நினைவுநாளை முன்னிட்டு அதிமேதகு. பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் பேராயர் இல்லத்தில் மறையுரை நடைபெறுகின்றது.

## குறுங்கால கற்கை நெறி

கொழும்பு உயர்மறைமாவட்ட, தமிழ் இறையியலகம் இன்னுமொரு குறுங்கால கற்கை நெறியை "மரியியல்" என்ற தலைப்பை மையமாக வைத்து நடாத்த தீர்மானித்துள்ளது. இற்கற்கை நெறியானது எதிர்வரும் சனிக்கிழமை (20.10.2018) மாலை 4.00 மணிக்கு கொழும்பு அக்குவைனஸ் பல்கலைக்கழக வகுப்பறை ஒன்றில் நடைபெறும். இதனை நடாத்துபவர் பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த அருட்பணி. நிகன் அடிகளார். கற்கை நெறியில் கலந்துகொள்ள விரும்பும் அனைவரும் எதிர்வரும் சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு முன்பே கற்கைநெறி நடாத்தப்படும் வகுப்பறையில் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். கற்கைநெறியானது 20.10.2018 சனிக்கிழமை முதல் தொடர்ந்துவரும் 10 சனிக்கிழமைகள் மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரையும் நடாத்தப்பட்டு, இறுதியிலே சான்றிதழும் வழங்கப்படும். கற்கை நெறிக்கட்டணமாக ரூபாய் 500/- அறவிடப்படும். விபரங்கட்கு பின்வரும் தொலைப்பேசி இலக்கங்களோடு தொடர்பு கொள்ளவும்.

**அருட்பணி. றெஜினோல்ட் லூசியன் அ.ம.தி**
**பொறுப்பாளர் தொ.பேசி : 071-8299151**
**திருவாளர். சகாயராஜ், ஒருங்கிணைப்பாளர்,**
**தொ.பேசி : 071-9738175, 0777134775**

## ஆன்மாக்களின் தினம்

### கார்த்திகை 2ம் திகதி



**பொரள்ளை கல்லறையில் வழிபாடுகள்**

கார்த்திகை மாதம் 2ம் திகதி மாலை 4.00 மணிக்கு செபமாலையும், 4.30 மணிக்கு திருப்பலியும் கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் மேதகு ஜே.டீ அந்தனி ஜெயக்கொடி ஆண்டகையின் தலைமையில் நடைபெறும். இறுதியில் கல்லறைகள் ஆசீர்வதிக்கப்படும்.

**மாதம்பிட்டி கல்லறையில்**

கார்த்திகை மாதம் 2ம் திகதி மாலை 3.15 மணிக்கு செபமாலையும், 4.00 மணிக்கு திருப்பலியும் கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெறும்.

## கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் மாபெரும் திருச்செபமாலை பவனி

கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் நல்லாயன் ஆண்டினை முன்னிட்டு, திருச்செபமாலை பவனியானது ஐப்பசி மாதம் 24ம் திகதி (போயாதினம்) காலை 7.30 மணிக்கு தேவத்தை இலங்கை அன்னை தேசிய பெசிலிக்காவில் கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில், சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இடம்பெறும்.

இப்பவனி யோசேவாஸ் அடிகளாரின் திருச்சுருபத்தை ஸ்தாபித்துள்ள மற்றும் அதி. வண. பேராயர் மசொன் ஆண்டகை ஒப்புக்கொடுத்த கல்வாரி சிலுவையடி மண்டபத்தில் ஆரம்மாவதோடு, திருப்பலியின் காணிக்கைகள் மாற்கு ஸ்ரீ சரண சேவை நிறுவனத்திற்கு வழங்கப்படும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## கொழும்பு உயர் மறைமாவட்ட குருக்கள் பேராயருடன் ஐரோப்பியத் திருப்பயணம்





கொழும்பு உயர் மறைமாவட்ட குருக்கள் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையுடன் ஐரோப்பிய திருத்தலங்களுக்கான திருப்பயணத்தை இம்மாதம் 01ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரையான 14 நாட்களாக மேற்கொண்டிருந்தனர். அவ்வேளையில் திருத்தந்தையை சந்தித்து அவரோடு இணைந்து எடுத்துக்கொண்ட புகைப்படத்தினைக் காணலாம்.

**ஆண்டவர் நமக்கு மாபெரும் செயல் புரிந்துள்ளார். (தி.பா 126)**

## இரத்தினபுரி - ஏஹலியகொட தோட்ட புனித ஆரோக்கிய அன்னையின் ஆலய ஆண்டு விழா.



கடந்த 20.09.2018 அன்று அருட்பணி. S. பாலேந்திரன் C.R அடிகளாரால் கொடியேற்றப்பட்டு ஆண்டு விழா நவநாள் திருப்பலியுடன் ஆரம்பிக்கப்பட்டது. 21.09.2018 அன்று காலை வளர்ந்தோருக்கான ஞானஸ்நானமும், உறுதிப்பூசுதல் வழங்கும் வைபவமும், மாலை சிறார்களுக்கான முதல் நன்மை வழங்கும் நிகழ்வும், நவநாள் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

22ந் திகதி சனிக்கிழமை மாலை ஆராதனையும், நற்கருணை பவனியும் பிரிவினை சபையைச் சேர்ந்தவர்களை திருப்புமுனைக்கு மாற்றியமைத்தது பாலேந்திரன் அடிகளாரின் மறையுரையின் மூலம் மக்கள் மனந்திரும்பப்பட்டனர். திருநாள் திருப்பலியில் அருட்பணி. பாலேந்திரன் அடிகளாருடன் பங்குத்தந்தை மில்டன் விக்ரமசிங்க அடிகளாரும், அருட்சகோதரர் பொன் (பிலிப்பைன்ஸ்) அடிகளாரும் இணைந்துக் கொண்டனர். திருப்பலியின் பின்னர் அன்னையின் திருச்சுருப சுற்றுப்பிரகாரம் திருவிழாவை அலங்கரித்தது. இந்து, பௌத்த மக்களும் பிரிவினை சபையைச் சேர்ந்தவர்களும் கலந்துகொண்டனர். விசேட வருகை தந்து அரும்பெரும் பணிபுரிந்த பாலேந்திரன் அடிகளாரே! கோடான கோடி நன்றி.

**ஆரோக்கிய மாதாவே உமது புகழ் பாடித்துதித்திடுவோம்.**
**எமை கைவிடாதிருக்க உமை கரம் கூப்பி வணங்கிடுவோம்.**
**வேளாங்கண்ணி தாயே தினம் செபித்து மகிழ்ந்திடுவோம்**
**என்றும் பிரியாதிருக்க உமது கரங்களை பற்றி பிடித்திடுவோம்**
**வாழ்க வாழ்க மரியே வாழ்க!**

**மேரி இருதயநாதன், மறையாசிரியர், பேராலயம், இரத்தினபுரி.**

## விடுமுறை காலத்து விவிலியப்பள்ளி



எம் பங்கான புனித அந்தோனியார் ஆலயம் தெமட்டக்கொடையில் கடந்த ஆவணி மாத விடுமுறையில் பள்ளிச் சிறுவர்களுக்கு விவிலிய வகுப்புக்கள், சுமார் ஏழு நாட்களாக அருட்தந்தை இக்னேசியஸ் அடிகளாரின் தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. காலை 8.00 மணி முதல் 12.00 மணிவரையும் பி.ப 3.00 மணி முதல் 6.00 மணிவரையும் இவ்வகுப்புக்கள் நடைபெற்றது. கிளரேசியன் சபையின் சகோதரர்கள் ஆவணி 13ம் திகதி முதல் 18ம் திகதி வரை இவ்வகுப்புக்களை சுவாரசியமாக நடத்தினர்.

தினமும் ஒரு பாடலோடு இவ்வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும். வயதுக்கு ஏற்றவாறு "திருவி-விலியத்தின்" வசனங்களுடன் விவிலிய வகுப்புக்கள் நடைபெற்றன. ஒவ்வொரு நாட்களும் விளைாட்-டுக்களுடன், சித்திரப் போட்டிகளும் மாணவர்களை கவரும் வண்ணமும் உற்சாகப்படுத்தும் வண்ணமும் ஆளுமை, திறன்களை வளர்க்கும் வண்ணமும் இவ்வகுப்புக்கள் மகிழ்ச்சிகரமாக நடைபெற்றன.

இறுதி நாட்களில் சமூகமயமாக்கும் வண்ணம் எம்பங்கில் பல இடங்களில் பாத்திமா தோட்டத்திலும், ஆராமிய வீதியிலும் கலைநிகழ்வுகளுடன் விவிலியப் பாசறைகள் நடைபெற்றன. இறுதி கலைநிகழ்வுகளை பெற்றோரும் கண்டுகளிக்கும் வண்ணம் எம் மண்டப வளாகத்தில் நடைபெற்ற கலைநிகழ்வுகள் ஒவ்வொன்றும் மாணவர் தாம் கற்ற விடயங்களை பாடல், நாடகம், நடனம் ஆகிய திறமைகளில் வெளியூடுகளின் ஊடாக பிரதிபலித்துக் காட்டினர். எனவே இத்தகைய விடுமுறை விவிலிய பாசறைகளின் மூலம் எம் பங்கு மாணவர்களை விவிலிய வாழ்வில் வளப்படுத்திய எம் பங்குத்தந்தைக்கும் நன்றி தெரிவிப்பதோடு, கிளரேசியன் சபை சகோதர்களுக்கும் எம் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும். வளமூட்டும் விவிலியப் பள்ளிகளை நாம் என்றும் வளர்ப்போம். பள்ளிச் சிறுவர் உள்ளத்தில் விவிலிய பாடங்களை விதைப்போம். நன்றி

**தகவல் : F.X. சிசிலியா**

## பதுளை மரியாள் பேராலய வருடாந்த திருவிழா 07.10.2018





மேற்படி ஊவா மகாணத்தில் பதுளை என்ற அழகிய நகரத்தில் எழுந்தருளி உள்ள செபமாலை அன்னையின் ஆலயத்திருவிழா 30.-9.2018 அன்று இறைமக்கள் ஒன்றுசேர கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து ஒன்பது நாட்களாக மாலை 4.00 மணிக்கு செபமாலையும், 4-30 மணிக்கு திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இக்காலங்களில் இறைமக்களுக்கு மறையுரையாற்றிய அருட்தந்தையர்கள் அனைத்து மக்களையும் இறைவன்பால் ஈர்த்தனர். 06.10.2018 மாலை ஆராதனை பங்கு குருக்கள் சூழ்ந்து நிற்க இறைமக்க-ளுக்கு இறைபிரசன்னமாக நற்கருணை ஆராதனை வெகுசிறப்பாக நடைபெற்றது. இறுதிநாள் திருவிழா திருப்பலி பதுளை மறைமாவட்ட ஆயர் மேதகு ஆயர் வின்ஸ்ட்டன் பெர்னாண்டோ (S.S.S) ஆண்டகையின் தலைமையில் நிறைவேற்றப்பட்டது. திருப்பலியைத் தொடர்ந்து செபமாலை அன்னையின் திருச்சொரூபம் பதுளை நகர வீதியில் எடுத்துச் செல்லப்பட்டு இறுதி ஆசீர் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இறைமக்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டதுடன் வருடாந்த திருவிழா இனிதே நினைவுபெற்றது. அனைவருக்கும் ஆசீர் கிட்டுவதாக! மரியே வாழ்க.

**தகவல் : திருமதி அன்னம்மா சகாயம்,**
**(மரியாயின் சேனை உறுப்பினர்)**



கொழும்பு டிலாசால் கல்லூரியின் 2018ம் ஆண்டிற்கான பிரதான மாணவ தலைவர் ருக்ஷான் பர்னாந்துவிற்கு கல்லூரி அதிபர் சின்னம் அணிவிப்பதை படத்தில் காணலாம்.

**தகவல் : அருட்தந்தை. ஷெராட்.**



கொழும்பு டிலாசால் கல்லூரியினால் 2018ம் ஆண்டு கல்வித் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கு தேற்றவுள்ள மாணவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு.

**தகவல் : மனோகரி விஜயநாயக்க.**

## நாயக்ககந்தை புனித காணிக்கை அன்னை ஆலய தமிழ் பிரிவு மறைக்கல்வி மாணவனுக்கு முதல் நன்மை.



நாயக்ககந்தை புனித காணிக்கை அன்னை ஆலய பங்கில் 2018.09.21ம் திகதி சனிக்கிழமை பங்கின் பாடசாலை மாணவ மாணவிகளுக்கான முதல்நன்மை வழங்கும் வைபவம் வெகு விமரிசையாக நடைபெற்-றதுடன் திருப்பலி பங்குத்தந்தை அருட்பணி. ரஞ்சன் சில்வா அடிகளாரால் நிறைவேற்றப்பட்டது. இவ்வருடம் முதல் முறையாக பங்கில் தமிழ்ப்பிரிவு மறைக்கல்வி மாணவனுக்குப் பங்குத்தந்தை அருட்பணி. ரஞ்சன் சில்வா அடிகளாரினதும், உதவிப்பங்குத் தந்தை அருட்பணி. லலித் திசேரா அடிகளாரினதும் ஊக்குவிப்புடனும், செயற்பாட்டுடனும் முதல்நன்மை வழங்கப்பட்டமை மிக முக்கிய விடயமாகும்.

மேற்படி தமிழ் மாணவனுக்குப் பங்குதந்தை அருட்பணி. ரஞ்சன் சில்வா அடிகளாரால் அன்பளிப்பாக தமிழில் திருவிவிலியம் வழங்கியது சிறப்பம்சமாகும். மேலும் படத்தில் பங்குத்தந்தை அருட்பணி. ரஞ்சன் சில்வா அடிகளாரையும், முதல்நன்மை பெற்ற மாணவன் றெவோன், முதல் நன்மைக்காக ஆயத்தப்படுத்திய மறைக்கல்வி ஆசிரியை திருமதி. கோமதி ஜோன் அவர்களையும் படத்தில் காணலாம்.

**தகவல் : திருமதி. கோமதி ஜோன்**

ஞான ஒளி
GNANA OLI ඥාන ඔලි
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
21 ஐப்பசி, 2018 ஞாயிற்றுக்கிழமை.

# “மறையைப் பரப்புவது எமது கடமையாகும்”.

உலக மறைபரப்பு தினம் திரும்பவும் “முதலாவதும், உயர்ந்த மறைபரப்பாளருமான” இயேசுவோடு எங்களை ஒன்று சேர்க்கிறது. என்ற திருத்தந்தை 6ம் பவுலின் கூற்றுக்கிணங்க இம்மாதம் நாம் உலக மறைபரப்பாளர் தினத்தைக் கொண்டாடுகின்றோம். திருச்சபையின் மறைபரப்புதல் நல்லுள்ளம் கொண்ட எல்லா மக்களுக்கும் உரியது. அது நற்செய்தியின் மனமாற்ற சக்தியோடு தொடர்புடையது. நற்செய்தி என்றால் மகிழ்ச்சி நிறைந்த நல்ல செய்தி, அச்செய்தியை அறிவிப்பது எமது கடமையாகும். அதுமட்டுமல்ல அச்செய்தி எமக்கு புதுவாழ்வை அளிக்கின்றது. எங்களுக்கு வாழ்வழிக்கும் ஆவியைத் தரும் உயிர்த்த ஆண்டவர், எமக்கு வழியும், உண்மையும், வாழ்வுமாகின்றார். எமக்கு வழியாக இருக்கும் இயேசுவை நம்பிக்கையோடும், துணிவோடும் பின்செல்ல இம்மறைபரப்பு தினம் எம்மை அழைத்துநிற்கின்றது.

இயேசுகிறிஸ்துவின் நற்செய்தி அனைவருக்கும் தேவை. திருச்சபை மூலமாக இயேசு தனது பணியை நல்ல சமாரித்தனைப்போல் தொடர்ந்தாற்றுகின்றார். இரத்தக் காயம் நிறைந்த மனித குலத்தை, நல்ல ஆயனைப்போல் முடிவில்லா பாதையில் தடுமாறிக் கொண்டிருப்போரை தேடிச் செல்கின்றார். அவரைப் பின்பற்றும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினராகிய நாம் அனைவரும் ஒரு மறைபரப்பாளர்களே. இயேசுவைப் போன்று காயப்பட்டவர்களை தேடிச் சென்று உண்மையான விசுவாசத்தை மக்கள் மத்தியில் உருவாக்க முயற்சிக்க வேண்டும். இறைவனின் நற்செய்தியை பரப்பிட முன்வரவேண்டும். இயேசுவுக்கான எமது உயிரையும் கொடுக்க துணிவோடு இருக்கவேண்டும்.

வட உகண்டாவில் கித்கும் என்ற இடத்தில் நடந்த திருப்பலியில் ஒரு மறைபரப்பாளர் கொலை செய்யப்பட உள்ளவர்களோடு, “என் இறைவா, என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்” என்ற இயேசுவின் வார்த்தையை தொடர்ந்து சொல்லச் சொன்னார். மக்களுக்கு அந்த திருப்பலி ஆறுதலையும், சக்தியையும், கொடுத்தது. இதேபோல் எண்ணமுடியாத சாட்சிய வாழ்வு வாழ, பிரச்சினைகள், சாதிவேறுபாடு ஒழிந்து மனமாற்றமும், பகிர்வும் குழுவாழ்வு வாழவும் நற்செய்தி அழைப்பு விடுக்கிறது. தொடர் விடுதலைப்பயணம், ஆன்மீகப்பயணம், நாடுகடத்தலுக்கு மறைபணி ஆன்மீக ஊட்டம் கொடுக்கிறது.

மறைபரப்பாளரை உருவாக்க இளையோர், பெரியோர், குடும்பங்கள், குருக்கள், ஆயர்கள், அருட்சகோதர சகோதரிகள், அயராது பணிபுரிகிறார்கள். எனவே நாமும் மறைபணியை செய்ய மறைபரப்பாளர்களின் தாய் அன்னை மரியாளிடம் வேண்டுவோம், பரிசுத்த ஆவியின் தூண்டுதலால் தாழ்மையான விசுவாசத்தோடு இறைவனின் வார்த்தையை ஏற்று, இயேசுவின் நற்செய்தியை பரப்பி இறைவனின் அழைத்தலுக்கு நாங்களும் “ஆம்” என்று பதிலளிப்போமாக.

“சமுதாயத்தைச் சீரழிக்கும் தீமைகளை எதிர்த்துப் போராட செபமாலை வல்லமையான ஆன்மீக ஆயுதம் (செபமாலையின் திருத்தந்தை என அழைக்கப்படும் 13ஆம் சிங்கராயர்). ஆம் இன்று நடைபெறும் வன்முறைகள், போர்கள், சண்டை, சச்சரவுகள், ஒருவர் மற்றவர் மீது கொள்ளும் பொறாமை, பெற்றோர் பிள்ளைகளை கொலை செய்தல், சகோதரன் தன்னுடைய சகோரதனை பழிவாங்குதல் போதை, கற்பழிப்பு, சிறுவர் வன்முறைகள் இவ்வாறு பல தீமைகள் எம் சமூகத்தை ஆட்டிப் படைக்கக் காரணம் எம்மத்தியில் செபமாலை செபிக்கும் பழக்கம் குறைந்துகொண்டு வருகின்றமையே எனலாம். சிந்தித்துப் பாருங்கள் எமது முன்னோர்கள் எந்நேரமும் செபமாலையை தனிப்பட்ட முறையிலும், குடும்பமாகவும், ஆலயங்கிலும் அன்றாடம் சொல்லிவந்தார்கள். அவர்களுடைய காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் இருந்தாலும் குறைவாகவே இருந்தது. இன்று எம்மத்தியில் செபமாலைக்கு இடம்இல்லை என்றே கூறலாம். வீடுகளில் தொலைகாட்சிக்கு அடிமையாகி செபமாலையை மறந்து வாழ்கின்றார்கள். சிந்திப்போம் செயல்படுவோம். எம் சமூகத்தை மாற்றுவோம்.

இறையாசீருடன் ஆசிரியர்

# மறைபரப்புவோமா...



ஆக்கம் : அருட்பணி. அந்திரியாஸ் பர்னாந்து அ.ம.தி

ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மாதம், மறைபரப்பு மாதமாக கொண்டாடப்படுகிறது. இம்மாதம் இறுதி ஞாயிறுக்கு முந்திய ஞாயிறு, மறைபரப்பு ஞாயிறாக கொண்டாடப்படுகிறது. அவ்வகையில் இஞ்ஞாயிறு 21ம் திகதி மறைபரப்பு ஞாயிறாகும். திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் கிறிஸ்துவை மற்றவர்களுக்கு அறிவிக்க கடப்பாடுடையவர்கள். கிறிஸ்தவரல்லாதவர்களுக்கு கிறிஸ்துவை அறிவிக்க, அன்று பல துறவற சபையினர், மற்றும் மறைபோதக பணி குழுவினர் என பல்தரப்பட்டோர் கிறிஸ்வத நாடுகளிலிருந்து பயணம் மேற்கொண்டனர். மேலும் பிரான்சிய புரட்சியின் பின்புலத்தில் மறைபோதக பணி பல பிரமாணங்களை கொண்டதாக உருவாகியது. கிறிஸ்தவ நாடுகளிலேயே கிறிஸ்தவம் பின்னடைவைக் கண்டது. அவ்வாறான ஓர் சூழமைவிலேயே பொலின் ஜரிகோர்ட் என்றழைக்கப்படும் பெண்மணியினால் 1818இல் விசுவாச மறைபரப்பு சபை உருவாக்கப்பட்டது. திருச்சபை தன்னிலேயே கிறிஸ்துவை அறிவிக்க கடப்பாடுடையது. எனவே கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு கிறிஸ்துவை அறிவிக்க முன்னெடுக்க, மேலும் மனித முன்னேற்பாடு செயற்பாடுகளை மேற்கொள்ள, நீதி, சமத்துவத்தை நிலைநாட்ட, தேவைப்படுகிற நீதியினைத் திரட்டுதல், அதற்காக தவமிருத்தல் மற்றும் செபித்தல் ஆகியவற்றை மேற்கொள்ளும் நோக்குடன் இச்சபை உருவாக்கப்பட்டது. 1926இல் 11ம் பயஸ் திருத்தந்தை இதனை மறைபரப்பு ஞாயிறாக கொண்டாட பணித்தார். மறைபரப்பு ஞாயிறன்று சேகரிக்கப்படும் நிதியினால் பல புண்ணிய காரியங்கள் இடம்பெறுவதை நாம் அறியவேண்டும். உதாரணமாக ஓர் காலக்கட்டத்தில், ஏன் இன்றும் கூட பல ஆலயங்கள் கட்டுவதற்கு, குருமடங்களுக்கு, பொதுநிலையினர் உருவாக்கத்திற்கு, மற்றும் மனித வள அபிவிருத்திற்கு என பல்தரப்பட்ட பணிகளுக்காக இந்நிதி பயன்படுகிறது.

மேலும் நிதி சேகரிப்பது மாத்திரம் தான் இச்சபையின் நோக்கம் என தப்புக்கணக்கு போடக்கூடாது. செபமும், தவமும் இதன் இன்றியமையாத கூறுகள் என்பதையும் மறத்தலாகாது. அடுத்து இம்மறைபரப்பு ஞாயிறு வழியாக நாம் கற்றுக்கொள்ளக் கூடிய பாடங்கள் எவை என சிந்திக்க விளைவோம்.

இம்மாத தொடக்க நாள் புனிதை குழந்தை தெரேசாவின் திருவிழா. இவர் மறைபோதக நாடுகளின் பாதுகாவலி. இவர் புனித பிரான்சிஸ்கு சவேரியரைப் போன்று மறைபோதகப் பணிகளில் ஈடுபடவில்லை. இவர் வாழ்ந்த குறுகிய காலத்தில் துறவு மடத்திற்குள்ளே நான்கு சுவர்களுக்கு மத்தியில் கழிந்தது. இவருடைய வாழ்வு இன்று நம் குடும்பங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு. ஆன்மாக்களின் மீட்பு, குருக்களின் தூய்மைக்காக செபிப்பதை நோக்காகக் கொண்டு துறவு மேற்கொண்டார். திரேஸ்சினுடைய குடும்பம் அன்பான குடும்பம், வசதிகளோடு வாழ்ந்த குடும்பம். தம் பிள்ளைகளை இறைபக்தியிலும், விசுவாசத்திலும் வளர்க்க தவறவில்லை. கட்டுப்பாடோடு நல்லொழுக்கத்தில் வளர்த்தார்கள். தங்கள் குழந்தைகளோடு பெற்றோர் நேரம் செலவிட்டார்கள். நல்ல பொழுதுபோக்குகள் ஏற்படுத்திக் கொடுத்தார்கள். இன்று பெற்றோராக தம் பிள்ளைகளை நல்லொழுக்கத்தில் வளர்த்துள்ளோமா? தம் பிள்ளைகளை இறைவிசுவாசத்திலும், இறையச்சத்திலும் பயிற்றுவித்திருக்கின்றோமா? குடும்பத்தில் ஒருவர் மற்றவர்களுக்காக நேரம் செலவிடுகின்றோமா? மறையை பரப்ப, வீரதீர செயற்பாடுகளை அல்ல மாறாக அன்றாடம் செய்யும் சிறு சிறு காரியங்களை மிகுந்த அன்போடு செய்ய அழைக்கப்படுகின்றோம். எங்கள் தனி, குடும்ப வாழ்வில் எந்தளவிற்கு செபம் இடம்பெறுகிறது? நம் வீடுகளில்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..


## உண்மை உரைக்கும்

கமிலஸ்



# நல்ல ஆயன்

“ஆயன்” என்னும் விவிலிய உருவகம் நமக்கு நன்கு அறிமுகமான ஒன்று. இறைவனை ஆயராகக் காணும் மனநிலை இஸ்ரயேல் மக்களின் நாடோடி வாழ்க்கை அனுபவத்திலிருந்து பிறந்தது.



நாடற்றவர்களாய்த் திரிந்த இஸ்ரயேலர்களை வழிநடத்தி, பாலும் தேனும் பொழியும் கானான் நாட்டுக்கு ஆயராக அழைத்துச் சென்ற மோசே தான் இஸ்ரயேலரின் முதல் ஆயன் எனச் சொல்லப்படத் தகுதி பெற்றவர்.

மோசேக்குப் பின் ஆயன் என்னும் பட்டத்தைப் பெற்றவர் தாவீது அரசன். உண்மையிலேயே தாவீது சிறு வயதில் ஆடுகளை மேய்த்த ஆயன்தான். அரசராகத் திருப்பொழிவு பெற்றபின், இஸ்ராயேல் மக்களுக்கு ஆயராக, தலைவராக இருந்து வழிநடத்தினார்.

தாவீது அரசர் இறைவனை ஓர் ஆயராக அனுபவித்தவர். அந்த இறை அனுபவத்தின் வெளிப்பாடு தான் அவர் இயற்றிய “ஆண்டவரே என் ஆயர், எனக்கேதும் குறையில்லை” என்னும் 23ஆம் திருப்பாடல். யாவே இறைவன் பாதுகாப்புத் தருபவராகவும், பசும்புல்லும், குளிர் நீரும் தந்து பராமரிப்பவராகவும், புத்துயிர் ஊட்டுபவராகவும் இத்திருப்பாடலில் கொண்டாடப்படுகிறார். இதே அனுபவத்தை இஸ்ராயேல் மக்கள் அனைவரும் பாலைவனத்தில் பெற்றிருந்தனர் அவர்களுக்கு மன்னாவும், குடிநீரும் தந்து பாதுகாப்புடன் உரிமை நாட்டுக்கு அழைத்துச் சென்றார் யாவே இறைவன்.

புதிய ஏற்பாட்டில் இயேசு “நல்ல ஆயன் நானே” (யோவா. 10:14) என்று கூறி, ஆயனாகத் தம்மையே அறிமுகப்படுத்திக் கொள்கிறார். எத்தகைய விதங்களில் அவர் ஆயனாகச் செயல்பட்டார் என்னும் ஆய்வு பல தரவுகளைத்தருகிறது.

## 1. ஆயன் அறிகின்றார்:

ஓர் ஆயன் தன் மந்தையிலுள்ள அனைத்து ஆடுகளையும் நன்றாக அறிந்திருப்பது போல, இயேசுவும் நம்மை அறிகின்றார். “தந்தை என்னை அறிந்திருக்கிறார். நானும் தந்தையை அறிந்திருக்கிறேன். அதுபோல நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன். என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன” (யோவா. 10:14-15)

## 2. ஆயன் பரிவு கொள்கின்றார்:

ஆயன் தனது ஆடுகளின் மீது மிகுந்த அக்கறை காட்டுகின்றார். இயேசுவின் அக்கறையை மாற்கு நற்செய்தியாளர் நன்கு பதிவு செய்கிறார். பாலை நிலத்தில் ஆடுகளைப் போல் இருந்ததால் அவர்கள்மீது பரிவுகொண்டு அவர்களுக்குப் பலவற்றைக் கற்பித்தார்” (மாற். 6:34) என்று வாசிக்கிறோம். பரிவின் முதல் வெளிப்பாடாகத் தமது வார்த்தைகளை அறிவித்தார்.

## 3. ஆயன் உணவு தருகிறார்:

அந்தப் பரிவின் அடுத்த வெளிப்பாடாக உணவின்றித் தவித்த ஐயாயிரத்துக்கும் அதிகமான மக்களுக்க உணவு அளித்தார்.

## 4. பாதுகாப்புத் தருகிறார்:

“நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன். உம் கோலும் நெடுங்கழியும் என்னைத் தேற்றும்” என்கிறது திருப்பாடல் 23. இயேசுவும் தம் சீடர்களுக்குப் பாதுகாப்புத் தந்தார். அவர்களின் அச்சத்தைப் போக்கினார். “சிறு மந்தையாகிய நீங்கள் அஞ்சவேண்டாம்” (லூக். 12:32) என்ற சொற்கள் அவர் தரும் பாதுகாப்பை எடுத்துரைக்கின்றன.

## 5. உயிரைத் தந்தார்:

நல்ல ஆயன் தன் ஆடுகளுக்காகத் தன் உயிரையும் கொடுக்க முன் வருவார் என்பது இயேசுவின் கருத்து. அதை அவர் சொல்லவும் செய்தார். ஆடுகளுக்காக “எனது உயிரைக் கொடுக்கிறேன்” (யோவா. 10:14-15) சொன்னதைச் செய்தும் காட்டினார்.

## 6. ஆடுகளின் எதிர்காலம்:

எக்காலமும் தம் சீடரோடு இருக்க இயலாது என்பதனால், தனக்குப் பதிலாளர்களாய் புதிய ஆயர்களை நியமித்தார் இயேசு. தலைமை ஆயராக அவர் ஏற்படுத்திய பேதுருவிடம் “என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்”, “என் ஆடுகளை மேய்”, “என் ஆடுகளைப் பேணி வளர்” (யோவா. 21:15, 16,17) என்று மும்முறை மொழிந்தார்.

## 7. ஆடுகளுக்கான கனவு:

பிளவுபட்டுக் கிடக்கும் சமுதாயம் ஒன்றுபட வேண்டும் என்பதே இயேசுவின் கனவாக இருந்தது. எனவேதான் இயேசு கூறினார் “ஒரே மந்தையும் ஒரே ஆயரும் என்னும் நிலை ஏற்படும்” (யோவா. 10:16). அந்தக் கனவை நிறைவேற்றி வைப்பது இன்றைய ஆயர்களின் பொறுப்பாகும்.

நல்ல ஆயனான இயேசு தமது மேய்ப்புப் பணியை அவரது வாரிசுகளான ஆயர்களிடம் விட்டுச் சென்றுள்ளார். அவர்கள் இயேசுவைப் போல் மேற்கண்ட பணிகளை நல்முறையில் நிறைவேற்றி நல்ல ஆயர்களாகத் திகழ வேண்டும். தலைமை ஆயரான புனித பேதுரு தமது திருமடலில் “உங்கள் பொறுப்பிலிருக்கும் கடவுளின் மந்தையை நீங்கள் மேய்த்துப் பேணுங்கள்” (1பேதுரு 5:2) என்று வழங்கிய அறிவுரையின் படி மேய்ப்புப் பணியில் ஈடுபட வேண்டும்.



# கன்னி மரியாவின் செபமாலை!

## திருத்தந்தை புனித 2-ஆம் ஜோன் போல்



கன்னி மரியாவின் செபமாலை திருச்சபையால் ஊக்குவிக்கப்பட்டு எண்ணற்றப் புனிதர்களால் நேசிக்கப்பட்ட செபம். எளிமை ஆனால் ஆழம் நிறைந்தது. விலை மதிப்பில்லாதது. நற்செய்தியின் ஆழத்தை முழுமையாக உள்ளடக்கிய சாரம். என் விருப்பமான செபம். அற்புதமான செபம். செபமாலை வழியாகத் தூய கன்னி மரியாவிடமிருந்து நான் பெற்றுக்கொண்ட வரங்கள் எத்தனை எத்தனை! செபமாலையில் மரியாவுடன் இணைந்து இயேசுவின் திருமுகத்தை ஆழ்ந்து தியானிப்பதால் தந்தையின் பேரன்பை உணர்கிறோம். தூய ஆவியாரின் மகிழ்ச்சியில் அகமகிழ்கிறோம். அப்போது தான் நாம் அனைவரும் முக்காடு இல்லா முகத்தினராய் ஆண்டவரின் மாட்சியைப் பிரதிபலிக்கிறோம். இவ்வாறு மென்மேலும் மாட்சிப்பெற்று அவர் சாயலாக மாற்றம் அடைகிறோம். இவையெல்லாம் ஆவியாம் ஆண்டவரின் செயலே (2கொரி. 3:18).

மீட்புக்காக கடவுள் மனித உரு எடுத்தப் பேருண்மையை மையமாகக் கொண்டதால் செபமாலை கிறிஸ்துவின் வாழ்க்கைப் பண்புகூறும் இறையியல் உள்ளடங்கிய செபம். செபமாலை தியானத்திற்கு திருவிவிலிய அடிப்படை மற்றும் மிகுந்த ஆழம் அமையவேண்டும் எனில் செபமாலை பேருண்மையை சொன்னவுடன் அந்தச் சூழ்நிலைக்கு தொடர்புடைய பெரிய அல்லது சிறிய விவிலியப் பகுதியை எடுத்து வாசிக்க வேண்டும். தூய ஆவியாரால் தூண்டப்பட்ட வார்த்தைகளுக்கு ஈடு ஏது?

திருவழிபாட்டில் பங்கு கொள்வதால் மட்டும் ஆன்மீக வாழ்வு முழுமை பெறாது. பொது செபத்திற்கு அழைக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் தங்கள் உள்ளறைக்குச் சென்று கதவை அடைத்துக் கொண்டு மறைவாய் உள்ளத் தந்தையிடம் வேண்ட வேண்டும் (மத். 6:6)

திருத்தூதர்களின் போதனைப்படி இடைவிடாது இறைவனிடம் வேண்ட வேண்டும் (1தெச.5:17 செபமாலையே உட்சுவர் சுற்று வண்ணக் காட்சிகள் அடங்கிய இடைவிடா செபம்.

ஆன்மீகச் சிந்தனை இல்லையெனில் செபமாலை ஆன்மா இல்லா உடல் போன்றது. “இறைவனிடம் வேண்டும்போது புற இனத்தவரைப்போல் பிதற்ற வேண்டாம். மிகுதியான சொற்களை அடுக்கிக் கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படும் என நினைக்கின்றனர்” (மத். 6:7) என்ற இயேசுவின் எச்சரிக்கையை மனதில் கொள்வோம்.

அமைதியான சந்தத்துடன் ஆண்டவரின் வாழ்க்கை மறையுண்மைகளை, அன்னை கண்ட காட்சிகளைக் கொண்டே தியானித்து செபமாலை செபிப்பதால் ஆழம் கண்டறிய முடியாத அளவுக்கு ஞானப்பலன்கள் மறையுண்மைகளிடமிருந்து வெளிப்படும்.

செபமாலை சமாதானத்திற்கான செபம். இயேசுவே நம் சமாதானம். சமாதானத்தின் இளவரசர். நமக்கு அமைதி அளிப்பவர். செபமாலையில் இயேசுவின் மறையுண்மைகளை தியானிப்பதில் நாம் மூழ்க வேண்டும். இயேசுவே நமக்கு சமாதானம் அருள்பவர். அவரே இரு இனத்தவரையும் பிரித்து நின்ற பகைமை என்ற சுவரை தம் உடலில் ஏற்றுத் துன்பத்தின் வழியாக தகர்த்தெறிந்து ஒன்றுப்படுத்தினார் (எபே. 2:14).

புனிதத்தில் வளர செபமாலையே உண்மையான வழி எனப் புனிதர்கள் கண்டுப் பிடித்துள்ளனர். புனித லூயி தெ மோன்போர்த், புனித பியோ செபமாலை செப வெற்றி வீரர்கள். செபமாலை பக்தியைப் பரப்பும் எவரும் மீட்புப் பெறுவர் என அருளாளர் பார்டோலோ லோங்கோ குறிப்பிடுகிறார்.

செபமாலையின் முடிவில் திருத்தந்தையின் கருத்துக்களுக்காக செபிக்கும்போது நம் அறிவு விளக்கம் விரிவடைந்து திருச்சபையின் தேவைகளுக்காகவும் செபிக்கிறோம். திருச்சபை சலுகையாக வழங்கும் பேறுபலன்களை பெறுகிறோம்.

வரலாற்றில் பலதருணங்களில் கிறிஸ்தவ மறை அடியோடு அழிக்கப்பட, அச்சுறுத்தப்பட்டபோது செபமாலையின் வல்லமை காப்பாற்றியது. அன்னையே இறைவனிடம் பரிந்துபேசி திருச்சபையை மீட்டார் என்றும் பாராட்டப்படுகிறார். இன்று உலக சமாதானம், குடும்பம் இவைகளை காக்கும் பொறுப்பை செபமாலையின் வல்லமையிடம் ஒப்படைப்போம்.

செபமாலை குடும்பத்திற்கான செபம். ஒரு காலத்தில் செபமாலை கிறிஸ்தவக் குடும்பங்களில் மிகவும் நேசிக்கப்பட்ட செபம். செபமாலை, குடும்பங்களை ஒன்று சேர்த்து ஒற்றுமையாக வாழச் செய்தது. இந்த விலைமதிக்க முடியாத மனிதகுல வழிவழி சொத்தை நாம் இழந்து விடக்கூடாது.

குடும்ப செபத்திலும் குடும்பங்களுக்கான செபத்திலும் தொடர்ந்து செபமாலை செபிக்கும் பழக்கத்திற்கு நாம் திரும்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஒன்று சேர்ந்து செபிக்கும் குடும்பம் ஒன்று சேர்ந்து வாழும். நோயுற்றோர், வயதானவர்களுக்குக் கிடைக்கும் ஏராளமான நேரங்களில் செபமாலையே தோழமையுடன் அவர்களுடன் இருக்கிறது.

பிள்ளைகளின் வளர்ச்சி, முன்னேற்றத்தை செபமாலையிடம் ஒப்படைத்துவிடவேண்டும். பிள்ளைகள் பருவ நிறைவு அடைவதில் வளர்ச்சி பெறும்போது அவர்கள் வாழ்க்கையை பெற்றோர்கள் பின்தொடர்வது இதுவரை இல்லாத அளவிற்கு இப்போது கடினமாயிருக்கிறது. மிகவும் முன்னேற்றம் அடைந்த தொழில்நுட்பம், தொலை தொர்புகள்...

15

# தேசிய பொதுநிலையினர் ஞாயிறு - 2018




## கத்தோலிக்க தேசிய பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குனரின் செய்தி

**அருட்பணி. நாயகம் ரோய் கிளரன்ஸ் அடிகளார்**

தேசிய பொதுநிலையினர் ஞாயிறு, "உலகில் இறை தூய்மையின் கண்ணாடியாக வாழ இறைவன் உங்களை அழைக்கின்றார்" எனும் கருப்பொருளின் கீழ் இன்று கொண்டாடப்படுகின்றது. நற்செய்திக்கு சான்று பகர்ந்து இறைவன் மீது உள்ள பிரமாணிக்கத்தை உறுதிப்படுத்த எண்ணற்ற வாய்ப்புக்கள் உள்ளதால், இறைப்பணியாற்றுவதில் பொதுநிலையினரின் அழைப்பானது முக்கியத்துவம் பெறுகின்றது. திருச்சபையின் வாழ்வில் பொது நிலையினரின் திருத்தூது பணியானது ஓர் இறைச்சித்தமாக கருதப்படுகின்றது. சமுதாயத்தில் மக்கள் மத்தியிலிருந்து விலகி வாழ்வதே புனிதமான வாழ்வுக்கான இலகுவான, சிறந்த வழி என்று சில வேளைகளில் பொதுநிலையினர் சிந்திக்கக் கூடும். ஆனால் இன்றைய நாளின் கருப்பொருளானது உலகில் மக்கள் மத்தியில் இறைத் தூய்மையை இழந்துவிடாமல் புனித வாழ்வு வாழ இறைவன் நம்மை அழைக்கின்றார் என்பதை நினைவூட்டுகின்றது.

நாங்கள் இறைவனின் சாயலில் படைக்கப்பட்டிருக்கின்றமையால் அவரின் இறை தூய்மையின் சாயலிலும் பங்கேற்கின்றோம். கடவுள் தூயவராக இருக்கின்றார், எம்மையும் அத்தூய்மைக்கு அழைத்து நிற்கின்றார். "தூயோராய் இருங்கள் ஏனெனில் உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவர்!" (லேவியர் 19:02) என்ற இறைத்தந்தையின் அழைப்பினை அடிப்படையாகக் கொண்டு, "என் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல் நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள்" (மத்தேயு 05:48) என கிறிஸ்துவும் நம் ஒவ்வொருவரையும் அழைத்து நிற்கின்றார். ஆகவே கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் தங்களுடைய வாழ்வில் தூய்மையும், நிறைவும் பெற்று வாழ அழைக்கப்படுகின்றனர். எனவே இறைத்தூய்மையில் வாழவும், அதில் நிறைவு காணவும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

இன்றைய பொதுநிலையினர் ஞாயிறானது உலகில் இறைதூய்மையின் கண்ணாடியாக வாழ நாம் பெற்றுக் கொண்ட அழைப்பினை நினைவூட்டுவதோடு, இவ் இறைத்தூய்மையானது நம் இதயங்களில் பற்றியெறியும் தீப்பொறியான இறைவார்த்தையே என்பதையும் எடுத்துரைக்கின்றது. இறைவனின் மாட்சிமை, தூய்மை என்பவற்றை நாம் தெளிவாக விளங்கிக்கொள்ளும் போது அவ் இறைவனின் புனிதத் தன்மையை மட்டுமல்லாமல் எமது பாவ நிலையையும், தகுதியற்ற நிலையையும் எம்மால் உணர்ந்துக் கொள்ள முடியும்.

"இறைவனோடு நாம் கொண்டுள்ள நல் உறவே புனிதம்" என புனித அவிலா திரேசா தம் அனுபவத்தினூடாக கற்பிக்கின்றார். புனிதத் தன்மை பற்றி ஒரு தெளிவான, பரந்த கருத்தினை அவர் முன்வைக்கின்றார். அதாவது புனிதர்கள், குருக்கள், துறவியர் மட்டுமல்லாமல் சாதாரன பொதுநிலையினராகிய ஆண்களும், பெண்களும் இப்புனிதத்துவத்தை அடைய ஈர்க்கப்படுகின்றனர், அழைக்கப்படுகின்றனர். இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் "திருச்சபை" (Luman Gentium) என்கின்ற அதிகாரத்தில் பொதுநிலையினர் பற்றி குறிப்பிடும் போது, பொதுநிலையினர் அனைவரும் கிறிஸ்துவின் மறையுடலின் உறுப்புக்களாக அடையாளம் காணப்படுகின்றனர். திருச்சபையின் வளர்ச்சிக்காகவும், அதனை புனிதப்படுத்தவும், திருச்சபைக்காக உழைக்கவும் படைத்தவரும், மீட்பருமான இறைவன் வலிமையை தருகின்றார். வத்திக்கான் திருச்சங்கமானது, பொதுநிலையினர் வாழ்வில் திருப்பலி, அருட்சாதனங்கள், செபம், ஒறுத்தல், சகோதர அன்பு, கிறிஸ்தவ விழுமியங்கள், நற்பண்புகள் ஆகியவற்றை தூய்மைப்படுத்தும் கருவிகளாக அடையாளம் காட்டுகின்றது.

இயேசு கிறிஸ்துவில் நாம் ஏற்கனவே தூய்மையாய் இருக்கின்றோம். இறை வெளிப்பாட்டிற்கு விசுவாசத்தோடு பதிலளித்த அனைவரும் இயேசுவோடு இணைக்கப்பட்டிருக்கின்றனர். கிறிஸ்தவராக வாழ்வதென்பது வெறுமனே இறைவனில் நம்பிக்கை வைப்பது மட்டுமல்ல. மாறாக தூய ஆவியானவருக்குள் இயேசுவோடு இணைந்திருப்பதாகும். நாம் நமது குடும்ப வாழ்விற்கு அடுத்தப்படியாக எமது வேலைத்தளங்களில் அதிக பயனுள்ள நேரத்தை செலவிடுகின்றோம். இயேசு கிறிஸ்துவை கண்டு, அவரை அனுபவிக்க விரும்புகிற ஏனைய கத்தோலிக்க மற்றும் கத்தோலிக்கர் அல்லாத சகோதர சகோதரிகளையும் சந்தித்து உறவாட தத்தமது வேலைத்தளம் ஓர் சிறந்த இடமாக அமைகின்றது. பொதுநிலையினர், தாம் தொழில் புரியும் இடங்களில் நன்கு உய்த்துணர்ந்து தைரியத்தோடும், தாழ்மையோடும் தாம் சந்திக்கின்ற சக ஊழியர்களோடு இறை விசுவாசத்தை பகிர்ந்து வாழ அழைக்கப்படுகின்றனர். திருமுழுக்கு பெற்றுள்ள நாம் அனைவரும் திருச்சபையின் திருத்தூது பணியில் பங்குபெற கடமைப்பட்டிருக்கின்றோம். எனவே பொதுநிலையினர் அனைவரும் இன்றைய உலகில் இறைத் தூய்மையின் கண்ணாடியாக வாழ்வதற்கான இறை அழைத்தலை ஏற்று கிறிஸ்துவுக்கு சான்று பகரும் அர்ப்பணமுள்ள விசுவாசிகளாக வாழ முன்வருவோம்.

# 100 வயது கண்ட அருட்சகோதரி பேணடீன்

கடந்த 04.10.2018 இலங்கை வாழ் ஷெவனோவின் சிலுவையின் கன்னியருக்கு ஒரு மகிழ்ச்சியான நாள், நன்நாள், பொன்நாள். காரணம், அன்றைய தினம் எமது சபை அருட்சகோதரியான பேணடீன் தம்புசாமி தனது 100வது பிறந்த நாளை மிகவும் சிறப்பாக கொண்டாடினார். இந்த பிறந்த நாளையொட்டி 06.10.2018 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு எமது சபை இலங்கை பிராந்தியத் தலைவி அருட்சகோதரி பியூமா பீரீசின் ஏற்பாட்டில் எமது சபை அருட்சகோதரிகளின் பங்குபற்றுதலோடு உலகெங்கும் பணியாற்றும் எமது சபை அருட்சகோதரிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஓர் நன்றித் திருப்பலி கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர் மேதகு மெக்ஸ்வல் சில்வா ஆண்டகையின் தலைமையில், அருட்பணி இக்னேஷியஸ் (அவுஸ்திரேலியா அருட்சகோதரி பேணடீனின் சகோதரர்) அருட்பணி லூவிஸ் ஆகியோரும் இணைந்து மேற்படி அருட்சகோதரி வசிக்கும் சிலுவையின் கன்னியர் சபை, "குளோடின் இல்லம்" அம்மந்தொழுவ, சீதுவையில் திருப்பலியை நிறைவேற்றினார்கள். இத்திருப்பலியிலே வெளிநாடுகளில் வசிக்கும் அருட்சகோதரியின் உறவினர்கள், இலங்கை வாழ் உறவினர்கள், எமது சபை அருட்சகோதரிகள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் இணைந்து 100 வயது அருட்சகோதரிக்காக ஆண்டவருக்கு நன்றி கூறினர்.

ஆசியா கண்டத்தில் வாழும் அருட்சகோதரிகளில் 100 வயதைக் கடந்து வாழும் முதல் சகோதரி இவரேயாவார். இவர் தனது நவசந்நியாச காலத்தை இந்தியாவின் அமராவதி - மகாராஷ்ராவில் நிறைவு செய்து 1941ல் தனது முதல் வார்த்தைப்பாட்டையளித்தார். பெற்றோர் இட்ட பெயர் அருள்மேரி. பின்னர் அருட்சகோதரி பேணடீன் ஆனார். இந்தியாவில் தெப்பங்குளத்திலுள்ள எமது திருச்சிலுவைக் கல்லூரியில் தனது முதல் மறைப்பணியை ஆரம்பித்தார். தொடர்ந்து கோவா, கொன்ட்ரோல்மன்ட் மற்றும் தமிழ் நாட்டில் ஆரம்பப் பள்ளி ஆங்கில ஆசிரியராக பணியாற்றினார். எமது மேற்படி சபை பிரான்சில் ஆரம்பித்து, இந்தியாவில் பல இளம் பெண்களை அருட்சகோதரிகளாகக் கொண்டு அர்ப்பணிப்போடு பணியாற்றியது. 1951ல் இலங்கை மண்ணிலே இச்சபை காலடி எடுத்து வைத்தது. மறைப்பணியும் சமூக பணிகளுமே பிரதான பணிகளாக ஆற்றப்பட்டன. எமது நூற்றாண்டு பிறந்த நாள் சகோதரி பேணடீன்,

✷ அக்காலத்திலே எமது ஹிங்குராங்கொட தூய சூசையப்பர் ஆண் பிள்ளைகள் விடுதிக்குப் பொறுப்பாளராகவும்,

✷ படிவத்தை (கண்டி) யிலிருந்த எமது வைத்தியசாலை மருந்தகத்திலும் பின்னர் தையல், பின்னல் நிலைய பொறுப்பாளராகவும்

✷ பேராதெனிய மடத்திலும் பின்னர் ஹெவலொக் மடத்து தலைவியாகவும்

✷ பேலியகொடவில் எமது சிறுவர் பராமரிப்பு நிலைய பொறுப்பாளராகவும் பணியாற்றி

தற்போது துறவற வாழ்விலே 77 வருடங்களைக் கடந்துள்ளார். இவ்வளவு காலம் வாழ்வதன் இரகசியம் என்ன என அவரை வினவினேன் "அது கடவுளின் சித்தம். நான் எந்த நேரமும் செல்வதற்கு ஆயத்தமாக உள்ளேன். அவர் அழைக்கிறார் இல்லை" என்றார். "இந்த வயதில் எமக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்" எனக் கேட்டேன். அவர் இவ்வாறு கூறினார். "இறையுறவும் மனநிறைவும் வாழ்க்கைக்கு அவசியம். செபத்தில் இறைவனுடனான உறவை நான் ஒருபோதும் மறந்ததில்லை. மடத்திற்கு வந்த நாளிலிருந்து எனது செபவாழ்வுக்கு பிரமாணிக்கமாக இருந்துள்ளேன். மன அமைதி என கூறும்போது நான் இளம் சகோதரியாக இருந்த காலத்திலும் வாழ்விலே சந்தித்த சவால்கள், பிரச்சினைகளில் அதிகம் அலட்டிக்கொண்டது கிடையாது. அவற்றையெல்லாம் அமைதியாக ஏற்றுக்கொண்டு இறைவனோடு ஒன்றித்து எனது பணிணை ஆற்றி வந்துள்ளேன். இதனால் நான் என்றும் மகிழ்ச்சியாக இருக்கின்றேன். என்றார். இறுதியாக "இப்போது உங்கள் விருப்பம் என்ன?" என்றேன். "கூடிய



சீக்கிரம் ஆண்டவரிடம் செல்ல வேண்டும்" என்றார். ஆண்டவர் இவருக்களித்த இந்த 100 வருடங்களுக்காக சிறப்பாக நோயற்ற வாழ்வைத் தந்துள்ளமைக்காக அவருக்கு நன்றி கூறுவோம்.

100 வருடங்கள் வாழ வேண்டுமா? அவ்வாறாயின் மறக்க வேண்டாம்.

❊ இறையுறவு

❊ மன அமைதி

**அருட்சகோதரி ரஞ்சி**
**போல்துரை, ஹெவலொக் வீதி, கொழும்பு 05**



## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

163

**திருமணத்தை நிறுவிய இறைவன், திருமண உடல் உறவுக்கு ஏற்றவகையில் ஆண் பெண் இருபாலரது உடல்களையும் படைத்துள்ளார். ஆகவே, கடவுள் குறித்த நோக்கத்துக்காக கடவுளின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு தம்பதிகள் உடல் உறவு கொள்வது புனிதமான செயல்முறையே**



# கிறிஸ்தவ மணவாழ்வில் பாலுறவு

கடவுள் திருமணத்திற்காகப் பாலுணர்ச்சியை மனிதனிடத்தில் வைத்தார். காதல் பிறந்து அன்பு வளர்வதற்கும், தியாக வாழ்வுக்கும், குழந்தை கருக்கொள்வதற்கும், உறவு வளர்வதற்கும் பால்கவர்ச்சி தூண்டுதலாக உள்ளது. இறைவன் எல்லாவற்றையும் ஒரு புனித நோக்கோடு படைத்தார். மனிதனை ஆணும் பெண்ணுமாகப் படைப்பதற்கும் ஒரு குறிப்பிட்ட நோக்கம் இருந்தது. நம்மை ஆண், பெண் எனப் பாகுபடுத்துகிற பால், கடவுளுடைய படைப்பில் புனிதமான உணர்ச்சியாகவும், கடவுளுடைய கைபட்டு புனிதமான கவர்ச்சியாகவும் உள்ளது. திருமணத்திற்காக உரியதும், நிலையான திருமண வாழ்வுக்கென்றே தரப்பட்டதுமான இப்பாலுணர்ச்சியை மதிப்புக்கெடாத வகையில் அழகும் புனிதமும் மாறுபடாத முறையிலே பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் இறைவனது படைக்கும் தொழிலில் நாமும் பங்கு கொள்கிறோம். கடவுளின் படைப்பிற்கு அழகோடு அழகு சேர்த்து இறைவனை ஆராதிக்கும் புனித வழிபாடாக தம்பதியினர் இதை உயர்த்துகின்றனர். உடல், மன உள்ள வளர்ச்சி அடையாத இளைஞரும் வாலிபரும் தம்மில் எழுந்து தம்முள் வளர்ந்து வரும் பால் உணர்ச்சியின் புனித நோக்கத்தை அறிந்து, அதை மதித்தவராயிருந்தால் திருமணம் முடிக்கும் வரை அவ்வுணர்ச்சியைப் புனிதம் கெடாமல் பாதுகாப்பார்கள். அற்ப இன்பத்துக்காகக் கற்பின் அழகைக் கெடுத்துக் கொள்ளாமலும், பாலுணர்ச்சியைப் பக்குவமாகவும் கண்ணியமாகவும் காத்து வருவர். திருமண காலம் வரை பாதுகாத்து மண வாழ்வில் மட்டும் பயன்படுத்தி, இறைவனுடைய பரிசுத்த நோக்கத்தோடு ஒத்துழைத்து அதன் பயனை அனுபவிப்பர். பால் இன்பத்தைத் திருமணத்திற்குப் புறம்பே பெற முயற்சி செய்பவர்கள், இறைவனின் திருச்சித்தத்தை மீறுகிறார்கள். பாலுணர்வின் புனிதத்துவத்தை வீணாக்கி அதன் நோக்கம் கடவுளின் நற்திட்டத்தோடு சேர்ந்து நிறைவேறாதபடி தடுக்கிறார்கள். திருமணம் முடித்தவர்களும் பால் இன்பத்தினை அதற்குரிய நோக்கத்தோடு தேடாமல், அதைப் பெறும் இயற்கையான முறைக்கு மாறுபட்ட விதத்தில் தேடும் பொழுது அன்பின் அடையாளமாகவும் புனிதமான மனித உறவின் சான்றாகவும் இருக்க வேண்டிய பாலுறவை, வெறும் உடல் இச்சையைத் தணிக்கும் சிற்றின்பச் சேர்க்கையாகவும், மனம் கலங்கியவன் சிந்தனையில்லாமல் புரியும் சிறுமையான இழிசெயலாகவும் மாறிவிடுகிறது.

மனித உடலும் அதிலுள்ள ஒவ்வொரு பகுதியும் இறைவனால் படைக்கப்பட்டது. ஆகவே அவ்வுடலில் கெட்டது இல்லை. கிறிஸ்தவர்களின் நம்பிக்கையின்படி திருமுழுக்கின்போது மனித உடலே கடவுள் வாழும் ஆலயமாக மாறுகிறது. கடவுள் குறித்த நோக்கத்துக்கு மாறாக மனித சரீரம் பயன்படும் போது மட்டும்தான் அது இழிசெயலாகத் தாழ்வடைகிறது.

திருமணத்தை நிறுவிய இறைவன், திருமண உடல் உறவுக்கு ஏற்றவகையில் ஆண் பெண் இருபாலரது உடல்களையும் படைத்துள்ளார். ஆகவே, கடவுள் குறித்த நோக்கத்துக்காக கடவுளின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு தம்பதிகள் உடல் உறவு கொள்வது புனிதமான செயல்முறையே. திருமணத்திற்கே உரிய உடல் உறவு சார்ந்த தம்பதிகளின் அந்நியோன்னிய செயல்கள், அவ்வுறவுக்கு ஒன்றி உயர்ந்த செயல்கள், அவ்வுறவோடு ஒன்றாகப் பிறக்கும் செயல்கள் முதலியவற்றில் குற்றமோ, பாவமோ இல்லை. இறைவன் மனப்பூர்வமாக அதை அனுமதிக்கிறார். அதனால் மனிதன் மதித்துப் போற்றப்பட வேண்டிய புனிதமான செயல்களில் ஒன்றாக அதை உயர்த்தியுள்ளார்.

திருமண வார்த்தைப்பாட்டில் தம்பதிகள் இருவரும் ஒருவர் ஒருவருக்குத் தம்மையே உரிமைப் பொருளாக வழங்குகிறார்கள். ஆகவே திருமண உடல் உறவுக்கு ஒருவர் ஒருவர்மேல் கொள்ளும் உரிமையைப் பெற்றுக்கொள்கின்றனர். இவ்வுரிமைப் பரிமாற்றத்தில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று இல்லை. இருவரும் சரிநிகர். கணவனின் உடல்மேல் மனைவிக்கு முழு உரிமையுண்டு. அதேபோல் மனைவியின் உடல்மேல் கணவனுக்கு முழு உரிமையுண்டு. இவ்வுரிமையைச் சுயநலத்திற்காகவோ, சரியான காரணம் இன்றியோ மறுப்பது திருமணத்தின்போது கொடுத்த வாக்குறுதியை மறுதலிப்பதாகும். அநீதியாகும். பிறருடைய உரிமையைப் பறித்து அபகரிப்பதாகும். இருவரும் ஒருமித்து உடலுறவு கொள்ள கடவுளிடமிருந்து பெற்றுள்ள உரிமைநிலை குறிப்பிட்ட காலத்துக்கோ அல்லது ஆயுள் முழுவதுமோ பயன்படுத்துவதில்லை என்று முடிவு செய்து கொள்ளலாம். ஆனால் இருவரும் செய்யும் தீர்மானத்தில் அவர்களது ஒழுக்க வாழ்வோ ஆன்மீக வாழ்வோ பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அருட்சாதனத்தின் மூலம் மனிதர்கள் கடவுளைக் கிறிஸ்துவில் சந்திக்கிறார்கள். கிறிஸ்து திருச்சபையோடு கொண்டுள்ள ஐக்கிய உறவை சின்னப்பர் புரிந்து கொண்டு கணவன் மனைவிக்கு ஒப்பிடுகிறார். கணவன் மனைவி திருமணத்திற்கு உரிய உடல் உறவில் ஒன்றாகி ஒரே உடலாக இருப்பதை விளக்க திருச்சபையுடன் கிறிஸ்து கொண்டுள்ள உறவை விளக்குகிறார்.

இருவேறு உடல்களை ஒன்றாக இணைப்பதற்கும், வெவ்வேறு நபர்களுடைய மனத்தையும், இதயத்தையும் ஒவ்வொருவரும் அவரவர் தனித்தன்மைகளையும் ஆளுமைச் சிறப்புக்களையும் இழந்து விடாத வகையில் ஒரே அளவாகச் சேர்ப்பதற்கும், கடவுள் மனிதனுக்கு வழங்கிய புனிதமான சாதனமே கணவன் மனைவியது உடல் உறவு. கடவுள் மூன்று ஆட்களாக...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

**பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா**
**உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.**



# எம்மையே நாம் கேட்போம்

மனிதர்களாகிய நாம்,
திருக்குடும்பமாய் வாழ
வேண்டியவர்கள். நாம்,
ஏன் தெருக்குடும்பமாய்
வாழ்கிறோம்.......?
எம்மையே நாம்
கேட்போம்.

வாழ்வை நல்லதாய்
செதுக்க வேண்டிய
நாம், ஏன் நரகமாய்
சிதைக்கிறோம்....?
வாழ்வை செதுக்காமல்
ஏன் சிதைக்கிறோம்.....?
எம்மையே நாம்
கேட்போம்.

பண்பட்ட வசனம்
பேசாது, ஏன் புண்பட்ட
வசனம் பேசுகிறோம்.....?
அழகிய வசனம் பேசாது,
ஏன் அழுகிய வசனம்
பேசுகிறோம்.....?
எம்மையே நாம்
கேட்போம்.

பல் துலக்குகிறோம்.
ஆனால், ஏன்
சொல் துலக்கு-
வதில்லை......?
முகம் கழுவுகிறோம்.
ஆனால், ஏன்
அகம் கழுவுவ-
தில்லை......?
எம்மையே நாம்
கேட்போம்.

வெளியே மட்டும்,
பகட்டு வாழ்வு, ஆனால்
உள்ளே அது, வறட்டு
வாழ்வு.
கருணை வசனம்
பேசாது, ஏன் காரமான
வசனம் பேசுகிறோம்....?
ஏன் கோரமான வதனம்
காட்டுகிறோம்....?
எம்மையே நாம்
கேட்போம்.

ஏன் ஏழைக்கு
எம்மிடம் உள்ளதைக்
கொடுக்காமல்,
ஏழையிடம்
உள்ளதையும்
கெடுக்கிறோம்......?
ஏன் ஏழைக்கு சோறு
போட, பின்னிற்கிறோம்.
அயலவருக்கு
சேறு பூச,
முன்னிற்கிறோம்.......?
எம்மையே நாம்
கேட்போம்.

பிறரைத்தட்டிக்
கொடுக்காமல்,
ஏன் உள்ளதையும்
தட்டிப் பறிக்கிறோம்......?
ஏன் சரியாக
சிந்திக்காமல், சரிவை
சந்திக்கிறோம்......?
அயலவருக்காய்,
ஜெபிக்க வேண்டிய
நாம், ஏன் அயலவரை
சபிக்கிறோம்......?
எம்மையே நாம்
கேட்போம்.

சத்தியத்தை செருப்பால்
மிதிக்கிறோம். அல்லது
நெருப்பால் எரிக்கிறோம்.
ஏன் இப்படிச்
செய்கிறோம்.....?
ஏன் அற்புதமான
வாழ்வை,
அற்பத்தனமாய்
வாழ்கிறோம்.
அழகிய பொலிவு
இழந்து, இறைவனின்
அருட் பொழிவும்
இழந்து, ஏன்
அவதிப்படுகிறோம்....?
எம்மையே நாம்
கேட்போம்.

சொத்து - சுகத்தை,
சம்பாதிக்க, சொந்த
சகோதரத்துடன்
சண்டையிடுகிறோம்.
சொந்தக்காரர்களையும்
சந்தையில் விற்கிறோம்.
சுய கௌரவத்தையும்
சந்தி சிரிக்க வைக்கி-
றோம். சுய நலத்தில்
சிக்கி, சுரண்டல்
செய்யும், சதிகாரராய்,
சந்தர்ப்பவாதிகளாய்,
சில்லறை சலுகைக்காய்,
ஏன் சீரழிந்து
சிதைகிறோம்......?
எம்மையே நாம்
கேட்போம்.

அற்ப சலுகை
எடுப்பதற்காய், ஏன்
எடுப்பார் கைப்பிள்-
ளையாய்,
ஏமாறுகிறோம்.....?
எட்டாத கனிக்கு
ஏன் கொட்டாவி
விடுகிறோம்....?
எட்டாத நிலையில்
ஏன் அயலவர் சொத்தை
ஏப்பம் விடுகிறோம்.....?

வெறும் காகிதத்தாளில்
கப்பல் ஓட்டுவதாய் ஏன்
கனவு காண்கிறோம்......?
உண்மையுள்ளவர்
நாம், என்று, ஏன்
உப்புச்சப்பில்லாத
உரையாடல் பல
உளறுகிறோம்......?
எம்மையே நாம்
கேட்போம்.

**ஆக்கம்:**
**பென்ஜமின் சோமநாதர்**



# இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

## பொதுக்காலத்தின் 29வது ஞாயிறு
## உலக மறைபரப்பு தினம் (21.10.2018)

**» பேதுரு «**

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 29வது வாரத்தில் கால்பதிக்கும் அன்பின் இறைநெஞ்சங்களே! இன்றைய உலகை நாம் உற்றுநோக்கும்போது ஒவ்வொரு நாடுகளிலும் தலைமைப் பதவிக்கான போட்டிகள் நடைபெறுவதைப் பார்க்கின்றோம். கேட்கின்றோம். இச்சூழலில் இன்றைய இறைவார்த்தைகள் உண்மையான தலைமைத்துவத்தை எமக்கு விளக்கி நிற்கின்றன. பிறக்கின்ற ஒவ்வொருவரும் தலைவனாகி மற்றவர்களை அடக்கி ஆள வேண்டும் என எண்ணுகின்றார்கள். இதனால்தான் எங்கும் பிரச்சினைகளைப் பார்க்கின்றோம். ஒரு நல்ல தலைவனுக்கு உதாரணமாக நாம் இயேசுவைப் பார்க்கின்றோம். அவருக்கு இரண்டு பக்கங்கள் இருந்தன. ஒன்று அவரது புதுமைகள், அற்புதங்கள், அதிசயங்கள், வல்லமைகள் அடங்கியவை. மற்றது அவருடைய துன்பம், பாடுகள், வேதனைகள் கொண்ட பக்கம். அவரிடம் தாழ்ச்சி இருந்தது. அதனால் அவர் மாட்சி பெற்றார். பணிவு இருந்தது. அது அவருக்கு உயர்வைத் தந்தது. எனவே தலைவராக விரும்புவோர் பணியாளராக மாறட்டும். இதனால் உலகில் அமைதி தோன்றட்டும். இன்று நாம் உலகமறைபரப்புக்காகவும் மன்றாடுவோம்.

**முதல் வாசகம் : எசாயா 53:10-11**

தம் உயிரைக் குற்றநீக்கப் பலியாகத் தந்தார். எனவே தம் வழிமரபு கண்டு நீடுவாழ்வார்.

**பதிலுரைப் பாடல் :**

உம்மையே நாங்கள் நம்புவதால் உம் பேரன்பு எம்மீது இருப்பதாக!

**இரண்டாம் வாசகம் : எபி 4:14-16**

அருள்நிறைந்த இறை அரியணையைத் துணிவுடன் அணுகிச் செல்வோமாக.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா! மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாக தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார் அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : மாற் 10:35-45**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

தனது பணிவினால் மற்றவர்களுக்கு முன்மாதிரி காட்டும் திருஅவையையும், திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலை ஊழியர் யாவரையும் நிறைவாக ஆசீர்வதித்து அவர்களுக்கு வேண்டிய உடல், உள, ஆன்ம பலத்தை அளித்து வழிநடத்தியருள வேண்டுமென்று...

எமது நாட்டின் தலைவர்களும் அதிகாரிகளும் தலைமைத்துவப் பண்பின் விழுமியங்களை உணர்ந்த-வர்களாக, தலைவன் என்பவன் பணியாளன் என்ற உண்மையை ஏற்று துன்பங்களைத் தாங்கி பிரமாணிக்கமுடன் மக்கள் பணியாற்றிட வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

இயேசுவின் பிள்ளைகளாகிய நாமனைவரும் தாழ்ச்சி மாட்சி தரும் பணிவே உயர்வுதரும் என்பதை உணர்ந்து தாழ்ச்சியுடன் வாழவும், கடவுளின் திட்டத்தை தேர்ந்து தெளிந்து அதன்படி நடக்கவும், இயேசுவைப் போன்று துணிவுடன் வாழக் கற்றுக்கொள்ளவும், இழப்பதில் தான் பெறுவோம் என்பதில் நம்பிக்கை கொள்ளவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

## பொதுக்காலத்தின் 30வது ஞாயிறு
## (28.10.2018)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 30வது ஞாயிறு தினத்தில் இறைவனுக்கு நன்றிப்பலி செலுத்த வந்திருக்கும் இறை நெஞ்சங்களே! நமது வாழ்க்கை நம்பிக்கை என்னும் அச்சாணியைக் கொண்டுள்ளது. “அச்சானி இல்லாத் தேர் முச்சானும் ஓடாது” என்பது முதுமொழி. இன்றைய நற்செய்தியில் பார்வையற்ற பர்த்திமேயு நம்பிக்கையினால் பார்வை பெற்ற சம்பவத்தைப் பார்க்கின்றோம். இன்னும் நம்பிக்கையுடன் இயேசுவிடம் வருபவர்கள் நலமடைந்து வருகின்றனர். “சுமை சுமந்து சோர்ந்-திருப்போரே எல்லோரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” என்கிறார் இயேசு. வாழ்நாள் முழுவதும் இருளில் வாழ்ந்த பர்திமேயுவின் வாழ்வில் இயேசு ஒளியேற்-றினார். எரேமியா இறைவாக்கினரின் வாக்கும் இங்கே நிறைவேறியது. கடவுள் கனிவோடு நமது வேண்டுதல்களுக்கு செவிசாய்க்கின்றார். நாம் வேண்டுவது நன்மை தரக்கூடியதாக வேண்டும். கடவுள் எதிர்பார்ப்பது விசுவாசம். “ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர் பெறுபேற்றோர்” நமது நிலை என்ன? சிந்தித்துச் செயல்பட பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : எரே 31:7-9**

பார்வையற்றோருக்கும், கால் ஊனமுற்றோருக்கும் ஆறுதலளித்து அவர்களை நான் அழைத்து வருவேன்.

**பதிலுரைப் பாடல் :**

ஆண்டவர் நமக்கு மாபெரும் செயல் புரிந்துள்ளார்.

**இரண்டாம் வாசகம் : எபி 5:1-6**

மெல்கிசதேக்கின் முறைப்படி நீர் என்றென்றும் குருவே.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா மீட்பராகிய கிறிஸ்து இயேசு சாவை அழித்து அழியா வாழ்வை நற்செய்-தியின் வழியாக ஒளிரச் செய்தார். அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மாற் 10:46-52**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முழுமையான இறைநம்பிக்கையை மக்கள் மனங்களிலே உருவாக்கி அவர்களை நிலைவாழ்விற்கு அழைத்துச் செல்ல அயராது உழைக்கும் திருஅவை-யையும், அதன் பணியாளர்களையும் ஆசீர்வதித்து வழிநடத்தவும் நம்பிக்கையற்றோரின் நம்பிக்கை நட்சத்-திரமாக திருஅவை விளங்கவும் வேண்டிய வரங்களை பொழிந்தருள வேண்டுமென்று...

விசுவாசத்தின் கரங்கள் தட்டும்போது இரக்கத்தின் கதவுகள் திறக்கப்படுகின்றன என்பதை உணர்ந்தவர்களாக உள்ளம் உடைந்தோர்க்கும், ஊனமுற்றோருக்கும், நோயாளிகளுக்கும் இரக்கம் காட்டி, எம்மால் இயன்ற உதவிகள் புரிந்து வாழவும் வேண்டிய நல்ல உள்ளத்தை எமக்குத் தந்தருள வேண்டுமென்று...

நம்பிக்கை எனும் மருந்து நலம்தரவல்லது என்பதை இயேசு பல சந்தர்ப்பங்களில் எண்பித்திருக்கி-ன்றார். பர்த்திமேயு நம்பினான் பார்வை பெற்றான். எமது அகக் கண்கள் திறக்கப்படவும், அடுத்திருப்பவரை, வலுவிழந்தோரை, ஏழைகளை, உதவிதேவைப்படு-வோரை, அன்புடன் அணுகி ஆதரிக்கவும் அருள்புரிய வேண்டுமென்று...

# செபமாலை
# ஜெயமாலை



இறையாசீரை,
நிறையாசீரை,
திருப்பொழிவாய்,
அருட்பொழிவாய்,
ஆன்மாவில்
ஊற்றுவதற்கு,
அன்பினால்
ஊட்டுவதற்கு,
திருச்செபமாலை
தினம் தினம்
எம்மைத்திடப்படுத்துமே

அருட்கடலில் அள்ளி
எடுத்த ஆன்மாவின்
முத்து மாலையாம்
செபமாலை என்றும்
எமது ஜெயமாலையே.

உலகப்போக்கில்
ஊனக்கண்ணால்
பார்த்திடாதீர் - அதை
ஞானக்கண்ணால்
பார்த்திடுவீர். பின்
நாளும் அதன் நலனை
பெற்றிடுவீர்.

ஊனக்கண்ணால்
பார்த்தால்,
உண்மை
புரியாது
ஞானக்கண்ணால்
பார்த்தால் உண்மை
துலங்கும் - விளங்கும்.

ஊனக்கண் பார்வை -
அது,
இருட்டு வாழ்க்கை
குருட்டு வாழ்க்கை,
ஞானக்கண் பார்வை -
அது, நிறை வாழ்க்கை,
நிலை வாழ்க்கை.

செபமாலை - அது
வெற்றியின் பொன்மாலை,
விலையேறப்பெற்ற-
வாழ்வின்
வசந்த மாலை.

செபமாலை - அது
அருட்திருமாலை - எமது
ஞானமாலை,
அதுவே மரியன்னைக்கு
மகிமையின் பொன்மாலை
- புகழ் மாலை.
அதை நாளும்
சொல்வதால் நமக்கு
கிட்டும் ஜெயமாலை

# மறைபரப்புப்பணி
## நிறை வாழ்வின் பணி

மறைபரப்புப்பணி
- அது அன்பின்
பணி,
மகிழ்ச்சியின்
பணி
நிறை வாழ்வின்
பணி,
நிலை
வாழ்வின் பணி,
அப்பணி
எமது
நற்செய்திபணி.

இயேசுவின்
வழிகளை,
இரக்கத்தின்
மொழிகளை,
உலகிற்கு
முழக்கமிட,
ஊழியம்
செய்யும் பணி,
இதுவே என்றும்
எமது நற்செய்திபணி.
உலகின் சாட்சியாய்,
உண்மையின் மாட்சியாய்
- வந்த
உலக மீட்பரின்
வார்த்தைகளை,




உள்ளங்களில்
விதைக்கும் உன்னதபணி,
இதுவே என்றும்
எமது நற்செய்திபணி.
பாவ இருளில்
பரிதவிக்கும் -
பூமி மாந்தரை
ஒளிர்விக்க, உதவிக்கரம்
நீட்டும் உன்னத இறை
பணி, இதுவே என்றும்
எமது நற்செய்திபணி.

சாவின் இருள் நீங்க,
சாட்சிய வாழ்வு
மேலோங்க,
சகலருக்கும் செய்தி
சொல்ல,
சமத்துவம் எங்கும் மலர,
இதுவே என்றும்
உழைக்கும் பணி
எமது நற்செய்திபணி.

பார் எங்கும் சென்று,
படைப்பு முழுமைக்கும்,
இறையாட்சியை
முழக்கமிட
அருள் வார்த்தை
சொல்ல,
இதுவே என்றும்
எமது நற்செய்திபணி.
பணி செய்வோம்
மறைபரப்புவோம்

**ஆக்கம்: பென்ஜமின் சோமநாதர். தெஹிவளை.**

# “அன்பினால் நற்செய்தியை மலர

## உலக மறைபரப்பு தினம்

# பரிசுத்த பாப்பரசரின் செய்தி



என் அன்பார்ந்த இளம் பருவங்களே நாம் எல்லோரும் ஒன்றிணைந்து கிறிஸ்துவின் நற்செய்தியை எல்லா மக்களுக்கும் எடுத்துச்சொல்வோமாக. இறைவன் எனக்கு தெரிவிப்பதை, நான் உங்கள் எல்லோருடனும் பகிர்ந்து கொள்ள விருப்புகின்றேன் (REDEMPTORIS MISSIO 2 ) இதில் பரிசுத்த பாப்பரசர் 2ம் அருளப்பர் தன் அன்பையும் அக்கறையையும் உங்கள்மேல் வைத்துள்ளார் என்பதை அறிகின்றோம்.

வருகின்ற ஜப்பசி மாதம் உரோமையில் மகாநாடு ஒன்று நடைபெறவுள்ளது, இந்த மறைபரப்பு மாதமானது எமக்கு ஒரு சந்தர்ப்பத்தினை தந்துள்ளது விசுவாசத்தின் ஒளியினைப்பற்றி முழுமையாக விளங்கிக்கொள்ளவும் அந்த விசுவாசத்தின் ஒளியில் இயேசுகிறிஸ்து இளைஞர்களுக்கும், கிறிஸ்தவ குழுக்களுக்கும் என்ன சொல்கின்றார் என்பதையும் அறியவே.

### வாழ்க்கை ஒரு மறைபரப்பு

ஒவ்வொரு ஆணும், பெண்ணும் ஒரு மறைபரப்பாளர், இதுவே இவ்வுலகிற்கு தேவையாகவுள்ளது. எமது இதயத்தில் ஈர்க்கப்படுவதற்கும், அனுப்பப்படுவதற்குமான இரண்டு இயக்கங்கள் உண்டு. சிறப்பாக இளம் வாலிபரான நாம் அன்பின் உட்புற சக்திகளை உணர்கின்றோம். இவை எமது எதிர்கால வாழ்விற்கான வழிகாட்டுதலையும், வாக்குறுதிகளையும் பற்றிக் கொண்டுள்ளது. வேறு எவரையும் விட இளைஞர்கள் நம்மைப்பற்றி கவலைப்படுவதையும், நம்மை ஈர்க்கும் சக்திகளையும் உணர்கின்றோம். மகிழ்சியுடன் வாழ்வதற்கு உலகத்திற்கான எங்கள் பொறுப்பு ஒரு பெரிய சவாலாக உள்ளது. இளைஞர்களின் திறமைகளையும், பலவீனங்களையும் பற்றி நான் அறிந்திருக்கின்றேன். என் இளமையினையும் என் குடும்பத்தினையும் திரும்பி பார்க்கும் போது, ஒரு நல்ல எதிர்காலத்திற்கான என் நம்பிக்கையின் வலிமை என் நினைவிற்கு வருகின்றது. எமது சொந்த விருப்பத்தினால் நாம் இந்த உலகில் இல்லை என்ற உண்மையை நமக்கு முன்னால் வைத்து நம்மை உருவாக்கும் ஒரு முயற்சியை நாம் அனைவரும் உணர அழைக்கப்படுகின்றோம்.

### நாம் யேசுகிறிஸ்துவை அறிவிக்கின்றோம்.

(மத்:10:8, தி.ப3:6) திருச்சபை பெற்றுக்கொண்ட அனைத்தையும் அது இலவசமாக உங்களுக்கு போதிக்கின்றது. இளைஞர்களாகிய நீங்கள் இந்த பூமியில் வாழ்வதற்கு அர்த்தம் தரும் வழியையும் உண்மையையும் உங்களுடன் பகிர்ந்துகொள்ள முடியும். நம்மிடமிடமிருந்து இறந்து உயிர்-தெழுந்த இயேசுகிறிஸ்து நம் சுதந்திரத்திற்காக வேண்டுகோள் விடுக்கின்றார். தகவலை தேடி கண்டு படித்து நிறைவேற்றுகின்றார். அன்புள்ள இளைஞர்களே கிறிஸ்துவையும் அவருடைய திருச்சபையினைப் பற்றியும் பயப்படாதீர்கள்!. அங்கு வாழ்வின் மகிழ்ச்சியை கொடுக்கின்ற புதையல் ஒன்றினை கண்டெடுக்க முடியும். என் சொந்த அனுபவத்திலிருந்து இதை என்னால் சொல்ல முடியும். விவாசத்திற்கு நன்றி, எம் கனவுகளின் உறுதியான அத்திவாரத்தையும், பலத்தையும் உணர முடியும். அதிகமான சகோதர சகோதரிகளின் முகத்தில் பெரும் துயரத்தினையும், வறுமையினையும் நான் கண்டேன். அத்தோடு இயேசுவிற்காக செயற்படுபவர்களை சாத்தான் அவரின் அன்பில் இருந்து பிரிக்க முற்படுகின்றான் அநேகமான ஆண்கள், பெண்கள் பல இளைஞர்கள் தங்களை தாங்களே தியாகம் செய்திருக்கின்றார்கள், சில சமயங்களில் மறைசாட்சிகளாகியும் இருக்கின்றார்கள், இது அவர்கள் மறைபரப்பின் மேலும் தங்களின் சகோதர, சகோதரிகளின் மேலும் கொண்ட அன்பினாலேயே ஆகும். சிலுவையின் ஊடாக நாம் கற்றுக்கொள்வது உண்மையான தியாகமே .(1கொரி: 1:17-25) நற்செய்தியின் மறைபரப்பே வாழ்வின் வார்த்தை. (யோவான்:3:16) இறை அன்பினால் நெருப்பினை எரியச் செய்யவோம். அதன் அன்பால் கழுவப்படுவோம். (2கொரி5:14) கடவுளின் பரந்த எல்லைகளை நமக்கு திறந்து வைத்திருக்கும் புனிதர்களின் பள்ளியில் நாமும் அழைக்கப்படுகின்றோம். “என் இடத்தல் கிறிஸ்து இருந்தால் அவர் என்ன செய்வார்”?.

### பூமியின் எல்லைகளுக்குள் விசுவாசத்தினை திருப்புதல்

நீங்கள் இளம் நண்பர்கள், உங்கள் திருமுழுக்கின் வழியாக திருச்சபையின் உறுப்பினர்களாகி விட்டிர்கள், அனைவருக்கும் நற்செய்தியை கொண்டு செல்வதற்கான பாரிய பணியை நாங்கள் பெற்றிருக்கின்றோம். நீங்களே வாழ்க்கையின் வாசலின் திறவுகோள். திருவருட்சாதனங்களினால் நமக்கு அருளப்பட்ட விசுவாசத்தின் மூலம் தலைமுறை தலைமுறை தோறும் ஞானமும் அனுபவமும் எதிர்காலத்தை நோக்கிய சாட்சியாகவும், ஊக்கமாகவும் இருக்கின்றது. இளைஞர்களின் புத்துணர்ச்சியும், உற்சாகமும் மற்றும் ஆர்வமும் அவர்களின் பயணத்திற்கு எதிர்பார்ப்பினை கொடுக்கின்றது. வாழ்வின் பல்வேறு கட்டங்களின் கவலையில் திருச்சபையின் நோக்கம் தலைமுறைகளை பிரித்து வைக்கின்றது. கடவுள் மீதுள்ள விசுவாசமும், அயலான் மீதுள்ள அன்பும் ஆழமான ஒற்றுமையின் ஆதாரமாக இருக்கின்றது.

விசுவாசத்தின் இந்த பரிமாற்றம் திருச்சபையின் பணியின் இதயம், அன்பின் தொற்று நோயாக உருவாகின்றது. அங்கே மகிழ்ச்சியும், உற்சாகமும், வாழ்க்கையில் ஒரு புதிய அர்த்தமும், விளக்கமும், நிறைவேற்றுதலும் காணப்படுகின்றது. விசுவாசத்தை பரப்புதல் என்பது “ஈர்க்கப்படுதல்” அன்பினால் மற்றும் திறந்த விரிவாக்கப்படும் இதயங்களுக்கான அழைப்பு. அன்பிற்கு வரம்புகளை வைக்க முடியாது ஏனென்றால் அது மரணத்தினைப் போல் வலுவானது .(இனிமைமிகு பாடல்: 8:6) அந்த விரிவாக்கம், சந்திப்பு, அது விசுவாசத்திலருந்து வெகுதுாரத்தில் உள்ள அனைவருக்கும் அன்பளிப்புடன் பகிர்ந்து கொள்வதையும், அதைப் பொருட்படுத்தாமலும் விரோதமாகவும் அதை எதிர்க்கலாம்...

தொடர்ச்சி 15ம் ப

### எமது குடுப்பத்தின் ஆன்மீக அன்பளிப்பு

திருப்பலி ....... திவ்விய நற்கருணை....... பிறரன்புச் செயல்....... செபமாலை....... தியாகச் செயல்கள்...... பெயர் ....... முகவரி....... நன்கொடை ரூபா...... காசோலை எனில் அதனை “Pontifical Mission Societies” எனக் குறிப்பிடவும். விசுவாச மறைபரப்புச் சபையின் அங்கத்தவராவதற்கு நீர் செய்ய வேண்டியது மூவாயிரம் ஆண்டில் இயேசுநாதரின் நற்செய்தியைக் கேட்டு மக்கள் வாழ்வைப் பெற்றுக்கொள்ள, அச்செய்தியை பரப்ப மன்றாடுவதும், தியாகங்கள் செய்வதும், பண உதவி செய்வதுமேயாகும்.

மறைபரப்பு ஞாயிறன்று நீங்கள் உவந்தளிக்கும் உதவி உலகில் அதிக தேவை யாருக்கோ அவர்களுக்கே பகிர்ந்தளிக்கப்படுகின்றதுஅயரா முயற்சியே அவசியம் தேவைப்படுகின்றது. மறைபரப்பு ஞாயிறன்று மட்டுமன்றி, வருடம் முழுவதும் உங்களால் இயலுமான பண உதவியை செய்யுங்கள்

### 2017 ஆம் ஆண்டு
### உலக மறைபரப்பு ஞாயிறு தின நிதி சேகரிப்பு

| மறைமாவட்டம் | தொகை |
|---|---|
| அனுராதபுரம் | 100,050.00 |
| பதுளை | 117,820.00 |
| சிலாபம் | 562,657.00 |
| கொழும்பு | 2,802,005.00 |
| காலி | 151,770.00 |
| யாழ்ப்பாணம் | 1,050,000.00 |
| கண்டி | 445,192.00 |
| குருநாகல் | 412,340.00 |
| மன்னார் | 5,896,557.00 |
| இரத்தினபுரி | 210,201.00 |
| மட்டக்களப்பு | 194,990.00 |
| திருகோணமலை | 60,000.00 |
| தொகை | 12,003,582.00 |

தேசிய இயக்குனர்
பாப்பிறை மறைபரப்புச் சபைகள்,
19, பல்கம் இடம்,
கொழும்பு - 08.
Tel/Fax : 0112685673
email : ndpmssrilanka@gmail.com /
website : www.pontificalmission.lk

# அன்பினால் நற்செய்தி

கடவுள் அன்பாய் இருக்கின்றார் என்று திருத்தூதர் யோவான் தன்னுடைய திருமடலில் குறிப்பிடுகிறார். அன்பு என்ற மூன்றெழுத்தின் சக்திதான் அன்று இவ்வுலகை மீட்க மனுவுரு எடுத்தது. அது இனம், மதம், மொழி, சாதி கடந்து வருவது இதற்கு ஆழம், நீளம், அகலம் கிடையாது. இப்படியாக அன்பின் பெருமையை நாம் பேசும் போது இன்று இந்த உலகம் அன்பில்லாத வரண்ட நிலம் போல உள்ளது. நவீன விஞ்ஞான உலகத்தில் எல்லா வசதிகளும் கிடைத்து எல்லாமே வீட்டிற்குள் கிடைக்கும் அளவிற்கு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. உலகையே உள்ளங்கைகளில் அடக்கும் தொலைபேசிகள், கணனிகள் வருகை தந்ததால் உள்ளங்கைகளில் இந்த உலகை சுற்றிவரலாம் ஆனால் எம்முள் உறையும் உள்ளத்தை தொடுவதற்கு யாருமே இல்லாமல் போய்விட்டது. இதனால் இன்று மனிதன் தனிமையில் தவித்து மனஉளைச்சலுக்கு ஆளாகின்றான்.


அன்பு தான் உன் பலவீனம் என்றால் இந்த உலகில் மிகச்சிறந்த பலசாலி நீதான் என்று நற்செய்தி அறிவித்தார் அன்னைத்தெரேசா. அன்பு செலுத்துவதே நல்லசெய்தி அதுவே நற்செய்தியாகின்றது. இன்று உலகில் அன்பு என்ற பலம் இல்லாமல் இருப்பதனால் தான் பல போராட்டங்கள், நிம்மதியற்ற வாழ்வு, பழிவாங்கும் எண்ணங்கள், பலவகையான தீயபழக்க வழக்கங்கள். இதை நாம் போக்க வேண்டு மென்றால் மனித மனங்களில் முதலில் அன்பு மலர வேண்டும். அன்பு என்பது உலகமொழி. அன்பு என்பது சொற்களில் வாழ்வதில்லை. அன்பினை சொற்களால் விளக்கவும் முடியாது. இதைத் தான் பல சமயத்தலைவர்கள் தங்களுடைய நல்வாழ்வின

அறிவித்தார்கள். அவர்கள்
ர்கள். அதனை உலகமும் புரி
அன்பிற்கு முடிவே இல்லை சில
வெளிபடுத்துவர், சிலர் உண
பிறந்த சிறுகுழந்தை தன்
உணர்வுகளால் வெளிப்படுத்
தன்னைச் சூழ உள்ளவர்க்கு
அறிவிக்கின்றது. அங்கே நற்
மனித ஆடம்பரமல்ல அது ம
தேவை.

தன் நண்பர்க்காக உ
மேலான அன்பு உலகில் வே
கிறிஸ்து இயேசு மொழிந்
நற்செய்தியை நாம் வாழ்வாக்
அறிய வேண்டும். இத்தகைய
மகாசக்தி. எனவே தான்
சக்தி அன்புக்குண்டு என்று
இன்றைய உலகில் குன்றிப்பே
விழுமியப்பண்பாக அன்பு மா
வடிவங்களை எடுத்து ே
அன்பு, மறைக்கப்பட்ட அன்பு
பிள்ளைகளுக்கு கிடைக்க
இல்லங்களிலும், விடுதிச்சா
லேயே போய் விடுகின்றது.
என்று அறியாமல் அன்பிற்க
உள்ளங்கள் எத்தனைபேர் தம
எத்தனை அன்னைமார்

# ச்செய்வோம்”

## உலக மறைபரப்பு ஞாயிறு 21.10.2018




1822ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் லியோன்ஸ் என்னும் நகரில் செல்வி. மாரி பொலின் ஜெரிக்கோ என்பவரால் இச்சபை ஆரம்பிக்கப்பட்டது. இச்சபையின் நோக்கம் மறைபரப்பு சேவையில் ஈடுபட்டுள்ள மறைபரப்பாளர்களுக்கு செபத்தினாலும் ஒறுத்தலினாலும் ஒத்துழைப்பை வழங்கி மறைபரப்பு சேவையை எல்லா நாடுகளிலும் வளர்க்க வேண்டும் என்பதாகும்.



க்கம்..

# யை மலரச்செய்வோம்

ால் வாழ்ந்து நற்செய்தி
அன்பை வெளிப்படுத்தினா-
ந்து கொண்டது ஏனென்றால்
ர் அன்பை வார்த்தைகளால்
ர்வுகளால் வெளிபடுத்துவர்
அன்பை தன்னுடைய
ந்தி தன் பெற்றோர்க்கும்
ம் அன்பின் நற்செய்தியை
செய்தி வாழ்கின்றது. அன்பு
னித குலத்தின் அடிப்படைத்

யிரைக் கொடுப்பதை விட
ரிடத்திலும் இல்லையென
தார். அவருடைய இந்த
க நாம் அன்பின் சக்தியை
ஊற்றாகிய அன்பு உலகின்
அணுகுண்டுக்கு இல்லாத
சொல்வார்கள். ஆனால்
ாயுள்ள மிகப்பிரதான மறை
றிவருகிறது. இந்த அன்பின்
ாக்கினால் மறுக்கப்-பட்ட
இன்று எத்தனை எத்தனை
வேண்டிய அன்பு அநாதை
லைகளிலும் கிடைக்காம-
தனது தந்தை தாய் யார்
ாக ஏங்கி உயிர் விடும்
து நெறிபிழந்த வாழ்வினால்
தாம் பெற்றபிள்ளைகளை

**அருட்தந்தை சேவியர் ரஜீவன்,**
**பாப்பிறை மறைபரப்பு சபையின் மறைமாவட்ட**
**இயக்குனர் திருகோணமலை.**

குப்பைத்தொட்டிகளிலும் சாலையோரங்களிலும் தூக்கி எறிந்து விட்டுச்செல்கிறார்கள். இந்த அன்பு எனும் உணர்வுக்காக ஏங்கும் பச்சிளம் பாலகர்களின் உள்ளத்தில் நாம் செய்யும் சிறிய அன்பின் செயற்பாடு மிகப்பெரிய நற்செய்தியாகின்றது. இது தான் ஆதரவற்ற அக்குழந்தைகளுக்கான மிகப்பெரிய நற்செய்தியாக உள்ளது. சிறுவர்கள் தம் அன்பாக வார்த்தைகளால் நற்செய்தியை அறிவிப்பவர்களாகின்றனர். இதனாலே இவர்கள் விண்ணரசில் மிகப் பெரிய இடத்தைப் பெறுகிறார்கள் இவர்களைக் குறித்தே யேசுவும் இச்சிறுவர்களுக்கு இடரலாய் இருப்பவர்களுடைய கழுத்தில் பெரிய எந்திரக்கல்லைக்கட்டி கடலில் தள்ளுவது அவர்களுக்கே நலமாயிருக்கும் என்றும் கூறியிருக்கின்றார். ஆண்டவரின் வார்த்தைகளை அனுதினம் அனுபவித்து வாழ்வதே அன்பியம் என்று நாம் கூறுகின்றோம். அடுத்தவரை அன்பு செய்து ஆண்டவரில் நிலைத்திருப்பதே இந்த அன்பிய வாழ்வாகும். இந்த வாழ்வை கட்டியெழுப்ப திருச்சபை எம்மை அழைக்கின்றது. இறைவார்த்தையை நாம் உடைக்கும் போது எம் மனங்களும் உடைக்கப்பட்டு அன்பு எனும் அருவி ஊற்று எடுக்க வேண்டும் அப்போது நாமும் இறைமகனின் வார்த்தையை...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# “அன்பினால் நற்செய்தியை மலரச்செய்வோம்.”



2018 ம் ஆண்டு ஐப்பசி 21ம் திகதி உலக மறைபரப்பு ஞாயிறு தினத்தினூடாக அன்பினால் நற்செய்தியை மலரச்செய்ய முதலில் உங்களை அழைத்து நிற்கின்றோம். விஷேடவிதமாக கி.பி 1822ம் ஆண்டு பிரான்ஸ் லியோன் நகர் மாரி பொலின் ஜெரிக்கோ அம்மையாரால் ஆரம்பிக்கப்பட்ட விசுவாச உயிரூட்டல் சங்கத்தின் ஊடாக மறைப்பரப்பு பணிகளில் ஈடுபடுகின்ற மறைதூதுவர்களுக்காக செபித்தல், பரித்தியாகங்கள் ஊடாக உதவி செய்யும் பொதுநிலையினரை உருவாக்குவதன் வழியாக மறைதூதுப்பணிகளுக்கு ஒத்துழைப்பு நல்கி வருகின்ற உங்களுக்கு இவ்வருட உலக மறைப்பரப்பு ஞாயிறு தினத்தினூடாக அன்பின் நற்செய்தியை மலரச்செய்யும் செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்ற உங்களுக்கு வழிகாட்டுகின்றது.

**“அன்பின் வாழ்வு மற்றும் அதில் பிணைக்கப்பட்டிருப்பதன் அடித்தளம் இறைவார்த்தையாகும். திருவிவிலியத்தில் எந்தவொரு பகுதியை வாசித்தாலும் அது வாழ்விற்கு ஒளியான செய்தியை கொணர்கின்றது”**. உண்மையாகவே எமது வாழ்வின் அன்றாட நிகழ்வுகளில் தொடர்ந்து இறைவார்த்தையை தியானிக்கின்ற பொழுது தூய ஆவியின் வழியாக எமக்கு வெளிப்படுத்தப்படுகின்ற இறைசெய்தி உறுதியானதாக மாறுகின்றது. நிலைவாழ்விற்கான சரியான பாதையை எமக்கு கற்றுத்தரும் ஒரே வழி இறைவார்த்தையும், தூய நற்செய்தியுமாகும். அதனூடாக இறை அன்பின் முக்கியத்துவம் மற்றும் அன்பின் தேவை பற்றி உலகிற்கு எடுத்துக் கூறுகின்றது. மனித அன்பின் உன்னதமான அடையாளம் கிறிஸ்துவே ஆவார். **“உலகிற்கு ஒளி நீங்களே”** உலகில் கிறிஸ்துவிற்கு சான்று பகிர்பவர்களாக மாற்றம் பெறுவது “witness to Christ in the world” நம் அனைவரின் கடமையும் பொறுப்பும் என்பதை இதனூடாக எம்மால் புரிந்துக்கொள்ள முடிகின்றது.

**“உலகெங்கும் சென்று படைபிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள். நம்பிக்கை கொண்டு திருமுழுக்கு பெறுபவர் மீட்டுப் பெறுவார்”** (மாற்கு 16:15, யோவான் 20:21, மத்தேயு 28:28, லூக்கா 24:46 Evangelli Gaudium இல 14) மேற்கூறிய இறைவார்த்தைகள் எமக்கு வழிகாட்டப்படுவது உலகெங்கும் போய் நற்செய்தியை பறைசாற்றுவதன் வழியை வெளிப்படுத்துவதாகும். விசேடவிதமாக உலகில் நற்செய்தியை பறைசாற்றுதல் பற்றி Evangelli Nuntiandiயில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி மறைவழங்குதல் என்பது இயேசுவை அறியாத ஒருவருக்கு அவரை அறிமுகப்படுத்துவதாகும். E.N.17. அதுபோலவே மேற்கூறியபடி நற்செய்தியை பறைசாற்றுதல், அருளடையாளங்களின் ஊடாக அடித்தளமிட வேண்டுமென இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் முக்கிய படிப்பினைகளான Lumen Gentium, Gaudium et Spes, Ad Gentesயின் ஊடாக மேலும் தெளிவுபடுத்துவதோடு அன்பின் நற்செய்தியை வாழ்விற்கு கற்பிக்கின்றது.

இறைவார்த்தை மனிதனுடைய வாழ்விலே பாரிய மாற்றத்தை எற்படுத்துகின்றது என்பது உண்மையானதாகும். இறைவாக்குரைக்கும் பணியை தற்கால சூழ்நிலைக்கு ஏற்ப கிறிஸ்துவின் மறைதூதுப்பணியில் பங்கு கொண்டு தனது வாழ்வின் நிலையை உணர்ந்து செபம், உரையாடல், தேடல் ஊடாக கிறிஸ்துவை பின்பற்ற, அன்பிற்கு சான்று பகர பாரிய ஊன்று கோலாக அமைகின்றது. புனிதர்களைப்போன்று கிறிஸ்துவின் நற்செய்தியை எமது வாழ்வின் மையமாக கொண்டு வாழவேண்டும். **“நீங்கள் அறிவிப்பதை செயல் முறைப்படுத்துங்கள்”** நாம் இறைவார்த்தையை வாழ்வாக்கும் போது அன்பினூடாக இறைவன் செயற்படுவார், எனவே இந்த அன்பினூடாக நற்செய்தியை வாழ்விக்க இயலுமாகின்றது.

**“நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு”** (1கொரி:13:13) ஆகியவற்றில் தலை சிறந்தது அன்பாகும். கிறிஸ்தவ படிப்பினையானது உண்மை அன்பின் ஒளி கிறிஸ்து என விளக்குகின்றது. **“வழியும் உண்மையும் வாழ்வும் நானே என் வழியாயன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை”** (யோவான் 14:6) உண்மையாகவே கிறிஸ்துவினூடாக அன்பை பறைசாற்ற வழிகாட்டப்படுகின்றது. கிறிஸ்துவின் உடலின் உறுப்புக்களாகிய அனைத்து விசுவாசிகளும் திருமுழுக்கு, நற்கருணை, மற்றும் உறுதிப்பூசுதல் வழியாக அவரைப்போல மாற்றப்பட்டுள்ளனர். (எபே:4:13)படி மறை உடலின் வளர்ச்சியில் எமது பங்களிப்பும் உண்டு என எடுத்துக்கூறுவதோடு அதற்கு வேண்டிய அருளை தூய ஆவியானவர் பொழிகின்றார்.

நற்செய்தி மட்டில் திருச்சபைக்குள்ள கடமை பற்றி எடுத்துக்கூறப்படுவதால் ஆன்மீக குண இயல்புகள் மட்டில் நாம் அக்கறை செலுத்த வேண்டும் என இவ்வார உலக மறைப்பரப்பு ஞாயிறானது **“அன்பினால் நற்செய்தியை மலரச்செய்வோம்”** என்ற கருப்பொருளின் கீழ் தியானிக்க அழைத்து நிற்பதால் உங்கள் செபங்கள் மற்றும் பரித்தியாகங்களுக்காக இறைவனை புகழ்ந்து அவருக்கு நன்றி கூறிக்கொள்கின்றேன். நீங்கள் அனைவரும் கிறிஸ்துவிற்கு சான்று பகர தேவையான அருள் வேண்டி இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**உங்களுக்கு இறையாசீர் உரித்தாகட்டும்**

**யேசு கிறிஸ்துவிற்குள்**

**பாப்பிறை மறைப்பரப்பு சபை இயக்குனர் அருட்பணி. பசில் ரொஹான் பர்னாந்து.**




# புத்தகம்

எப்பொழுதும் நல்ல புத்தகங்களிடையே எனது காலத்தைக் கழிக்க விரும்புகிறேன். **–நேரு**

புத்தகங்கள் சிந்தனை நிரம்பிய பீரங்கிகள்.
**– மாண்டேயின்**

புத்தகங்கள் மனிதரை உருவாக்குகின்றன. புத்தகங்கள் மனிதர்களை உறக்கத்திலிருந்து விழிப்புறச் செய்கின்றன. மாபெரும் புரட்சிகளுக்கு புத்தகங்கள்தான் காரணமாகின்றன.
**– ஸ்பென்சா ஜான்சன்**

காலமெனும் கடலில் பயணம் செய்யும் மனிதருக்குக் கலங்கரை விளக்கமாகத் திகழ்வது நல்ல புத்தகங்களே **– வீப்பில்**

ஒரு புத்தகத்தைப் படிப்பது ஒரு நண்பரைப் பெறுவது போன்ற இனிய அனுபவம். அந்தப் புத்தகத்தை மீண்டும் படிப்பது நெடுநாள் பிரிந்த நெருங்கிய நண்பரைத் திரும்பவும் சந்திப்பதுபோன்ற சுகமான அனுபவம்.
**– காரல் மார்க்ஸ்**



## சென்ற இதழின் விடுகதைக்கான விடைகள்

1. இதயம்
2. காற்று
3. மூக்கு
4. கடல்
5. தபால்பெட்டி
6. மழை
7. தபால்காரர்
8. தராசு
9. நெருப்பு
10. எறும்பு

## ஏக்கம்

பொன் மாலைப் பொழுது.
மர வகைகள் நிறைந்த பூங்கா.
ஐந்து வயதுச் சிறுவர்கள் சிலர்
கூடி விளையாட ஆரம்பித்தனர்.

மர்பியும் சேர்ந்து கொண்டான்.
கண்ணாமூச்சி விளையாட்டில் மும்முரமானான்:

'கண்ணாமூச்சி ரே.. ரே.. காதடைச்சான் ரே.. ரே..
எத்தனை முட்டை? மூணு முட்டை.
மூணு முட்டையும் கண்டுபிடிச்சு...
தங்கத் தார முட்டையா கொண்டு வாங்க...'

ஓடி ஒளிந்து கொண்டவர்களைத் தேட ஆரம்பித்து...
ஆரவாரமாய் விளையாடிக் கொண்டிருந்தனர்.
பொழுது சாயும் முன்...
கடைசியாக ஒரு ஆட்டம் ஆடினர்.
ராகமாய்க் கத்தியபடி வீடு திரும்பினர்:

'அவரவர் வீட்டுக்கு...
அவரைக் காய் சோறு திங்கப் போகலாம்...!'

சிறிது நேரம் சென்றது.
கண்ணைக் கசக்கியபடி வீடு திரும்பினான் மர்பீ.

வாரியணைத்து முத்தமிட்டுக்
காரணம் கேட்டாள் அம்மா.
நனைந்த மலர் விழிகளை உருட்டியபடி
விளக்கினான் மர்பி:

**'அம்மா..**

**நாங்க எல்லோரும் கண்ணாமூச்சி**
**வெளையாண்டோம்மா...**
**நான் ஓடி ஒரு புதருக்குள் கிச்சுனு**
**ஒளிஞ்சுக்கிட்டேன்...**
**ரொம்ப நேரமா அங்கேயே பதுங்கி இருந்தேன்.**
**இருட்டிருச்சு, ரொம்ப இருட்டிருச்சு,**
**வெளியே வந்து பாத்தா... யாருமே இல்ல.**
**எல்லோரும் வீட்டுக்குப் போயிட்டாங்க..!'**

தேம்பித் தேம்பி அழுதபடி அம்மாவிடம் கேட்டான்:
'என்னைத் தேடிக் கண்டுபிடிக்க
ஏம்மா... யாருமே வரல..?'



**அன்புக்காய் ஏங்கும்**
**அனாதைகள் ஆயிரம் இருக்க...**
**குழந்தையில்லை என்று நொந்து வாழ்வானேன்..!**

# 4. தனிச் செபப் பழக்கம்

## 3. துயரத்தின் மறைநிகழ்வுகள்

### 2. இயேசு கட்டிவைக்கப்பட்டு அடிக்கப்படுகிறார்

வானகத் தந்தையே அப்பா!

குற்றமில்லாத உம் மகனைக் குற்றவாளியாக்கிக் கற்றூணில் கட்டிவைத்துச் சதை கிழிய அடிக்கப்பட்டார். அன்னை மரியாவின் பரிந்துரையால் தூய்மையாய் இருக்க எனக்கு உதவிசெய்யும்.

**பரலோகத்தில் இருக்கின்ற....**

யூதாஸ் தோட்டத்தினுள் நுழைகிறான். **அருள் நிறை**
இயேசுவை முத்தமிட்டுக் காட்டுகிறான். **அருள் நிறை**
இயேசு கைதுசெய்யப்படுகிறார். **அருள் நிறை**
சங்கத்தார் முன்னிலையில் நிற்கிறார். **அருள் நிறை**
பொய்க் குற்றங்கள் சுமத்தப்படுகிறார். **அருள் நிறை**
இயேசு மௌனமாக நிற்கிறார். **அருள் நிறை**
கொலைக்காகத் தீர்ப்பிடப்படுகிறார். **அருள் நிறை**
பிலாத்துவிடம் கொண்டுசெல்லப்படுகிறார். **அருள் நிறை**
பிலாத்துவும் அதே தீர்ப்பையே அளிக்கிறான். **அருள் நிறை**
இயேசுபிரான் கட்டியடிக்கப்படுகிறார். **அருள் நிறை**

ஓ என் இயேசுவே! எங்கள் பாவங்களை மன்னியும். நாங்கள் நரக நெருப்புக்குள் செல்லாதவாறு எங்களைக் காப்பாற்றும். எல்லா மக்களையும் விண்ணகப் பாதையிலே வழிநடத்தும். உம் இரக்கம் அதிகம் தேவைப்படுவோருக்கு சிறப்பாக உதவி செய்யும்.

### 3. இயேசு முள்முடி சூட்டப்படுகிறார்

வானகத் தந்தையே அப்பா!

வதைப்போர் உம் மகனின் தலையில் முள்முடி சூட்டி எள்ளி நகையாடினார்கள். அன்னை மரியாவின் பரிந்துரையால் பொறுமையைக் கடைப்பிடிக்க எனக்கு உதவிசெய்யும்.

**பரலோகத்தில் இருக்கின்ற....**

இயேசு கைகள் கட்டுண்டு நிற்கின்றார். **அருள் நிறை**
சிவப்பு ஆடை அணிந்தவராய் நிற்கின்றார். **அருள் நிறை**
முட்களால் முடிசூட்டப்படுகிறார். **அருள் நிறை**
பிரம்பைச் செங்கோலாய் ஏந்துகிறார். **அருள் நிறை**
ஏளனம் செய்யப்படுகிறார். **அருள் நிறை**
கன்னத்தில் அறையப்படுகிறார். **அருள் நிறை**
முகத்தினிலே துப்பப்படுகிறார். **அருள் நிறை**
தலையினிலே அடிக்கப்படுகிறார். **அருள் நிறை**
சிவப்பு ஆடை உரியப்படுகிறார். **அருள் நிறை**
கொலைசெய்யக் கொண்டுசெல்லப்படுகிறார். **அருள் நிறை**

ஓ என் இயேசுவே! எங்கள் பாவங்களை மன்னியும். நாங்கள் நரக நெருப்புக்குள் செல்லாதவாறு எங்களைக் காப்பாற்றும். எல்லா மக்களையும் விண்ணகப் பாதையிலே வழிநடத்தும். உம் இரக்கம் அதிகம் தேவைப்படுவோருக்கு சிறப்பாக உதவி செய்யும்.

**தொடரும்**

**அருட்தந்தை அ. பிலிப் அடிகளார்** (ivDei)

# நற்செய்தியாளர் புனித லூக்கா ஐப்பசி 18




இவர் சிரியாவில் உள்ள அந்தியோக்கியா நகரில் பிறந்தார். இவருடைய பெற்றோர் அவிசுவாசிகள். திருமறையை முதலில் தழுவியவர்களில் இவர் ஒருவர். புனித பவுலின் இரண்டாம் மூன்றாம் பிரயாணங்களில் இவர் பங்கு பெற்றார். செசாரியாவிலும், உரோமையிலும் பவுல் சிறையில் இருக்கும் போது இவரும் அங்கு இருந்தார். இவர் நற்செய்தி நூல் ஒன்று எழுதியிருக்கிறார். இதை "இரக்கத்தின் நற்செய்தி" என சிலர் அழைக்கின்றனர். ஏனெனில் கடவுளின் எல்லையற்ற இரக்கத்தைக் காட்டும் ஊதாரிப் பிள்ளையின் உவமையை இவர் நமக்குத் தருகிறார். யூதரும், கிரேக்கரும் எல்லோருமே மோட்சம் சேர வேண்டும் என புனித பவுல் வற்புறுத்திக் கூறி வந்தார். இதை இவரது நூலில் காணலாம். "என் ஆன்மா ஆண்டவரை ஏத்திப் போற்றுகின்றது" என்ற மரியாளின் பாடலையும், "இஸ்ரயேலின் தேவனாகிய ஆண்டவர் போற்றி" என்னும் சக்கரியாசின் கீதத்தையும் இவர் தருகிறார். கர்த்தர் கற்பித்த மன்றாட்டையும் மங்கள வார்த்தை மன்றாட்டையும் இந்த நூலில் பார்க்கலாம். மரியாள், எலிசபெத், மார்த்தாள் ஆகிய பெண்களைப் பற்றிய விபரங்களையும் இவர் தருகிறார்.

நம் ஆண்டவர் இரக்கமும் அனுதாபமும் உள்ள தேவ வைத்தியர், பாவிகளின் நண்பன், துன்புற்றோரைத் தேற்றுகிறவர், மானிட சந்ததியின் இரட்சகர் என இவர் எண்பிக்கிறார். பாவிகளின் உள்ளத்தை இளகச் செய்து கடவுளின் இரக்கத்தில் நம்பிக்கை வைக்கத் தூண்டும் நிகழ்ச்சிகளை இவர் தமது நூலில் குறிப்பிடுகிறார். இவர் தரும் ஊதாரிப் பிள்ளையின் உவமை உலகிலேயே இதுவரை எழுதப்பட்டுள்ள மிகச் சிறந்த சிறு கதைகளில் ஒன்றாகும். எண்ண முடியாத பாவிகளை இது கடவுளிடம் கொண்டு வந்திருக்கிறது.

அப்போஸ்தலர் பணி என்னும் நூலையும் எழுதியவர் இவரே. நாசரேத்திலிருந்து யெருசலேம் வரை நிகழ்ந்தவற்றை தம் நற்செய்தியிலும், யெருசலேமிலிருந்து உரோமை வரை நிகழ்ந்தவற்றை தம் அப்போஸ்தலர் பணி என்னும் நூலிலும் இவர் தருகிறார். இவர் ஒரு சிறந்த ஓவியர் என்றும் நம்பப்படுகிறது.

**சிந்தனை: கடவுளின் எல்வையற்ற இரக்கம் உள்ளவர். இதை அறியும் நாம் நிர்பாக்கிய பாவிகளுக்காக நம்பிக்கையுடன் அடிக்கடி செபிக்க வேண்டும்.**



# மாணவர்களுக்கு பயனுள்ள ஆலோசனைகள்




மாணவர்களுக்கு கவனக்குறைவு என்பது ஒரு முக்கியப் பிரச்சினையாகும். பாடங்களில் ஏன் கவனம் செலுத்த முடியாமல் போகிறது என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டால், குறைபாடுகளை சரிசெய்து கொள்ளலாம்.

- பாடங்களை சரியாகப் புரிந்து கொள்ள முடிவதில்லை.
- வெவ்வேறு பாடங்களில் ஆர்வம் காட்டும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட பாடத்தில் ஆர்வம் இல்லாமல் போகும். அந்தப் பாடம் அவர்களுக்கு பிடிக்காத பாடம் ஆகிவிடும்.
- மனவளர்ச்சி குன்றிய நிலை, குடும்பப்பின்னணி மற்றும் சமூகப் பின்னணியின் காரணமாக அவர்களின் அறிவாற்றல் திறன் குறைவாக இருக்கும்.
- மூளையின் வழக்கமான செயல்திறனை பயன்படுத்த முடியாத அளவுக்கு இருக்கும்போது, சத்துள்ள உணவின் மூலம் தேவையான சத்துப் பொருள்களைத் தந்து மூளையின் செயல்பாட்டு சிரமங்களை சரி செய்யலாம்.



- போதுமான தூக்கமின்மையின் காரணமாக சோம்பேறித்தனம் ஏற்படும். தேர்வு நேரங்களில் அதிகாலையிலே எழுந்துவிடும் மாணவர்கள் உண்டு. தூக்கம் போதாத காரணத்தால் தூக்கக் கலக்கம் சோம்பேறித்தனமும் வந்துவிடும் பரீட்சை நேரத்தில் மட்டும் சீக்கிரம் எழுவது, இரவில் அதிக நேரம் கண்விழித்துப் படிப்பது என்பதற்குப் பதிலாக ஆண்டு முழுவதும் இரவில் தூங்கச் செல்லும் நேரத்தையும் காலையில் கண் விழிக்கும் நேரத்தையும் ஒழுங்குபடுத்திக் கொள்வது நல்லது. அதிகப்படியாக சாப்பிட்டாலும் சோம்பேறித்தனம் ஏற்படும். ஆரோக்கியமற்ற உணவுப்பழக்கத்தாலும் சோம்பேறித்தனம் ஏற்படும்.
- தொடர்ச்சியாக நோய்வாய்ப்படுவதால், படிப்பில் முழு கவனம் செலுத்த முடியாமல் போகிறது.
- முழு மனதையும் செலுத்திப் படிக்க முடியாமல் போவதற்கு குடும்பச் சூழ்நிலையும் காரணமாகலாம்.
- மாணவர்களின் வாழ்க்கையில் அவ்வப்போது நிகழ்ந்த சில சம்பவங்கள் மனதில் தோன்றி கவலைகளை ஏற்படுத்துவதாலும் படிப்பில் முழு கவனம் சிதறுகிறது.
- அமைதியாக அல்லது சாதாரணமாக அமர்ந்து படிக்கக்கூடிய குறைந்த பட்ச வசதிகள் கூட இல்லாத நிலைமை சில சமயம் மனதை உலுக்கி, படிப்பில் கவனம் செலுத்துவதைத் தடுக்கலாம்.
- மோசமான விடுதி வசதிகூட காரணமாக இருக்கலாம்.
- மாணவர்கள் போதை பழக்கத்திற்கு ஆளாகி இருக்கலாம்.
- குடிப்பழக்கம், சிகரெட் பிடிக்கும் பழக்கம், போன்றவற்றிற்கு ஆளாகி இருக்கலாம்.
- எந்த நேரம் பார்த்தாலும் இணையத்தள வசதியைப் பயன்படுத்தி பல்வேறு தேவையற்ற விஷயங்களில் மனதைச் செலுத்துவது.
- அடிக்கடி சினிமா பார்க்கும் பழக்கம்.
- தொலைக்காட்சிப் பெட்டிகளில் எந்நேரமும் கட்டுண்டு கிடப்பது.
- பாலுணர்வு முதலான புலன் இன்பத்தில் நாட்டம்.
- மோசமான, தீய நட்பு சூழல்.

மேற்கண்ட பல காரணங்களினால் மாணவர்கள் படிப்பில் போதிய கவனம் செலுத்த முடியாமற் போகிறது. இங்கே குறிப்பிட்டவை தவிர வேறுபல காரணங்கள்கூட இருக்கலாம். உதாரணமாக படிப்பதற்கு பெற்றோர் அல்லது உறவினர். குடும்ப வறுமையின் காரணமாக பெற்றோருக்கு உதவியாக சிறு சிறு வேலைகளை செய்து இதனால் கவனம் சிதறுவதால் படிக்கும் நேரமும் குறைந்து, படிக்கும் கவனமும் போய்விடுகிறது.


மாணவர்கள் படிப்பில் போதிய கவனம் செலுத்த முடியாமல் போனதற்குக் காரணம் என்ன என்பதைக் கண்டு பிடித்துவிட்டாலே, பிரச்சினையில் பாதி தீர்ந்துவிட்டது என்று கூறலாம். படிக்கும்போது முழு மனதையும் செலுத்தி கவனமாகப் படிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்வதற்கு இங்கே சில யோசனைகள் கூறப்பட்டுள்ளன.

- பயிற்சியும் விருப்பு வெறுப்பின்மையும், படிப்பில் முழு கவனம் செலுத்த (மனதை ஒருநிலைப்படுத்த) உதவும்.
- பயிற்சி என்பது தொடர்ச்சியான முயற்சியைக் குறிக்கிறது. திருப்பத் திரும்ப முயற்சி மேற்கொள்வதன் மூலம் படிக்க வேண்டிய மற்றும் பிற ஒழுங்குகள் மீது மனம் நாட்டம் கொள்கிறது.
- மனதை ஒருநிலைப்படுத்த, அமைதியாக அமர்ந்து தியானிப்பது நல்லது.
- ஆழமாகவும் சீராக மூச்சுப் பயிற்சியில் ஈடுபடுவதும் மனத்தை ஒரு நிலைப்படுத்த உதவும்.
- காலை, மாலை இருவேளைகளிலும் மென்மையான இசை கேட்பதும் மனதை அமைதிப்படுத்தும்.
- உங்களது வெவ்வேறான பழக்க வழக்கங்களை பாகுபடுத்திப் பார்க்கவேண்டும். இதன்மூலம் அவசியமற்ற பழக்க வழக்கங்களில் இருந்து ஒதுங்கி இருக்க முடியும். ஆரோக்கியமான பழக்க வழக்கங்களை அனுசரிக்க முடியும்.



- தார்மீக மதிப்பீடுகளான உண்மை, நேர்மை, தூய்மையான எண்ணம், சுயநலமின்மை, சொல்லும் செயலும் பொருந்த நடந்து கொள்வது போன்ற நன்னெறிகளைப் பின்பற்ற வேண்டும்.
- ஆரோக்கியமான உணவு, தூய்மையான இனிய சுற்றுச்சூழல், போதுமான ஓய்வு ஆகியவையும் மாணவர்களுக்குத் தேவை.
- ஆக்கபூர்வமான நடைமுறைக்கு சாத்தியமான கருத்துக்களை யோசிக்க வேண்டும் முன்னுதாரணமாக வாழ்ந்த நல்லவர்களை, வல்லவர்களை மனதில் முன்னிறுத்திக் கொள்ள வேண்டும்.
- பகற்கனவு காண்பதையும் அரட்டை அடிப்பதையும் விட்டுவிட வேண்டும்.
- அன்றாடம் படிப்பது, உடல் பயிற்சி செய்வது, இதர கலை நடவடிக்கைகளில் ஈடுபடுவது, அவசியமான அளவுக்கு ஓய்வு எடுப்பது போன்றவற்றை தவறாமல் கடைப்பிடிப்பதன் மூலம் மனவலிமை அதிகரிக்கும். இதன் மூலம் உடல் நலம், மனவளம் மேம்படும். எனவே ஒரு திட்டவட்டமான அன்றாட நடவடிக்கைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். மாணவர்கள் பிறருக்கு சேவை செய்வதிலும் நாட்டம் கொள்ளவேண்டும். நண்பர்களுக்கும், பெற்றோர்களுக்கும் கூட உதவிகளைச் செய்யலாம்.

# வாழ்க்கையில் ஒரு மாணவன்



- கற்க, வளர, தெரிந்து கொள்ள எவ்வளவு வாய்ப்புகள் இருக்கின்றன.
- வழி காட்ட, காரணம் கேட்க, உதவி செய்ய, திருத்திக் கொள்ள வாழ்க்கை ஆசிரியர்களை நம்மிடம் அனுப்பிக் கொண்டிருக்கிறது.
- நான் செவி சாய்க்க தயாராக உள்ள சமயங்களுக்கு, செவிசாய்க்காத சமயங்களும் பல இருக்கின்றன.
- ஆனால் கற்க வேண்டியவை எப்பொழுதுமே இருக்கிறன.
- நான் கற்பதை தடுப்பது என்ன? என் பிடிவாதமா, அகங்காரமா அல்லது கர்வமா?
- என்னையே நான் கட்டுப்படுத்திக் கொண்டால், சரியான சமயத்தில், பாடங்கள் கிடைக்கும்போது நான் கற்றுக்கொள்ள முடியுமே.
- எனக்கு வேதனைகள் ஏற்படாமல் தடுக்க முடியும்.
- வளர்ச்சி மற்றும் புரிந்து கொள்ளும் பாதை சிறிது நேரத்திற்கு பொறுத்துக் கொள்கிறது.
- அது சிறிது நேரத்திற்கு பொறுமையாகவும் பரிவுடனும் நடந்து கொள்கிறது.
- ஆனால் நேரமோ முடிந்து விடப் போகிறது. பாடங்களைக் கற்றுக் கொள்ளாத வேதனை என் மனதை வாட்டுகிறது. முன்பு பாடங்களைக் கற்றுக் கொள்ளாமலிருந்ததின் நினைவு என் ஆத்மாவில் பதிந்திருக்கிறது.
- இப்பொழுது அவை எனக்கு நினைவூட்டுகின்றன. நான் இப்போது கூட கற்றுக்கொள்ள மறுக்கிறேன்.
- மறுக்காமலிருக்க நான் என்ன செய்ய வேண்டும்?
- புதிய வாய்ப்பு கிடைக்கும் ஒவ்வொரு முறையும் விலை அதிகமாயிற்று.
- வரும் நாட்களில் விலை மேலும் அதிகரிக்கலாம்.
- வளருவதற்கு தயங்கினால் விலை அதிகரிக்கும். இந்த விலை முதலில் குறைவாக இருந்தது.
- வரும் நாட்களில் இப்போது இருப்பதை விட விலை அதிகமாக இருக்கும். நான் பாடங்களை கற்றுக் கொண்டால் மேல் நிலையை அடைய முடியும்.
- அங்கே, வெகுமானங்கள் இனிமையாக இருக்கும்.
- எப்பொழுதுமே திறமையுள்ள பிரியமான மாணவனாக விளங்குங்கள்.
- வாழ்க்கை உங்களிடம் அனுப்பும் ஆசிரியர்களை நேசியுங்கள்.
- உங்களுடைய தேவைகள் வாழ்க்கைக்குத் தெரியும் என்பதால், நீங்கள் எவ்வளவுதான் தடுத்தாலும், "நான் மற்றொரு நாள் திரும்பவும் வருவேன்" என்று வாழ்க்கை சொல்லும்.




# இளையோரை மையப்படுத்தி வத்திக்கானில் நடைபெற்ற 15வது உலக ஆயர்கள் மாமன்றம்

ஐப்பசி 3ம் திகதி உலக ஆயர்கள் மாமன்றம் தொடங்கியது. அம்மாமன்றத்தில் ஆயர்கள், அருட்பணியாளர்கள், அருள்சகோதரிகள், பொது நிலையினர் குறிப்பாக இளையோர்கள் கலந்து கொண்டனர். இவ்வாண்டு 15வது உலக ஆயர்கள் மாமன்றம் இளையோரை மையப்படுத்தி அமைந்ததாக இருந்தது.

மாமன்றத்தின் முதல் நாளின் முதல் அமர்வில் திருத்தந்தை உரையாற்றுகையில், இளையோரிடம் உருவாகும் ஆர்வமும், நேர்மறை உணர்வுகளும், இந்த மன்றத்தை மட்டுமல்ல திரு அவையையும், இவ்வுலகத்தையும், நிரப்புவதை காண முடிகிறது என்று கூறி ஆரம்பித்து வைத்தார் திருத்தந்தை. இதில் இளையோரை வரவேற்றுப் பேசிய திருத்தந்தை இளையோரிடம் காணப்படும் ஆசிய உணர்வு இந்த மாமன்றத்தின் நாட்கள் அனைத்திலும், தொடர வேண்டும் என்ற விருப்பத்தினை வெளியிட்டார்.

## ஆயர்கள் மாமன்றத்தின் முக்கியப் பணி, பகிர்வு

உலக ஆயர்கள் மாமன்றம் பகிர்வுக்காக அமைக்கப்பட்ட ஓர் ஏற்பாடு என்பதை, தன் உரையில் சுட்டிக்காட்டியத் திருத்தந்தை, கூடியிருந்த அனைவரையும், சுதந்திரம், உண்மை, பிறரன்பு ஆகிய பண்புகளுடன் தங்கள் எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ள அழைப்பு விடுத்தார்.

அதேவண்ணம், மற்றவர்கள் கூறுவதற்கு செவிமடுக்கவேண்டும் என்பதைக் கூறியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், குறிப்பாக, அடுத்தவர் சொல்லும் கருத்தில் நமக்கு உடன்பாடு இல்லாத வேளையில், கூடுதலான கவனத்துடன் அவருக்குச் செவிமடுக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை வலியுறுத்தினார்.

## தெளிந்து தேர்தலுக்கு, அமைதி தேவை

தெளிந்து தேர்தல் என்ற சொல், இந்த மாமன்றத்தின் மையமாக உள்ளது என்பதை சிறப்பாகக் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தெளிந்து தேர்தல் என்ற வழிமுறையில், அமைதி அவசியம் என்பதால், ஒவ்வோர் அமர்விலும், ஐந்து பேர் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்ட பின்னர், ஏறத்தாழ மூன்று நிமிடம் அமைதி காத்து செபிப்போம் என்று கேட்டுக்கொண்டார்.

## முதியோர், இளையோரின் முற்சார்பு எண்ணங்கள்

வயதில் முதிர்ந்தோர், இளையோரை அனுபவம் அற்றவர்கள் என்றும், இளையோர், வயதில் முதிர்ந்தோரை பழங்காலத்தவர் என்றும் கருதுவதால், இந்தச் சந்திப்பில், இத்தகைய முற்சார்பு எண்ணங்களைக் களைந்துவிட்டு, நம் உரையாடலும், செவிமடுத்தலும் நிகழவேண்டும் என்று திருத்தந்தை தன் உரையில் விண்ணப்பித்தார்.

எந்த ஒரு சமுதாயத்தையும் முன்னெடுத்துச் செல்ல, இளையோரும் தேவை, முதியோரும் தேவை என்பதை சிறப்பாகக் குறிப்பிட்ட திருத்தந்தை, இவ்விரு தலைமுறைகளும் இணைந்து செல்வதால் உருவாகும் நன்மைகளை சில எடுத்துக்காட்டுகளுடன் குறிப்பிட்டார்.

## குருத்துவமயம் என்ற குறுகிய எண்ணத்தின் விளைவுகள்

கத்தோலிக்கத் திருஅவையில், குருத்துவமயம் (Clericalism) என்ற பிரச்சினை, பல நேரங்களில் பெரும் தடையாக அமைந்துள்ளது என்பதை சுட்டிக்காட்டிப் பேசிய திருத்தந்தை, அழைப்பு என்பதை, குருத்துவம், துறவறம் என்ற குறுகிய கண்ணோட்டத்துடன் காண்பதைவிட்டு வெளியேறி, பரந்துபட்ட கண்ணோட்டத்துடன், அழைப்பைக் குறித்து பேச நாம் இங்கு கூடியிருக்கிறோம் என்று கூறினார்.



## மாமன்றங்கள், ஏடுகளை உருவாக்குவதற்கு அல்ல...

ஏடுகளை உருவாக்க வேண்டும் என்பதற்காக ஆயர் மாமன்றங்கள் நடைபெறுவதில்லை, ஏனெனில், இந்த ஏடுகளை முழுமையாக வாசிப்பவர்கள் குறைவு, அதே வேளையில், அந்த ஏடுகளில் உள்ள கருத்துக்களைக் குறித்து விமர்சனங்கள் செய்வோர் அதிகம் என்று கூறியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திறந்த உள்ளத்துடன் பகிர்வதில் மாமன்றத் தந்தையர் கூடுதல் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

## "அழிவின் இறைவாக்கினர்களாக" இராமல்...

திருஅவையில் நிலவும் குறைகளை பெரிதுபடுத்தி, "அழிவை அறிக்கையிடும் இறைவாக்கினர்களாக" இராமல், எதிர்காலத்தை, நம்பிக்கையோடு நோக்கும் பணியாளர்களாக இருப்போம் என்றும், குறிப்பாக, இந்த மாமன்றத்தில் திருஅவையின் எதிர்காலமான இளையோரைக் குறித்து நம் எண்ணங்களை இன்னும் வலிமையுள்ளதாக மாற்றுவோம் என்றும் திருத்தந்தை தன் உரையின் இறுதியில் அழைப்பு விடுத்தார்.

# உலக ஆயர்கள் மாமன்றத்தின் இரண்டாம் நாள்

திருமண வாழ்வுக்குத் தயாரித்தல், குடும்பத்தில் தந்தையின் இடம் இளம் குடியேற்றத்தாரர்கள், இளையோரின் வாழ்வு சாட்சியங்கள் என்பன முக்கிய இடம் பெற்றன.

குடும்ப உறவுகள் முறிவுபட்டுக் கிடப்பது அதற்கான தயாரிப்புக்கள், மறைக்கல்வியில் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் கடந்த காலங்களில் குடும்பத்தில் தந்தையின் இடம் முக்கியத்துவம் பெற்றதாக இருந்தது. அவரின் விசுவாச வாழ்வு மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக இருந்தது. ஆனால் இன்று அத்தகைய நிலை பல குடும்பங்களில் இல்லை என்று மாமன்றத்தில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் கூறினார்கள்.

அடுத்து விசுவாசம் அற்றவர்களுக்கு எவ்விதம் நற்செய்தியை அறிவிக்க முடியும், அது இளையோரின் பணியாக அமையவேண்டும் என்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.



இளையோருக்கும், முதியோருக்கும் இடையே உள்ள உரையாடல் மிக முக்கியமானதாகும். வருங்காலத்தை நோக்கி நாம், மேற்கொள்ளும் பயணத்தில் கடந்த கால நினைவுகளும், துணிவும், தன்னம்பிக்கையும், தேவை என்பதால், இரு தலைமுறைகளுக்கும் இடையேயுள்ள கலந்துரையாடல் மிக முக்கியமாக இருக்கிறது என்ற கருத்து விவாதிக்கப்பட்டது.

# ஆயர்கள் மாமன்றத்தின் - இறுதி இரண்டு நாட்களில்...

## இளையோர் கையில்

திரு அவையின் எதிர்காலமானது இளையோர் மீது நம்பிக்கை கொண்டுள்ளது. இளையோர் பெறும் அழைப்பு ஒவ்வொரு நாள் வாழ்விலும், பெறும் அனுபவங்களின் வழியாக உருவாகியது. இந்த அழைப்பானது குடும்பங்களிலிருந்து உருவாகியது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் செலவிடும் நேரங்கள் அனைத்தும், அழைப்பை அவர்கள் உள்ளங்களில் விதைக்கும் வாய்ப்புக்களாகும்.

வறுமையுள்ள இளையோர் மீது திரு அவை, இன்றும் தீவிரமான தொடர்புகளை உருவாக்குவது முக்கியமாகும் என்ற விடயங்கள் பேசப்பட்டன.

## ஆயர்கள் மாமன்றத்தில் இளையோரை சந்தித்த திருத்தந்தை



சனிக்கிழமை மாலை ஏறத்தாள 7000 இளையோரை அருளாளர் ஆறாம் பவுல் அரங்கில் சந்தித்தார். நன்மையை தேடிய பயணத்தில் முதலில் நம்மையே நாம் கண்டுகொள்ள வேண்டும். வாழ்வோடு இணங்கிச் செல்வதாக நம் பயணம் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மேலும் தொடர்ந்து திருத்தந்தை இளையோராகிய நீங்கள் விற்பனைகல்ல, ஒருங்கிணைந்திருங்கள், கைப்பேசிகளுக்கு அடிமையாகாதீர்கள் என்று கூறினார். பின்னர் இளையோரின் கேள்விகளுக்கு பதில் அளித்தார். அதில் இளையோருக்கு சில வழிமுறைகளையும் பரிந்துரைத்தார். உங்களுடைய பதில்கள் அச்சமற்றதாக வெளிப்படையாக இருக்க வேண்டும்.

நன்மையை நோக்கிய நம் தேடுதலில், நம்மையே நாம் கண்டறிதல் நம் முதல்படியாக இருக்க வேண்டும். நாம் ஓரிடத்தில் சுகமாக அமர்ந்துவிடாமல் முன்னோக்கி நடைபோட்டுக்கொண்டே இருக்க வேண்டும். அதுவும் வாழ்வோடு இணைந்து செல்வதாக இருத்தல் வேண்டும்.

உலகின் பல நிலைகளிலும், சரிநிகரற்ற தன்மைகள் நிலவுவதையும் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அதிகாரம் என்பது, சேவை புரிவதற்கே, மற்றவர்களை அடிமையாக்குவதற்கல்ல என்பதையும் எடுத்துரைத்தார்.

# நாம் இயங்கும் இடங்களில் இயேசுவை கண்டுகொள்ள...

**குழந்தையின் வாழ்வில் குடும்பம், உடன் நடந்து செல்வதுபோல், திரு அவையும் தன் அங்கத்தினர்கள் வாழ்வில் இணைந்து நடைபோட வேண்டும்.**

உலக ஆயர் மாமன்றக் கூட்டத்தின் ஐப்பசி 12ம்திகதி அமர்வில், இளையோரின் வாழ்வில் குடும்பத்தின் முக்கிய இடம் குறித்து விவாதிக்கப்பட்டதாக போலந்து ஆயர்கள் தெரிவித்தனர்.

இளையோரின் வாழ்விலும், தெளிந்து தேர்தலிலும், அவர்களின் குடும்பங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்பதையும், குடும்பங்களைப்போல் திருஅவையும் ஒரு குடும்பமாக தன் குழந்தைகளின் வாழ்வில் உடன் நடந்து செல்கின்றது என்பதையும், ஆயர் மாமன்ற தந்தையர்கள் விவாதித்ததாக, போலந்து ஆயர் பேரவைத் தலைவர், பேராயர் Stanisław Gądecki அவர்களும், பேராயர் Grzegorz Ryś அவர்களும் எடுத்துரைத்தனர்.



குடும்பத்தின் மதிப்பை முதலில் உணர்ந்துகொள்ளும் இளையோர், அங்கிருந்து விசுவாசத்தையும், கடவுளையும் நோக்கி வருகின்றனர் என்று கூறிய போலந்து ஆயர்கள், குடும்பம், நண்பர்கள், பணியிடம், விடுதலை போன்றவற்றில் இயேசுவைக் கண்டுகொள்ள திரு அவை உதவ வேண்டியதும் வலியுறுத்தப்பட்டது என்றனர். ஒவ்வோர் இளையோரின் அழைப்பும், சிலுவையோடு இணைந்ததாக இருக்க வேண்டும் என்ற கருத்தையும் போலந்து ஆயர்கள் எடுத்துரைத்தனர்.

# இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்

[மத் 6:9]

பகுதி – 6



## இயேசுவைப் போற்றுவோம்

தந்தை இறைவனின் திருமகனும், நம் மீட்பருமான இயேசுவைப் போற்றுவது நம் கடமை. இயேசுவைப் போற்றுவதன் பல வழிகளுள் ஒன்று அவரது திருப்பெயரைப் போற்றுவது. இயேசுவின் பெயர் சிறப்பு வாய்ந்தது. மாண்புமிக்கது. அந்தப் பெயரை அடிக்கடி நாவில் ஒலிக்க வைத்துப் போற்றுவது இனிமையான ஓர் இறைப்புகழ்ச்சி செபம்.

இயேசுவின் திருப்பெயருக்குப் பல சிறப்புக்கள் உண்டு என்று நற்செய்தி நூல்கள் எடுத்துரைக்-கின்றன.

### 1. இயேசுவின் பெயர் பேய்களை ஓட்டுகிறது.

இயேசுவுக்கு மட்டுமல்ல, அவரது பெயருக்கே பேய்களை விரட்டும் ஆற்றல் இருக்கிறது என்பதை நற்செய்தி நூல்கள் நன்கு பதிவு செய்துள்ளன. உயிர்த்த இயேசு தம் சீடர்களை நற்செய்தி பறைசாற்ற அனுப்பியபோது, நம்பிக்கை கொண்டோர் செய்யும் அரும் அடையாளங்களுள் முதன்மையானதாகக் குறிப்பிடுவது அவர்கள் என் பெயரால் பேய்களை ஓட்டுவர் (மாற் 16:17) என்பது.

இயேசுவின் பணிவாழ்வில் நிகழ்ந்த இன்னொரு சுவையான நிகழ்வும் இந்த ஆற்றலை வெளிப்படுத்-துகிறது. ஒருமுறை யோவான் இயேசுவிடம் போதகரே, ஒருவர் உமது பெயரால் பேய்கள் ஓட்டுவதைக் கண்டு, நாங்கள் அவரைத் தடுக்கப் பார்த்தோம். ஏனெனில் அவர் நம்மைச் சாராதவர் (மாற் 9:38) என்கிறார். என்னே ஒரு செய்தி! இயேசுவின் சீடரல்லாத ஒரு மனிதர்கூட இயேசுவின் பெயரைச் சொல்லிப் பேய்களை விரட்டியிருக்கிறார் என்றால், அந்தப் பெயர் எத்தனை ஆற்றல் வாய்ந்தது.

### 2. இயேசுவின் பெயர் நோய்களைப் போக்குகிறது.

இயேசுவின் பெயர் நோய்களை நீக்குகிறது என்னும் செய்தியையும் நற்செய்தி நூல்களில் பார்க்கின்றோம். இயேசுவே, தாவீதின் மகனே, எனக்கு இரங்கும் என இயேசுவின் பெயரை உரக்கக் கத்தி இரைஞ்சிய பார்வையற்ற பர்த்திமேயு மீண்டும் பார்வை பெற்றார் (மாற் 10:47-52) என வாசிக்கின்றோம்.

இயேசுவின் விண்ணேற்புக்குப் பிறகு, திருத்தூதர்கள் இயேசுவின் பெயரைச் சொல்லி வல்ல செயல்கள் பல நிகழ்த்தியதைத் திருத்தூதர் பணிகள் நூலில் பார்க்கின்றோம். பிறவியிலேயே கால் ஊனமுற்றிருந்த மனிதர் ஒருவரை திருத்தூதர் பேதுரு, "வெள்ளியும் பொன்னும் என்னிடமில்லை, என்னிடம் உள்ளதை உமக்குக் கொடுக்கிறேன். நாசரேத்து இயேசுகிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடந்திடும்" (தி.ப 3:6) என்று சொல்லி, அவரை நடக்க வைத்த நிகழ்வு அனைவரையும் வியக்க வைத்தது. அந்த நிகழ்வுக்கு விளக்கம் சொன்ன பேதுரு, இயேசுவின் பெயரே இவருக்கு வலுவூட்டியது. அவர் பெயர்மீது கொண்டிருந்த நம்பிக்கையால்தான் இது நடந்தது (தி.ப 3:16) என்று இயேசுவின் பெயருக்குள்ள ஆற்றலை மீண்டும் தெளிவுபடுத்தினார்.

### 3. இயேசுவின் பெயர் மீட்புப் பெறுவதற்கான ஒரே பெயர் :

இயேசுவின் திருப்பெயர்தான் மீட்பு பெறுவதற்கான ஒரே பெயர் என்பதைத் திருத்தூதர் பணிகள் நூலில் வாசிக்கின்றோம். இவராலேயன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை. ஏனென்றால், நாம் மீட்புப் பெறுமாறு வானத்தின் கீழ், மனிதரிடையே இவரது பெயரன்றி வேறு எந்தப் பெயரும் கொடுக்கப்படவில்லை (தி.ப 4:12) என்று பேதுரு தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு (4:8) உரைத்தார்.

### 4. இயேசுவின் பெயரால் கேட்பதையெல்லாம் தந்தை அருள்வார்:

நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதையெல்லாம் அவர் உங்களுக்குக் கொடுப்பார் (யோவா 15:16) என்று இயேசு தம் சீடரிடம் வாக்களித்தார்.



### 5. இயேசுவின் பெயர் தந்தைக்கு மாட்சி அளிக்கிறது:

மகன் தந்தைக்காற்றும் நன்றி இவன் தந்தை என்நோற்றான் கொல் எனும் சொல், அதாவது, "மகன் தந்தைக்குச் செய்யும் நன்றி இப்படிப்பட்ட மகனைப் பெறுவதற்கு இவன் தந்தை என்ன தவம் செய்தாரோ?" எனப் பிறர் பாராட்டும்வண்ணம் நடத்தல் என்றார் திருவள்ளுவர். இயேசு தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதையே தம் வாழ்வின் இலக்காகக் கொண்டிருந்தார். எனவே இறைத்தந்தையும் அவரில் பெருமகிழ்ச்சி கொண்டார். "என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" (மத் 17:5) என்று இயேசுவின் தோற்றம் மாறிய நிகழ்வின்போது இறைத் தந்தை வெளிப்படுத்தினார். இயேசுவும் நீங்கள் என் பெயரால் கேட்பதையெல்லாம் நான் செய்வேன். இவ்வாறு, தந்தை மகன் வழியாய் மாட்சி பெறுவார் (யோவா 14:13) என்று கூறினார்.

### 6. இயேசுவின் பெயருக்கு அனைவரும் மண்டியிடுவர்:

இயேசு சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்கு இறைத்தந்தைக்குக் கீழ்ப்படிந்ததால், தந்தை அவரைப் பெருமைப்படுத்தினார் என்று கூறும் பவுலடியார், எனவே, "கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். ஆகவே, இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர். தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக இயேசுகிறிஸ்து ஆண்டவர் என எல்லா நாவுமே அறிக்கையிடும்" (பிலி 2:9-11) எனச் சொல்கிறார்.

இத்தகையச் சிறப்புகள் மிக்க இயேசுவின் திருப்-பெயரை சொல்லி அவரைப் போற்றுவது நல்லதொரு செபமுறை. எனவே, இயேசுவின் திருப்பெயரை நம் நாவில் அடிக்கடி ஒலிக்கச் செய்வோம். இயேசுவே, உமக்குப் புகழ், இயேசுவே உமக்கு நன்றி என அடிக்கடி சொல்வோம். தும்மல், இருமல், செருமல் வரும்போது இயேசுவே, காப்பாற்றும், இயேசுவே கடைக்கண் பாரும் என வேண்டும் நமது கத்தோலிக்க மரபைத் தொடர்ந்து பின்பற்றுவோம். நமது வேண்டுதல்கள் அனைத்தையும், இயேசுவின் வழியாய்த் தந்தைக்கு ஒப்புக்கொடுப்போம். இயேசுவின் திருப்பெயரைச் சொல்லியே நமது அனைத்துப் பணிகளையும் தொடங்குவோம். செய்வோம், நிறைவுசெய்வோம்.

இயேசு என்னும் தூய பெயரோடு, இயேசுவுக்கு வழங்கப்பட்ட பிற சிறப்புப் பெயர்களையும் சொல்லி இயேசுவைப் போற்றுவது இனிமை தரும் ஓர் அனுபவம். பழைய ஏற்பாட்டின் பின்புலத்திலும், புதிய ஏற்பாடு இயேசுவை அறிமுகப்படுத்தும் பல கோணங்களிலிருந்தும் இயேசுவுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புப் பெயர்களை அறியவருகின்றோம். இதோ அவற்றுள் சில;

### இயேசுவுக்குப் பிறர் கொடுத்த சிறப்புப் பெயர்கள்

நற்செய்தி நூல்களின் பல இடங்களில் இயேசுவைப் பல்வேறு பெயர்களில் மக்கள் அழைத்த-தைக் காண்கிறோம். திருமுழுக்கு யோவான் அவரை, "கடவுளின் செம்மறி, ஆட்டுக்குட்டி" (யோவா 1:29) என்று அழைத்தார். நத்தனியேல் அவரை, "இறைமகன், இஸ்ரயேலின் அரசர்" (யோவா 1:49) என்றார். நள்ளிரவில் அவரைச் சந்தித்த நிக்கதேம் இயேசுவை, "ரபி போதகர்" (யோவா 3:2) என்று அழைத்தார். சீமோன் பேதுரு அவரை, "நிலைவாழ்வு தரும் வார்த்தை" (யோவா 1:16, 68) என்றார். யோவான் நற்செய்தியின் தொடக்கமும் அப்படியே சொல்கிறது.

பிறவியிலேயே பார்வையற்ற மனிதர் இயேசுவால் பார்வை பெற்றபோது, அவரை "இறை-வாக்கினர்" (யோவா 9:17) என்று கூப்பிட்டார். பார்வையற்ற பர்த்திமேயு "தாவீதின் மகன்" (லூக் 18:38) என்று கத்தி அழைத்துப் பார்வை பெற்றார். தீய ஆவிகளும் இயேசுவை அறிந்திருந்தன. "உன்னத கடவுளின் மகன்" (மாற் 5:7) என்று தீய ஆவி பிடித்த மனிதர் ஒருவர் அறிக்கையிட்டார். அதுபோல் இன்னொருவர், "கடவுளுக்கு அர்ப்பணமானவர்" (மாற் 1:24) என்று சொன்னார். தாம் யார் என்று தம் சீடரிடம் இயேசு கேட்டபோது, அவர்களின் சார்பாக சீமோன் பேதுரு "மெசியா, வாழும் கடவுளின் மகன்" (மத் 16:16) என்று அறிக்கையிட்டார். உயிர்த்த இயேசுவை தோமா கண்டபோது, "ஆண்டவர், கடவுள்" (யோவா 21:28) என்று அறிக்கையிட்டார்.

### இயேசு தமக்குத் தாமே கொடுத்த பெயர்கள்.

இயேசு தம்மையே பல பெயர்களால் அழைத்துக் கொண்டதை நற்செய்தி நூல்கள் பதிவு செய்திருக்கின்றன. சமாரியப் பெண்ணிடம் தாம் "வாழ்வுதரும் தண்ணீர்" (யோவா 4:10) என்று சொன்ன இயேசு, யூதர்களிடம் தம்மை "வாழ்வின் ஊற்று" (யோவா 5:26) என்றார். அழிந்துபோகும் உணவுக்காக உழைக்காமல், அழியாத வாழ்வு தரும் உணவுக்காக உழைக்கச் சொன்ன இயேசு, தம்மையே "வாழ்வு தரும் உணவு" (யோவா 6:51) என்று சொல்லி அவர்களை வியப்பில் ஆழ்த்தினார். மேலும், தம்மை "நல்ல ஆயன்" (யோவா 10:11) என்றும், "நண்பர்களுக்காக உயிரையே கொடுக்கும் நல்ல நண்பர்" (யோவா 15:15) என்றும் சொன்னார். உவமை வழியாகத் தம்மை "உண்மையான திராட்சைச் செடி" (யோவா 11:25) எனவும், "வழியும், உண்மையும், வாழ்வும்" (யோவா 14:6) என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி 15ம் பக்கம்

# மகிழ்ச்சியான குடும்ப வாழ்வு இறைவனின் அழைத்தலாகும்



## புரட்டாதி மாதம் மூன்று நாட்கள் தலவிலையில் நடைபெற்ற குடும்ப ஒன்று கூடல்

இலங்கையின் ஆயர் மன்றத்தின் குடும்பநல அப்போஸ்தலிக்க குழுவின் இயக்குனர் அருட்தந்தை குளோட் நோனிஸ் அடிகளாரின் அனுசரணையுடன் ஒழுங்கு செய்யப்பட்டு 12 மறைமாவட்டங்களும் இணைந்து தமிழ் - சிங்கள மொழிகளில் தனித்தனியாகப் பிரிந்து செயல்படும் குடும்ப ஒன்றிணைப்பே இந்த ஞான ஒடுக்கமாகும்.

தலவில புனித பூமியில் 21ம் திகதி வெள்ளிக்கிழமை 3 மணிக்கு தேநீருடன் ஆரம்பமானது. தேவாலய முற்றத்திலே சிறியோர், இளையோர், பெற்றோர், பெரியோர் தமிழ் - சிங்கள மொழியினர் அனைவரும் கூடி நின்றபோது குத்துவிளக்கு ஏற்றி அறிமுக உரையுடன் தொடங்கப்பட்டது.

அறிமுக உரை அனுராதபுர மறைமாவட்ட மேதகு ஆயர் நோபட் அந்திராதி ஆண்டகையும், தமிழ்மொழயில் அறிமுக உரையை பதுளை மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை யூஜின் பெனடிக் அடிகளாரும் நிகழ்த்தினர்.

இவர்களின் உரையில் “அழைத்தல்” என்றால் குருக்கள் துறவறத்தார் மாத்திரமல்ல, “சந்தோசமான, மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கை வாழ” குடும்பங்களும் “அழைத்தல்” பெறுகின்றனர்.

அந்த சந்தோஷமான - மகிழ்ச்சியான குடும்ப வாழ்வின் தேடலே இந்த மூன்றுநாள் கருத்தரங்காகும். இந்த சந்தோஷ குடும்ப வாழ்வின் தேடலை வருடத்திற்கு ஒருமுறை நடத்தி திருப்தி கொள்வது எமது நோக்கமல்ல. மூன்று வருடங்களாக ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் திருமணம் முடித்த தம்பதிகளுக்கான கருத்தரங்கு நடத்தப்படுகிறது. இறைவனோடு இணைந்த குடும்பம் இந்த மகிழ்ச்சியை உரிமையாக்கிக் கொள்கின்றனர் என்று கூறி இந்த மூன்று நாட்களிலும் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிலும் தமது பிள்ளைகளை பங்குகொள்ள ஊக்கப்படுத்துவதுடன் பெற்றோரும் பெரியோரும் தங்களுக்கான நிகழ்வுகளில் முழுமையாகப் பங்கு கொண்டு முழுமையான பலனை அனுபவிக்குமாறு அழைப்பு விடுத்தார்.

பின்பு பி.ப 4.45 மணி வரை இரு மொழிகளிலும் இணைந்து செபமாலை தியானிக்கப்பட்டது. மாலை 5 மணிக்கு தமிழ் மக்களுக்கு லூர்து குகையிலும் பச்சாத்தாப உரையுடன் வழிபாடு ஆரம்பமானது.

தமிழில் அருட்தந்தை அல்வின் பீட்டர் அவர்களினால் வழிநடத்தப்பட்டது. இவர் கண்டி அம்பிட்டி குருமடத்தில் பல வருடங்களாக கடமையாற்றியவரும் குருக்கள், துறவறத்தார்களுக்கு கருத்தரங்குகள் நடத்துபவரும், பல இடங்களுக்குச் சென்று சொற்பொழிவு ஆற்றுபவருமாவர்.

பச்சாத்தாப வழிபாட்டில் 1கொரி.13:4 “அன்பு பொறுமையுள்ளது, நன்மை செய்யும், பொறாமைப்படாது, தற்புகழ்ச்சி கொள்ளாது...” என்ற பகுதியை வாசித்து செபத்துடன் ஆரம்பித்தார். பச்சாத்தாப வழிபாட்டின் இறுதியில் அனைவரும் எந்த பாவங்களையும் மறைக்காத முழுமையான ஒரு நல்ல ஒப்புரவு அருட்சாதனம் பெற அழைப்பு விடுத்தார். அன்று இரவு 11 மணிவரையும் அடுத்தநாளும் மூன்று மொழிகளிலும் ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்பட்டது.

22ம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு செபவழிபாடு ஆரம்பமானது. அருட்தந்தை கிறிஸ்றிடோல் அவர்களினால் வழிநடத்தப்பட்டது.

“இயேசுவின் காலைப் பொழுது எவ்வாறு ஆரம்பமானது?, இயேசு விடியற்காலையில் கருக்களிலே தந்தையுடன் உரையாட, தந்தையுடன் தனித்திருக்க தனியாகவே செல்கிறார். புனித மாற்கு 7:35 நாமும் ஒவ்வொரு நாளும் அதிகாலையில் இறைதந்தையுடன் தனித்து, இணைந்து அவரின் பிரசன்னத்திலே திளைத்திருப்போம் என்றார்.

காலை 7 மணிக்கு ஆலயத்தில் இருமொழி-களிலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலி மறையுரையின்போது “சந்தோஷமான குடும்ப வாழ்வு வாழ ஏற்படும் தடைகளை இனம் கண்டு அவற்றை எம்மில், எமது குடும்பத்திலிருந்து அகற்றுமாறு தொடர்ந்தார்.

காலை உணவின் பின்பு சிறியோர், இளையோர், பெற்றோர், பெரியோர்களுக்கு தனித்தனியான இடத்தில் அதற்கான ஏற்பாடாக்கிய அருட்தந்தையுடன், அருட்சகோதரிகள், பொதுநிலையினரினால் நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

உரை நிகழ்த்த அருட்தந்தையர்களான றெக்ஸ் கொண்ஸ்டைன், லூயிஸ் அடைக்கலம், நவரட்ணம், ஜெகநாதன், எட்வட், பேராசிரியர் ஜோகராஜா ஆகியோரால் நிகழ்த்தப்பட்டது. பெற்றோருக்கான உரையில் அருட்தந்தை றெக்ஸ் கொண்ஸடன்டைன் அடிகளாரின் உரையில் பெற்றோர்களைப் பார்த்து, “நீங்கள் திருமணம் முடித்ததற்காக சந்தோஷ-ப்படுகிறீர்களா?” எனக்கேட்டு ஆரம்பித்தார்.

23ம் திருத்தந்தை அருட்பொழிவு செய்யப்பட்ட அன்று, அவரின் பெற்றோர் அவரின் மோதிரத்தை முத்திமிட முன்பு, அவர் அவர்களிடம் சென்று திருமண மோதிரத்தை முத்தமிட்டு “நீங்கள் திருமணம் முடிக்க வில்லை என்றால் நான் திருத்தந்தையாக வர முடியாதிருந்திருக்கும்” என்றார். மேலும் பல அனுபவங்கள் மூலம் தமது பிழைகளை இனம் கண்டு அதிலிருந்து வெளியில் வர உதவியுடன் “பிள்ளைகளை அன்பு செய்ய பெற்றோரை விட யாராலும் முடியாது என்றும், அதேபோல் பிள்ளைகளை கொடுமைப்படுத்துவதிலும் பெற்றோரை மிஞ்ச யாராலும் முடியாது” எனக் கூறி முடித்தார்.

அதை தொடர்ந்து அருட்தந்தை லூயிஸ் அடைக்கலம் அடிகளார், “ஆண்டவரை அறிந்து அன்பு செய்வதால் எமக்கு பேரின்ப வாழ்வு கிடைக்கிறது, மண்ணகத்தில் விண்ணகத்தைக் காண வேண்டும் என ஆரம்பித்தார். பின்பு பேராசிரியர் யோகராஜா அவர்கள் “ஆளுமை விருத்தியாக உடல் ஆரோக்கியமும் மன முதிர்ச்சியும் இருக்க வேண்டும். உணர்வுகளை சரியான முறையில் வெளிப்படுத்த வேண்டும் என்றும், அருட்தந்தை றுக்கலஸ் அடிகளாரும் அருட்தந்தை போல் றொபின்சன் அடிகளாரும் குணப்படுத்தல் வழிபாடு நடத்தப்பட்டது.

“கவர்ச்சி, சுவை, அறிவு” மூன்றையும் அதிகமாக தேடும்போது குடும்பத்தில் பிளவு ஏற்படுகிறது என்றும் பரிசுத்த வேதாகமத்தில் உள்ள சில குடும்பங்களை எடுத்துக்காட்டியும் வழிநடத்தினர்.

23ம் திகதி ஞாயிறு காலை செபவழிபாடு அருட்தந்தை கிளேயர் அவர்களால் வழிநடத்தப்பட்டது. தி.பா. 5:1-12, 119:105-120, 34 ஆகிய பகுதிகளை செபமாக பாடல் குழுவின் உதவியுடன் வழிநடத்தினார்.

பின்பு அருட்தந்தை பெனி சவரிமுத்து அடிகளாரினால் மூன்று நாட்கள் நிகழ்வுகள் சுருக்கமாக பொழியப்பட்டது. பின்பு மேதகு ஆயர் வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகையின் தலைமையில் இருமொழிகளிலும் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. மதிய உணவுடன் கருத்தரங்கு நிறைவுபெற்றது.

**“மகிழ்ச்சியான குடும்ப வாழ்வு இறைவனின் அழைத்தலாகும்”**

**ஆக்கம்:-அனஸ்லின்**

## மேரிமாதா எமக்காய் இறைவனிடம் மன்றாடும்



மேரி மாதா நீயே எம் தஞ்சம்
மேலுலகும் போற்றிடும் உம் மலர்ப்பாதம்

இறைவனின் தாயாகும், பெற்றீர் வரம்
இறைவனே உம் மடியில்
உறங்குகையில் – நான்
என்னென்று சொல்வேன் உம்
குளிர்ந்து மனம்

ஓர் குழந்தையை பெற்று வளர்த்தெடுப்பதில்
இருக்கும் திறம்
அந்த அன்னைக்கு மட்டுமே தெரியும் அதன் கனம்.
கைப்பிடித்து இயேசு ஆண்டவரை
அழைத்து சென்றிருப்பீர் தினம்
கதைகள் சொல்லி, பாடல் பாடி – அம்மை
மகிழ்ந்திருப்பீர் நாளும்

அழகிய ஆடை அணிவித்து
இரசித்திருப்பீர் தினம் – அம்மா
நீர் நீராட்டி, சீராட்டி
அமுதூட்டியிருப்பீர் உம் அன்புக் கரம்
ஆண்டவருக்கு பக்கபலமாயும்
இருந்திருப்பீர் என்றும்

பிள்ளை அழுகையில் தாயும் அழுவாள்
அவன் சிரிக்கையில் தாயும் சிரிப்பாள்
உம் மகன் சிரிக்கையில் நீரும் சிரித்தீர்
அவர் பாடுகள் பட்ட வேளையில்
எல்லோரிலும் பார்க்க மிகுந்த வேதனைப்பட்டிருப்பீர்
இரத்தத்தைப் பாலாக்கி
இறைவனுக்கு அளித்த
‘அம்மா’

உம் இரத்தமே இறைவனின் உடலில்
தூய இரத்தமாய் ஊறுகின்றது.
இறைவனுக்கு மிக நெருங்கிய
உறவு நீர் தானே
‘தாயே’
இறைவனின் தாயாகும் பெரும்
வரம் பெற்ற
‘அன்னையே’
இன்னல்கள் நிறைந்த எம் வாழ்வு இனிதாய் மாற
உம் பிள்ளைகள் எமக்காய் இறைவனிடம் மன்றாடும்
‘மேரி மாதா’
எமக்காய் இறைவனிடம் மன்றாடும்.

P.M. மேரி பெனடிக்கா
பென்றித், அவிசாவளை

## 01 அனைத்தையும்....

### அனைத்தையும் இழக்கத் துணிந்த புனிதர்கள்

அனைத்தையும் இழக்கத் துணிவு கொண்டு, இயேசுவை மட்டுமே பின்பற்ற விழைந்த புனிதர்கள், பாரம் ஏதுமின்றி, சுதந்திரமாக, மகிழ்வாக வாழ்ந்தவர்கள் என்று கூறியத் திருத்தந்தை, ஒவ்வொரு புனிதரையும் தனிப்பட்ட வகையில் குறிப்பிட்டு, அவர்களைப்பற்றிய. சில எண்ணங்களைப் பகிர்ந்துகொண்டார்.

### திருத்தந்தை 6ம் பவுல், பேராயர் ரொமேரோ

திருத்தூதர் பவுலின் பெயரைத் தாங்கிய புனிதத் திருத்தந்தை 6ம் பவுல், அந்தத் திருத்தூதரைப் போலவே, புதிய பகுதிகளை தன் நற்செய்தியால் வென்றவர் என்றும், புனிதம் என்ற நிலைக்கு நாம் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை தன் உரைகளிலும், எழுத்துக்களிலும் உரைத்தவர் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குறிப்பிட்டார்.
பேராயர் ரொமேரோ அவர்கள், தன்னுடைய பதவி வழங்கிய பாதுகாப்பைத் துறந்து, தன் உயிருக்கு வந்த ஆபத்தையும் பொருட்படுத்தாமல், வறியோருடன் தன்னையே அடையாளப்படுத்திக் கொண்டதால், நற்செய்தியை தன் வாழ்வாக மாற்றியவர் என்று திருத்தந்தை குறிப்பிட்டார்.

### ஏனைய ஐந்து புனிதர்கள்

அதேவண்ணம், அருள்பணியாளர்களான பிரான்செஸ்க்கோ ஸ்பிநெல்லி, மற்றும், வின்சென்சோ ரொமானோ, அருள் சகோதரிகளான மரிய கத்தரீனா காஸ்பெர், நசாரியா இஞ்ஞாசியா, நேபிள்ஸ் பகுதியிலிருந்து வந்த இளையவர், நுன்சியோ சுல்பிரிசியோ ஆகிய ஐவரும், இறைவனுக்காகவும், அயலவருக்காகவும் தங்களிடமிருந்த அனைத்தையும் தியாகம் செய்தனர் என்பதை, தன் மறையுரையின் இறுதியில் கூறி முடித்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

## 03 மறைபரப்புவோமா...

திருவிவிலியம் வாசித்து தியானிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி உள்ளோமா? எங்கள் வீடுகளில் செபிப்பதற்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி, அதனை நாள்தோறும் தவறாமல் பிரமாணிக்கமாக நடைமுறைப்படுத்தலாமே. மேலும் புனிதையினுடைய வாழ்வில் பல துன்பங்கள் தன் சிறுவயதில் தன் தாயை இழந்தார். அறிவான மாணவியாக இருந்தமையினால் சக மாணவிகளின் பொறாமைக்கு ஆளானார். எப்பொழுதும் பதற்றத்தோடு காணப்படுகிற நிலை. சிறு வயதிலேயே காசநோய், இன்னும் துறவு மடத்தில் சக துறவிகளின் பொறாமை. இப்படி பல துன்பங்களை கண்டவர். ஆனால் இவைகளில் இறைவனின் கரத்தைக் கண்டவர். ஆன்மாக்களின் மீட்புக்காக, குருக்களின் தூய்மைக்காக இவைகளை பொறுமையுடன் ஏற்றுக்கொண்டவர். இவருடைய வாழ்வைப் போன்று நானும் வாழ முடியுமா? சில வேளைகளில் எனக்கு துன்பத்தின் மேல் துன்பம் ஏற்படும்போது இறைவனை விட்டு தூர விலகிவிடுகின்றேனா? அல்லது இறைவ-னையே இறுகப் பற்றிக் கொள்கின்றேனா? பார்த்தீர்களா நமது வீட்டுக்குள்ளேயே நாம் மறைபோதக பணிதனை ஆற்றமுடியும். இன்று நற்செய்தியினை அறிவிப்பது, போதிப்பது இறை ஊழியர்களுக்கு மட்டுப்படுத்தப்படமுடியாது. அது திருமுழுக்கு பெற்ற அனைவரினதும் கடமை ஆகும். இன்று மறைபோதக பணிக்கான தளம் நமது இல்லங்களே. அன்றாடம் நம் இல்லங்களில் நற்செய்தியின் விழுமியங்களை வாழ்வாக்குவது, கிறிஸ்துவுக்கு சான்றுபகர்தலாகும். அவ்வாறு நானும், என் குடும்பமும் வாழும்போது கிறிஸ்துவின் வார்த்தைகள் நிஜமாகும்.

**"நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள்.... நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்" (மத் 5:13-14)**

## 04 கன்னி மரியாவின்...

உலகமயமாக்குதல் நிறைந்த இந்த சமுதாயத்தில் அனைத்தும் அவசரமாக்கப்பட்டுள்ளது. தலைமுறைக்கு இடையே உள்ள கலாச்சார தூரம் மிகவும் அதிகரித்துவிட்டது. பிள்ளைகளுக்காக அதைவிட பிள்ளைகளுடன் சேர்ந்து செபமாலை செபிக்க வேண்டும். இளம் வயதிலிருந்தே குடும்ப செபமாலை செபிக்கும் அனுபவத்தைப் பயிற்றுவிக்க வேண்டும். செபமாலையை சரியான முறையில் அறிமுகம் செய்துவைத்தால் இளம் வயதினர் இச்செபத்தை அவர்களுடைய சொந்த செபமாக மாற்றிக்கொண்டு அவர்களுடைய வயதுக்கே உரிய கிளர்ச்சி ஆர்வத்துடன் செபமாலை செபித்து பெரியவர்களை வியப்புக்குள்ளாக்குவர். கிறிஸ்தவ சமூகத்தில் செபமாலை மீண்டும் கண்டுபிடிக்கப்பட உண்மையில் மிகவும் தகுதிப் பெற்றது.


## செப உதவி

உங்கள் உடல், உள, ஆன்மீக தேவைகளுக்காகவும், ஏனைய தேவைகளுக்காகவும் இறைவேண்டல் செய்ய

**0772613670** என்ற கையடக்கத் தொலைபேசிக்கு குறும்செய்தி அனுப்பலாம். உங்கள் தேவைகள் மட்டில் கண்டிப்பாக இரகசியம் காக்கப்படும். (N3709)


## 06 கிறிஸ்தவ மணவாழ்வில்...

இருந்தாலும் ஒரே கடவுளாக உள்ள பரம ரகசியத்தைச் சரியாக விளக்க இவ்வுலகில் எடுத்துக்காட்டே இல்லை. இருப்பினும் அவர்கள் மூவரும் தத்தமது தன்மைகளை இழந்து போகாமல் ஒருவரோடொருவர் கொள்ளும் அன்புறவு ஐக்கியத்தின் விளைவால் ஒரே கடவுளாக உள்ளார்கள். இந்த அற்புதத்தை வைத்து, கணவன் மனைவி உடல் உறவை ஒருவாறு புரிந்து கொள்ளலாம். திருமண உறவின் மூலம் ஒருவர் ஒருவருக்குத் தம்மிடம் உள்ளதைக் கொடுத்துக் கொள்வதோடு தமது உணர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் தேவையானதை எடுத்துக் கொள்கிறார்கள். இதனால் இருவரும் தத்தமது ஆளுமையை இழந்து போகாமல் அன்பால் பிறந்த ஐக்கியத்தை வளர்க்கிறார்கள்.

கணவனும் மனைவியும் கிறிஸ்துவை தாம் இருவரும் கொள்ளும் உடலுறவில் மிக நெருக்கமாகவும், அந்நியோன்னியமான முறையிலும் சந்திக்கிறார்கள். திருமணம் என்னும் திருவருட்சாதனத்தின் உயிராக உள்ளது திருமணத்திற்கே உரிய உடல் உறவு. ஆகவே உடலுறவு கொள்ளும் ஒவ்வொரு முறையிலும் இருவரும் ஒருவர் ஒருவருக்குத் தம்மையே கொடுத்துக் கொள்வதாலும், இருவரும் சேர்ந்து தம்மைக் கடவுளுக்கு அர்ப்பணிப்பதாலும், இவ்வாறு உள்ளமெல்லாம் ஒன்றாகி உடலும் ஒன்றாகும் இவ்வுறவில் திருத்துவமான கடவுளின் பரம இரகசிய நிலை நிழலாடுவதாலும் அவர்களது உடலுறவே அவர்கள் கடவுளுக்கு ஒப்புக் கொடுக்கும் செபமாகவும், தமது காணிக்கையாகவும் இருந்திட முடியும்.

**பாலுறவில் சில கடமைகள் உள்ளன.**

1. வெறும் உடல் சார்ந்த உறவாகப் பாலுறவு இல்லாமல் அன்பை வெளிப்படுத்தும், ஒருவரை ஒருவர் குணப்படுத்தும், ஒருவரை ஒருவர் உயர்த்தும் சாதனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். வெறும் சுயநல சிற்றின்பத்துக்காக மேற்கொள்ளக்கூடாது.

2. பால் உணர்ச்சியைக் கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பெறுவதும் முக்கியமாகும். வேண்டும் பொழுதெல்லாம் பால் வேட்கையைக் கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பெறுவது அவ்வளவு கடினம் அல்ல. அன்புள்ள இடத்தில் ஆற்றல் தானாகப் பிறக்கும். தனது துணையின் நலத்திலே மிக அக்கறை செலுத்தும்.

## 13 இயேசுவைப்....

### பழைய ஏற்பாட்டின் பின்புலத்தில் இயேசுவுக்கு வழங்கப்படும் பெயர்கள்.

எசாயா இறைவாக்கினரின் இறைவாக்கின்படி இயேசுவை இம்மானுவேல் (மத் 1:23, எசா 7:14) அமைதியின் இளவரசர் (எசா 9:6), வியத்தகு ஆலோசகர் (எசா 9:6), வலிமைமிகு இறைவன் (எசா 9:6), என்னுமுள்ள தந்தை (எசா 9:6) என்னும் பெயர்களால் அழைக்கலாம். மேலும், வான்படைகளின் ஆண்டவர் (திபா 84:1) போன்ற பழைய ஏற்பாட்டுப் பெயர்களும் இயேசுவுக்குப் பொருந்தக் கூடியவையே.

**திருமடல்களில் இயேசுவுக்கு வழங்கப்படும் பெயர்கள்.**

புதிய ஏற்பாட்டின் திருமடல்கள் இயேசுவுக்குத் தரும் பெயர்கள் சிறப்பானவை. அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் (எபி 13:8) என்று மகிழ்கிறது எபிரேயர் திருமடல். பேதுருவோ, "உயிருள்ள கற்பாறை" (1பேது 2:4) என்று அழைக்கிறார். பவுல் அடியாரோ "புதிய ஆதாம்" (உரோ 5:14), "அடித்தளம்" (1கொரி 3:11), "பாறை" (1கொரி 10:4), "அமைதி அருள்பவர்" (எபே 2:14) என்னும் பெயர்களால் இயேசுவைப் பெருமைப்படுத்துகிறார்.

### திருவெளிப்பாடு நூலில் இயேசுவுக்கு வழங்கப்படும் பெயர்கள்

திருவிவிலியத்தின் இறுதி நூலான திருவெ-ளிப்பாடு சில சிறப்பான பெயர்களில் இயேசுவை அறிமுகப்படுத்துகிறது. நம்பிக்கைக்குரிய சாட்சி (1:4), ஆமென் எனப்படுவர் (3:14), யூதா குலத்தின் சிங்கம், தாவீதின் குலக்கொழுந்து (5:5), நம்பிக்கைக்குரியவர், உண்மையுள்ளவர் (19:11), கடவுளின் வாக்கு (19:13), அரசர்க்கெல்லாம் அரசர், ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவர் (19:16), அகரமும், னகரமும், தொடக்கமும், முடிவும் (21:6), ஒளி படைத்த விடிவெள்ளி (22:16) என்னும் பெயர்களால் இயேசுவைப் போற்றுகின்றது.

இந்த விவிலியப் பெயர்களோடு, இயேசுவை நம் வெற்றி, நமது ஞானம், அடைக்கலம், மருத்துவர், ஆறுதல், மகிழ்ச்சி, முழுமை, நிறைவு, பாடல், நாயகன், நமது அனைத்தும் என்னும் பெயர்களாலும் இயேசுவை அழைக்கின்றோம். இந்து சமயத்தில் கடவுளுக்கு "சகஸ்ர நாமம்" என்றொரு பெயர் உண்டு. அதாவது, ஆயிரம் பெயர் கொண்டவர் இறைவன். இயேசுவும் அப்படியே. அவருக்கும் பலப் பல பெயர்கள் இருக்கின்றன. அத்தனை பெயர்களாலும் அவரை அழைத்துப் போற்றிப் பெருமைப்படுத்துவது நமது இனிய கடமை அல்லவா!

## 08 அன்பினால்...

இவ்வுலகில் சிறிய சிறிய அன்பியக் குழுக்களாக மலரச் செய்கின்றோம். அன்புடையார் என்றும் தமக்குரியார் அன்பில்லாதார் என்றும் உரியர் பிறர்குரியர் என்ற திருவள்ளுவர் வாக்கிற்கேற்ப அன்பின் செய்தியாகிய நற்செய்தியை நாம் ஒவ்வொருவரும் அன்பு நிறைந்த மனங்களினால் நற்செய்தியை மலரச்செய்யவேண்டும். இதோ ஆண்டவரின் அடிமை உமது வார்த்தையின்படி எனக்கு ஆகட்டும் என்ற மரியாவின் வார்த்தைகள் எமது மீட்புத்திட்டத்தில் மிகவும் பங்கு வகிக்கின்றது. அவர் சொல்வதை யெல்லாம் செய்யுங்கள் எனும் வார்த்தை நற்செய்தி அறிவிப்புப்பணிக்கு தேவையான அடிப்படை பண்புகள் தாழ்ச்சி அன்பு எனக் காட்டுகின்றது. மரியாவின் இந்த மனநிலையும் செயல் பானியையும் தமது வாழ்வுக்கு பலபாடங்களை புகட்டுகின்றன. பிறரை வாழவைப்பதனால் தான் நாமும் உண்மையில் வாழ்கின்றோம். அவர்கள் உயர உதவும் போதுதான் நாமும் உண்மையில் உயருவோம். மறைப்பார்வையில் இது தெரியாமல் இருக்கலாம். ஆனால் இறைவன் பார்வையில் இதுவே உண்மை இதுவே சிறந்தநற்செய்தி ஆகின்றது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அன்பின் மகிழ்வு என்ற திருத்தூது ஊடக உரையின் அலகு 5இல் இலக்கம் 183, 184இல் இவ்வாறு கூறுவார் குடும்பத்தின் அன்பானது சமூகத்தில் உள்ள வளமற்றவர்கள் புறந்தள்-ளப்பட்டவர்கள் மீதும் காட்டப்பட வேண்டும். அதனால் குடும்பம் உலகை தனது வீடாக மாற்றுகின்றது. பிரமாணிக்கமுள்ள குடும்பங்கள் கடவுளின் அன்பினை பல்வேறுபட்ட வழிகளில் உலகிற்கு காண்பிக்கிறார்கள். இன்று நாம் நற்செய்தி அறிவிப்புப் பணியில் ஈடுபடும் போது இது எமக்கு பெரிய சவாலாக உள்ளது. இன்று குடும்பங்களில் அன்பு இல்லை, விட்டுக்கொடுத்தல் இல்லை, உண்மையான உறவு இல்லை ஆகவே உண்மை-யான உறவு, மன்னிப்பு, விட்டுக்கொடுத்தலை நாம் ஒவ்வொருவருடைய உள்ளங்களிலும் விதைக்கும்போது எமது சொல்லும், செயலும் நற்செய்தியாகி வாழ்வு மலர்கின்றது. இதயத்தில் ஈரமும், மூளையில் விரைவும், இரத்தத்தில் சூடும், ஆன்மாவில் அமைதியும் இருந்தால் பணிவாழ்வு சிகரத்தின் உச்சியைத் தொடுவதுடன் வானம் கூட நம் வசப்படும்.

பல்லுக்குப்பல் என்று இல்லாமல் நற்செய்தி வழி என்று உன் எதிரிக்கும் உதவிசெய், உன்னை வெறுப்பவர்க்காக இறைவனிடம் வேண்டவும் நாம் அழைக்-கப்படுகின்றோம். அன்பைப் போதிக்கவே ஞானிகளும், இறைவாக்கினர்களும், மகாத்மாக்களும் இவ்வுலகில் தோன்றினர். அன்பு நிலையானது உலகை ஆளவல்லது. அன்பினால் செய்யும் எந்தவொரு சிறுசெயலும் உயிரைவிட மேலானது. அதுவே ஒரு நற்செய்தியாகின்றது. எத்தகைய பெரிய பெரிய காரியங்களை சாதனைகளாகச் சாதித்தோம் என்பதல்ல எதையும் எப்படிப்பட்ட அன்புடன் எந்த மனநிலையில் செய்தோம் என்பது தான் முக்கியம். இயேசுவின் அன்பு ஒரு சுயநலமற்ற ஒரு வெளிப்பாடான நற்செய்தியாக இருக்கிறது. அவர் எதை வாழ்ந்தாரோ அதையே போதனையாகப் போதித்தார். நாமும் எமது வாழ்வு மூலம் நற்செய்தியை அறிவிப்போம். எம் வாழ்வே நற்செய்தியாக அமையட்டும் அப்போது நாமும் யேசுவின் நல்ல செய்தியை இவ்வுலகில் மலரச் செய்பவர்களாக மாறுவோம். "உலகெங்கும் சென்று நற்செய்தியைப்பறை சாற்றுங்கள்" (மாற்கு16:15) என்ற வார்த்தையானது திருமுழுக்குப்பெற்ற எம் ஒவ்வொருவரையும் பணிசெய்ய அழைக்கின்றது. கிறிஸ்துவைப்பற்றி அறிந்தாலொழிய அவரைப்பறை சாற்ற முடியாது. திருத்தூதர்கள் யேசுவோடு இருந்ததாலே அவர்கள் கண்டதையும்,கேட்டதையும், தொட்டு உணர்ந்ததையும், எடுத்துரைத்தார்கள். மேலுமாக பணிவிடைபெற அல்ல பணிவிடை புரியவே வந்தேன் (மத்தேயு 20:26) மூலம் யேசு நற்செய்தியைப்பறை சாற்றுகின்றார். இப்பணியை நாம் செய்வதற்கு முதலில் யேசுவின் மனநிலையைக் கொண்டிருக்க வேண்டும். பணிவு, தாழ்மை, கீழ்ப்படிவு இந்த அறப்பண்புகள் பணிவாழ்விற்கு சிகரம் போலாகும். எனவே அன்பை எமது ஆயுதமாகக்கையில் ஏந்தி நற்செய்தியை அறிவிப்போம். இதன் வழியாக உலகம் வாழ்வு பெறும். நற்செய்தியும் மனித மனங்களில் அன்பாக மலரும்.

## 08 பரிசுத்த பாப்பரசரின்...

மனித கலாச்சாரம் மற்றும் மத அமைப்பு இன்னும் கடவுளின் நற்செய்திக்கு வெளிப்பட்டதாக உள்ளது.

**அன்பிற்கு சாட்சியாகுவோம்**

திருச்சபைக்குள் வாழும் கிறிஸ்துவை தனிப்பட்ட முறையில் சந்திப்பதினை ஏற்படுத்திய அனைத்து குழுக்களுக்கும் நான் நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றேன். பங்குகள், சங்கங்கள், இயக்கங்கள், மதசமுதாயங்கள், அனைத்தும் பாப்பிறை மறைபரப்பு சபையின் பல்வேறு வெளிப்பாடுகள் ஆகும். பாப்பிறை மறைபரப்பு சபையானது இளம் இதயத்தில் பிறந்துள்ளது, இதன் பொருள் நற்செய்தியை பரப்புவதற்கு எல்லா நாடுகளும் உதவி செய்தலும், உண்மையான அறிவினை பெறுவதற்கு யாரெல்லாம் தாகமாய் இருக்கின்றார்களோ அவர்களுக்கு பங்களிப்பினை கொடுப்பதுமாகும். அன்பார்ந்த இளையோர்-களே வருகின்ற ஐப்பசி மாதம் மறைபரப்பு மாதமாகும். அன்றைய மகாநாடு உங்களுக்காக கூட்டப்படுகின்றது. இதன் நோக்கம் இன்னுமொரு சந்தர்ப்பத்தினை உங்களுக்கு கொடுத்து கிறிஸ்துவின் அன்பின் நற்செய்தியை உலகின் கடை எல்லை வரைக்கும் எடுத்துக் கூறவே. இதற்காக நாம் அனைவரும் அப்போஸ்தலரின் இராக்கினியிடமும், புனித பிரான்சிஸ் சேவியரிடமும், குழந்தை யேசுவின் திரேசம்மாளிடமும், முத்திப்பேறுபெற்ற பவுலோ மன்னாவிடமும் எமக்காக பரிந்துபேசும்படியும், எம்முடன் பயணிக்கும் படியும் வேண்டுவோம். **ஆதாரம் இணையத்தளம்**

# உடல் நோய்களுக்கு உணவே மருந்து



## இதயக்கோளாறு

இதயத்தில் உள்ள கொழுப்பை கரைக்க, சுண்டைக்காய் சாப்பிடுங்கள். எலுமிச்சை அல்லது நாரத்தை சாற்றில் சீரகத்தை ஊற வைத்து, உலர்த்தி பொடி செய்து சர்க்கரை கலந்து சாப்பிட்டால் இதய நோய் வராது.

திராட்சை, பப்பாளி, ஆப்பிள், மாதுளை, சீத்தா, ஆரஞ்சு மற்றும் நாவல் பழம் ஆகியவை இதயத்தின் நண்பர்கள்.

கறிவேப்பிலை, நெல்லி வற்றல், மாதுளை ஓடு, வெந்தயம் சம அளவு எடுத்து, வறுத்து, பொடித்து மோரில் கலந்து சாப்பிட்டால், இதய பலவீனம் சரியாகும். நெல்லி தயிர் பச்சடி, மணத்தக்காளி கீரை சாப்பிட்டால், குடல் புண் சரியாகும். கோவைக்காய் இதயத்துக்குப் பலம் கூட்டும்.

இதயக்கோளாறு உள்ளோர், கொத்தவரங்காய், உருளைக்கிழங்கு, காராமணி, கொண்டைக்கடலை ஆகியவற்றைத் தவிர்க்கவும்.

## இரத்த அழுத்தம்

உலர் திராட்சையை ஊற வைத்து, அந்த தண்ணீருடன் பசும் பால் கலந்து சாப்பிட இரத்த அழுத்தத்துடன், ஜனன உறுப்புகளின் அழுக்குகளும் வெளியேறுவதோடு, கல் அடைப்பு இருந்தாலும் குணமாகும். நெல்லி வற்றல், சந்தனம், திராட்சை மூன்றையும் தண்ணீரில் ஊற வைத்து, காலையில் லேசாக சூடுபடுத்தி வடிகட்டி சாப்பிடுவதன் மூலமும், நெல்லிக்காய், திராட்சை, சீத்தா பழம், நாவல், ஆரஞ்சு, நாரத்தை சாப்பிட்டாலோ, இரத்த அழுத்தம் வராது.

மேலும், இரத்த அழுத்தம் உள்ளோர், உருளைக்கிழங்கு, இஞ்சி, சீரகம், பெருங்காயம், முள்ளங்கி, புளிச்ச கீரை, சுண்டை வற்றல், மாங்காய், மாவடு ஆகியவற்றை தவிர்க்கவும் உப்பு, வெல்லம் குறைவாக சாப்பிடவும்.

## நீரிழிவு

பீர்க்கை, புடலை, பாகற்காய், அவரை, கோவைக்காய், பீன்ஸ், கத்தரிக்காய், வெண்டை, தக்காளி, வெங்காயம், முருங்கை, சுரைக்காய், கொத்தமல்லி, புதினா, கறிவேப்பிலை, இஞ்சி ஆகியவை சாப்பிட்டால் நீரிழிவு நோய் பிரச்சினையிலிருந்து தப்பலாம்.

அன்னாசி, ஆப்பிள், ஆரஞ்சு ஆகியவற்றை கொஞ்சமாக சாப்பிடலாம். கொய்யா, மலை வாழைப்பழம் சாப்பிட்டால் நீரிழிவு நோய் வராது.

கருணைக்கிழங்கு தவிர, மற்ற எல்லா வகை கிழங்குகள், பீட்ரூட், சீத்தாபழம், திராட்சை ஆகியவற்றை நீரிழிவு நோயாளிகள் தவிர்க்கவும்.

## பலமற்ற எலும்பு

கறிவேப்பிலை துவையல், முருங்கை கீரை சூப், பாகற்காய், பொட்டுக்கடலை, வெல்லம், எள்ளுப்பொடி, பருப்பு பொடி சாப்பாட்டில் சேர்த்துக் கொண்டால் எலும்புகள் வலுப்பெறும்.

தனியா, கடலை பருப்பு, காய்ந்த மிளகாய், வெங்காயம் ஆகியவற்றை தனித்தனியாக எண்ணெய் விடாமல் வறுத்தெடுத்து, உப்பு, பெருங்காயத் தூள் சேர்த்து மிக்சியில் பொடித்து, சூடான சாதத்தில் நல்லெண்ணெய் விட்டு பிசைந்து சாப்பிட்டால் உடலுக்கு கால்சியம் சத்து கிடைக்கும்.

தேங்காய், மாங்காய் சுண்டல், அன்னாசி பழம், பிரண்டை துவையல் சாப்பிட்டால் எலும்பு உறுதியாகும்.

கொத்தவரங்காய், கோவைக்காய், அவரை, பீன்ஸ் போன்ற கொடி வகை காய்களை, எலும்பு பலவீன பிரச்சினை உள்ளோர் தவிர்க்கவும்.

## ஆஸ்துமா

ஓமம் - 100 கிராம், திப்பிலி - 50 கிராம், வறுத்து, பொடித்து தேனில் கலந்து சாப்பிட்டால் சளி, கபம் வெளியேறும். நாள்பட்ட இருமல், மூச்சிரைப்பு சரியாகும்.

கத்தரிக்காய், கொத்தவரங்காய், பாகற்காய், உருளைக்கிழங்கு, முருங்கை, முட்டைக்கோஸ், கொஞ்சம் கேரட் இவற்றை சமைத்து, வெதுவெதுப்பான சூட்டில் சாப்பிடலாம்.




ஆப்பிள், பூவன் பழம், மலை வாழைப் பழம் கொஞ்சம் சாப்பிடவும். கொய்யா பழத்துடன் கறுப்பு உப்பு கலந்து சாப்பிட்டால் ஆஸ்துமா பிரச்னைக்கு நல்லது.

அஸ்துமா பிரச்னை உள்ளோர், குளிர்ச்சியை தூண்டும் வெள்ளரி, சுரைக்காய், பூசணி மற்றும் பீட்ரூட் போன்ற நீர்க்காய்களை தவிர்க்கவும். திராட்சை மற்றும் நேந்திரம் பழம் சாப்பிடக் கூடாது.

## சிறுநீரக கோளாறு

வாழைப்பூ, வாழைத் தண்டு, பீர்க்கை, சுரைக்காய், பூசணி, சவ்சவ் போன்ற நீர் காய்களை அதிகம் சாப்பிடுங்கள் அவரை, தட்டைப் பயிறு, பச்சை பயிறு, துவரை வகைகள், காசினி கீரை சாப்பிட்டால் கிட்னி பிரச்சினை வராது. பழங்கள் அனைத்தும் சாப்பிடலாம்.

பட்டை, சோம்பு, கரம் மசாலா மற்றும் மீல் மேக்கர் ஆகியவற்றை தவிர்க்கவும்.

## நரம்பு பலவீனம்

கோதுமை உணவுகள், சோயா, பச்சை பயறை வேக வைத்து, வெங்காயம், பூண்டு சேர்த்து சப்பாத்தியுடன் சாப்பிட்டால் நரம்பு பலவீன பிரச்சினை வராது.

கேழ்வரகு, மக்காச்சோளம், நவதானிய கஞ்சி நரம்பை முறுக்கேற்றும் பருப்பு உசிலி சாப்பிடலாம்.

வயிற்றுப்போக்கு உள்ளோர், ஆரோரூட் கஞ்சி சாப்பிட்டால் சரியாகும் நரம்புகளுக்கு வலு சேர்க்கும். புடலை, அவரை, பீர்க்கன், பூசணி மற்றும் குளிர்ச்சி தரும் சீத்தா பழம், கொய்யா, சாத்துக்குடி பழம் தவிர்க்கவும்.

## புற்றுநோய்

எளிதில் ஜீரணம் ஆகும் காய்கறிகள், பப்பாளி, மாதுளை, ஆப்பிள் (தோல் நீக்கி), நெல்லிக்காய், சின்ன வெங்காயம் மற்றும் பூண்டு நல்லது.

பெப்டிக் அல்சர், வயிறு தொந்தரவு, கேன்சர் உள்ளோர், பச்சை பயறு - 2 டம்ளர், அரிசி - 1 டம்ளர், காய்ந்த மிளகாய், உப்பு, பெருங்காயம் சேர்த்து ஊற வைத்து, தோசை மாவு பதத்தில் அரைத்து, தோசை செய்து, அவியல், வெண்ணெய் வைத்து சாப்பிடவும். உரம் போட்டு வளர்க்கும் காய்கறிகளை தவிர்க்கவும் இயற்கையாய் விளையும் காய்கறி, பழங்கள் சாப்பிட்டால், கேன்சர் வராது.



## கேரட்டின் நன்மைகள்

செரிமான பிரச்சினையால் அவஸ்தைப்பட்டால், ஒரு நாளைக்கு இரண்டு கேரட்டை சாப்பிட்டு வந்தால், விரைவில் செரிமான பிரச்சனை நீங்கும்.

கேரட்டில் பொட்டாசியம் அதிகம் இருப்பதால், இது இரத்த அழுத்தத்தினை கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொள்ள உதவும். இதில் விட்டமின் ஏ, கார்போஹைட்ரேட், தாது உப்புகள், மெலோனிசைட்ஸ் என்ற நிறமி அணுக்கள் இவற்றில் உள்ளன.

கேரட்டை பச்சையாகச் சாப்பிடும்போது அது உடலில் தீங்கிழைக்கும் கொழுப்பைக் குறைத்து உடலுக்கு நன்மை தரும் கொழுப்பை உருவாக்குகிறது.

இதயத்தை ஆரோக்கியமாக வைக்க கேரட் சாப்பிட்டால், கொலஸ்ட்ராலின் அளவானது குறைந்து, இதயத்திற்கு எந்த ஒரு பாதிப்பும் ஏற்படாமல் பாதுகாக்கும்.

ஆரோக்கியமான கண்களை பெற கேரட் சாப்பிட்டால், கண்களில் ஏற்படும் பிரச்சினைகளைப் போக்கலாம் என்பது அனைவருக்கும் தெரிந்தது தான். மேலும் மாலைக் கண் நோயை தடுக்கும். புற்று நோயிலிருந்து காக்க கேரட் உதவுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கேரட்டில் நார்ச் சத்து அதிகம் உள்ளதால் மிகுந்த நன்மை தருவதுடன் செரிமானத்தை தூண்டி நல்ல ஜீரண சக்தியை தருகின்றது. எனவே கேரட்டினை பச்சையாகவே நிறைய சாப்பிடலாம்.

பல் பராமரிப்பு கேரட்டை சாப்பிட்டு வந்தால், பற்களில் ஏற்படும் அனைத்து பிரச்சினைகளையும் தடுக்கலாம். அதிலும் குறிப்பாக ஈறுகளில் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் வாய் துர்நாற்றத்தில் இருந்து விடுபடலாம்.

# ஐஸ் கட்டிகளா ஐயோ வேண்டாமே!





“ஐஸ்கட்டிகள் பெரும்பாலும் நாம் நேரடியாக உண்பதற்காக தயாரிக்கப்படுவதில்லை. மாறாக, அது இன்னொரு உணவை பாதுகாக்க, பதப்படுத்த பயன்படுத்தப்படுகிற பொருள். ஆனால், இன்றைக்கு பழச்சாறு நிலையங்களில் அவைகளை நேரடியாக உடைத்து நாம் அருந்தும் பானத்தில் போட்டு தருகிறார்கள். இது தவறு” என்கிறார் மருத்துவர்.

குளிர்பானங்களோடு சேர்த்து அருந்து-வதற்காகத் தயாராகிற ஐஸ்கட்டிகள் சுகாதாரமா-னதாக, சுத்தமான நீரினால் செய்யப்பட வேண்டும். ஆனால், இப்படி சுத்தமான ஐஸ்கட்டி எல்லா இடங்களிலும் கிடைப்பது சாத்தியமில்லை. ஆனால், பெரும்பான்மையான மக்கள் இவ்வாறான ஐஸ் கட்டிகளை பயன்படுத்துவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கும்போது கடைகளில் தருகிற ஐஸ்கட்டி-களையே பயன்படுத்துகிறார்கள்.

அசுத்தமான நீரினை பயன்படுத்தும்போது ஏற்படும் காலரா, டைபாய்டு, போலியோ, கல்லீரல் பாதிப்பு வயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் சுகாதாரக் குறைவான ஐஸ்கட்டிகளை நேரடியாக பானங்களில் கலந்தும் உட்கொள்ளும்போதும் வர வாய்ப்பிருக்கிறது. முக்கியமாக உடலில் ஏற்படும் நோய்களில் 75 சதவீதம் குடிதண்ணீராலும் அசுத்தமான ஐஸ் கட்டிகளாலும்தான் வருகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

24 மணி நேரத்துக்கு மேல் தண்ணீரை வைத்திருந்தால் நோய்களை உண்டு பண்ணக்கூடிய பாக்டீரியா ஐஸ்கட்டியில் எளிதில் வளரும். அதுபோல இந்த ஐஸ் கட்டிகள் ஒரு நாளுக்கு மேல் பாதுகாத்து வைத்து நமக்கு தரப்படும்போது மேலே குறிப்பிட்ட நோய்கள் நம்மை தாக்குவதற்கு வாய்ப்பிருக்கிறது. அதனால் குளிர்பானங்களிலும், பழச்சாறுகளிலும் ஐஸ்கட்டிகளை போட்டு அருந்துவதை தவிர்த்துவிட்டு நேரடியாக அருந்துவது நல்லது. அப்போதுதான் பழச்சாறின் முழு பயனும் நமக்குக் கிடைக்கும் என்கிறார்.




**ஐப்பசி 14ம் திகதி காலை, வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தலைமையேற்று நடத்தும் திருப்பலியில், ஏழு அருளாளர்கள், புனிதர்களாக அறிவிக்கப்பட உள்ளனர்.**

அருளாளர்கள், திருத்தந்தை 6ம் பவுல், பேராயர் ஆஸ்கர் ரொமேரோ ஆகியோர் உட்பட, ஏழு அருளாளர்கள், ஐப்பசி 14, அன்று காலை, வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தலைமையேற்று நடத்தும் திருப்பலியில் புனிதர்களாக்கப்பட்டார்கள்.

1963ம் ஆண்டு முதல், 1978ம் ஆண்டு வரை, கத்தோலிக்கத் திருஅவையின் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்திய அருளாளரான திருத்தந்தை 6ம் பவுல் அவர்கள், மனித உயிருக்கு வழங்கப்படவேண்டிய மாண்பை, தன் உரைகளிலும், மடல்களிலும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தவர்.

இவரோடு இணைந்து, புனிதராக அறிவிக்கப்படவிருக்கும் சான் சால்வதோர் பேராயர், அருளாளர் ஆஸ்கர் ரொமேரோ அவர்கள், வறியோரின் சார்பாக குரல் எழுப்பி வந்தவர். இவர் மேற்கொண்ட சமூக நீதி போராட்டத்தின் காரணமாக, திருப்பலி நிகழ்த்திய வேளையில் சுட்டுக் கொல்லப்பட்டவர்.

1817ம் ஆண்டு, இத்தாலியின் பெஸ்காரா எனுமிடத்தில் பிறந்து, தன் பெற்றோரையும், உறவுகளையும் படிப்படியாக இழந்து, 9வது வயதிலேயே ஆனாதையானவர், நுன்சியோ சுல்பிரிசியோ. இளவயது முதல் நோயுற்ற இவர், தன் 19வது வயதில் இறைவனடி சேரும்வரை, நோயுற்றோருக்கு பணியாற்றிவந்தவர். இவரை, 1963ம் ஆண்டு, அருளாளராக அறிவித்த திருத்தந்தை 6ம் பவுல் அவர்களோடு இணைந்து, இஞ்ஞாயிறன்று இவரும் புனிதராக அறிவிக்கப்படுகிறார்.

மேலும், திரு இருதய பக்தி சபையை நிறுவிய, இத்தாலிய அருள்பணியாளர், பிரான்செஸ்க்கோ ஸ்பிநெல்லி, இத்தாலியைச் சேர்ந்த மறைமாவட்ட அருள்பணியாளர் வின்சென்சோ ரொமானோ, இயேசுவின் ஏழைப் பணியாளர் சபையை உருவாக்கிய ஜெர்மன் நாட்டு அருள் சகோதரி, மரிய கத்தரீனா காஸ்பெர், மறைப்பணியாளர்கள் சபையொன்றை உருவாக்கிய ஸ்பெயின் நாட்டு அருள் சகோதரி நசாரியா இஞ்ஞாசியா ஆகிய நால்வர் உட்பட, ஏழு அருளாளர்கள், புனிதர்களாக அறிவிக்கப்படுகின்றனர்.

## புனிதத் திருத்தந்தை 6ம் பவுல் பயன்படுத்திய திருக்கிண்ணம்

ஐப்பசி 14ம் திகதி, புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில், உலகின் பல நாடுகளிலிருந்து வந்திருந்த 70,000த்திற்கும் அதிகமான விசுவாசிகள், மற்றும் ஸ்பெயின் நாட்டு அரசி, இத்தாலிய அரசுத்தலைவர் ஆகியோர் உட்பட, பல்வேறு உலகத்தலைவர்கள் கூடியிருக்க, ஏழு அருளாளர்களை புனிதர்களாக உயர்த்தும் திருப்பலி, காலை 10.15 மணிக்குத் தொடங்கியது.

அருளாளர்களான திருத்தந்தை 6ம் பவுல், பேராயர் ஆஸ்கர் ரொமேரோ, அருள்பணியாளர்களான பிரான்செஸ்க்கோ ஸ்பிநெல்லி, வின்சென்சோ ரொமானோ, அருள் சகோதரிகளான மரிய கத்தரீனா காஸ்பெர், நசாரியா இஞ்ஞாசியா, மற்றும் 19 வயதான இளையவர், நுன்சியோ சுல்பிரிசியோ ஆகிய எழுவரையும் புனிதர்களாக உயர்த்தும் திருப்பலியை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தலைமையேற்று நடத்தினார்.

### புனிதர் பட்டம் வழங்கப்படும் திருச்சடங்கு

இத்திருப்பலியின் தொடக்கத்தில், தூய ஆவியாரின் வருகைக்காக எழுப்பப்படும் 'Veni Creator Spiritus' என்ற பாரம்பரியப் பாடல் பாடப்பட்ட பின், புனிதர் பட்ட வழிமுறைகளை ஒருங்கிணைக்கும் திருப்பீட பேராயத்தின் தலைவர், கர்தினால் ஜியோவான்னி அஞ்செலோ பெச்சு அவர்கள், கத்தோலிக்கத் திருஅவையின் சார்பில், ஏழு அருளாளர்களை புனிதர்களாக உயர்த்தும்படி, திருத்தந்தையிடம் விண்ணப்பித்த வேளையில், இவ்வேழு அருளாளர்களின் வாழ்க்கைக் குறிப்புக்களை சுருக்கமாகக் கூறினார்.

இந்த விண்ணப்பத்தைத் தொடர்ந்து, அனைத்துப் புனிதர்களின் பிரார்த்தனை பாடப்பட்டபின், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இறைவன், அன்னை மரியா, புனிதர்கள் பேதுரு மற்றும் பவுல், மற்றும் அனைத்துப் புனிதர்கள் சாட்சியாக, இந்த ஏழு அருளாளர்களை, புனிதர்கள் என அறிவித்தார்.

### ஏழு புனிதர்களின் புனிதப் பொருள்கள்

இந்த அறிவிப்பை, புனித பேதுரு வளாகத்தில் கூடியிருந்த அனைவரும் கரவொலி எழுப்பி ஆரவாரமாக வரவேற்றதைத் தொடந்து, உன்னதங்களிலே என்ற பாடலுடன் இந்த ஞாயிறு திருப்பலி தொடர்ந்தது.

இந்தத் திருப்பலியின்போது, பீடத்திற்கு அருகே வைக்கப்பட்டிருந்த அன்னை மரியாவின் திரு உருவத்திற்கு முன், ஏழு புனிதர்களின் புனிதப் பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன.

### புனிதர்களான திருத்தந்தை 6ம் பவுல், பேராயர் ரொமேரோ நினைவாக...

மேலும், இத்திருப்பலிக்கென, பயன்படுத்தப்பட்ட திருக்கிண்ணம் புனிதத் திருத்தந்தை 6ம் பவுல் அவர்கள் விரும்பி பயன்படுத்திய திருக்கிண்ணம் என்பதும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் கரத்தில் பிடித்திருந்த கோல், புனிதத் திருத்தந்தை 6ம் பவுல் அவர்கள் பயன்படுத்திய கோல் என்பதும் குறிப்பிடத்தக்கன.

அதேவண்ணம், பேராயர் ஆஸ்கர் ரொமேரோ அவர்கள், 1980ம் ஆண்டு, பங்குனி 24ம் திகதி, திருப்பலி நிறைவேற்றிய வேளையில் கொல்லப்பட்டபோது, அவர் பயன்படுத்திய திருப்பலி அங்கியைச் சுற்றி கட்டியிருந்த கயிறை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இஞ்ஞாயிறு திருப்பலியில் பயன்படுத்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

புனித பட்ட சிறப்பு திருப்பலியை நிறைவு செய்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருப்பலியின் இறுதியில், மூவேளை செப உரை வழங்கிய வேளையில், புனிதர் பட்ட திருச்சடங்கில் பங்கேற்க வந்திருந்த அனைவருக்கும் தன் நன்றியைக் கூறினார்.

குறிப்பாக, ஸ்பெயின் நாட்டு அரசி, மற்றும், இத்தாலி, சிலே, எல் சால்வதோர் மற்றும் பானமா நாடுகளின் அரசுத்தலைவர்கள், கான்டர்பரி பேராயர் ரோவன் வில்லியம்ஸ், ஆகியோருக்கு தன் நன்றியையும், வாழ்த்துக்களையும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தெரிவித்தார்.




## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

"அன்பு கூர்ந்து, மன்னித்து, கண்டனம் செய்யாது வரவேற்கும், மற்றும் நெருங்கியிருக்கும் கொடைகளையும், உரையாடல் மற்றும் பொறுமை ஆகிய கொடைகளையும் ஆண்டவரிடம் கேட்போம்"

"இறைவன் முன்னிலையில், தியானத்தில் நம் நேரத்தைச் செலவிடுவோம், பிறர் சேவையில் இறைவனுக்காக நம்மால் இயன்ற அனைத்தையும் ஆற்றுவோம். தியானமும் சேவையுமே நம் வாழ்வின் பாதை"

"இறைவன் தன் திருஅவையிடம் என்ன கேட்கிறார் என்பதைத் தெளிந்து தெரிவு செய்ய, நாம் ஒருவருக்கொருவர் செவிமடுக்கும் வரத்தை வேண்டுவோம்"

"நற்செய்தி, வாழும் இயேசுவை அறிந்துகொள்ள உதவுகிறது, உன் உள்ளத்தில் பேசி, உன் வாழ்வை மாற்றுகிறது"

## இளையோரைக் குறித்து Taizé குழும உலகத் தலைவரின் பேட்டி

**நம்பகத்தன்மையுடன் வாழும் ஆண்களும் பெண்களும் வழங்கும் சாட்சிய வாழ்வே, இளையோரை அதிகம் கவர்கிறது - Taizé குழுமத்தின் உலகத் தலைவர், சகோதரர் அலாய்**

இளையோரை மையப்படுத்தி, வத்திக்கானில் முடிவடைந்த 15வது ஆயர்கள் மாமன்றத்தில் கலந்துகொள்ள சிறப்பான அழைப்பு பெற்றுள்ள Taizé குழுமத்தின் தலைவர், சகோதரர் அலாய் அவர்கள் வழங்கிய பேட்டியில், நம்பிக்கையை வளர்ப்பது எவ்விதம் என்பதே, இளையோரிடம் பெரும்பாலும் வெளிப்படும் கேள்வி என்று கூறினார்.

மன்னிப்பு இல்லாத சமுதாயம் வாழ முடியாது என்றும், மன்னிப்பு இன்றி, எதிர்காலத்தைக் குறித்த அச்சமும், சந்தேகமும் மட்டுமே இருக்க முடியும், அத்தகையச் சூழலில், இளையோர், நம்பிக்கை இழப்பது இயற்கையே என்று சகோதரர் அலாய் அவர்கள் கூறினார்.

மேலும், வத்திக்கானில் முடிவடைந்த உலக ஆயர்கள் மாமன்றத்தை முன்னிட்டு, செபங்கள் மேற்கொள்ள விழையும் இளையோருக்கென, ஐப்பசி 6 சனிக்கிழமை முதல், ஐப்பசி 28ம் திகதி முடிய, பிரான்ஸ் நாட்டின் அனைத்து துறவு இல்லங்களும்,



இளையோருக்கென திறந்து வைக்கப்படும் என்று வத்திக்கான் நாளிதழ் L'Osservatore Romano, செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

நம்பகத்தன்மையுடன் வாழும் ஆண்களும் பெண்களும் வழங்கும் சாட்சிய வாழ்வே, இளையோரை அதிகம் கவர்கிறது.





# உடுத்துவது எதற்காக?

இஸ்லாமிய நாடான ஈரானில், அவர்களது தொலைக்காட்சியில் பெரும்பாண்மை நேரங்களில் மத ரீதியான காட்சிகள் தான் ஒளிபரப்பாகும். அதன் பிறகு அரசாங்க அறிவிப்புகள் வெளியாகும். இதற்கெல்லாம் ஒதுக்கிய நேரம் போக எஞ்சி இருக்கும் நேரத்தில் தான் தொலைக்காட்சித் தொடர்கள் ஒளிபரப்பாகும். பெண்கள் அணியும் ஆடைகளுக்கு கட்டுப்பாடு உண்டு. அரை குறை ஆடைகள் அணியும், காட்சிகள் தடைவிதிக்கப்பட்டிருக்கின்றது.

நம்நாட்டிலும் இப்படி ஏதாவது சட்டங்கள் கொண்டு வந்தால் நலமாக இருக்குமல்லவா? எதற்காக உடுத்த வேண்டும். எப்படி உடுத்த வேண்டும்? எந்த இடத்தில் என்ன உடை உடுத்த வேண்டும், என்பதே மக்களுக்கு இன்று மறந்து போய்விட்டது, உடை அணிவதில் இருக்கக்கூடிய குறிக்கோளின்மையும் இல்லாமல் போய்விட்டது. தொலைக்காட்சி, திரைப்படங்கள் மூலமாகத் தென்படும் அரைகுறை ஆடைகள் கூட தற்போது பெரும்பாலும் பாலியல் வன்முறைகளுக்குக் காரணமாக இருக்கின்றது என்று கூட சொல்லலாம்.

ஆனால், எமது மக்கள் எந்த இடத்தில் எந்த ஆடை அணிய வேண்டும் ஆலயங்களுக்கு எப்படி செல்ல வேண்டும், விருந்துபச்சாரங்களுக்கு எப்படிச் செல்ல வேண்டும், வெளி இடங்களுக்கு எப்படி செல்ல வேண்டும் என்பதில் கவனம் செலுத்துவதே இல்லை.

ஆலயங்களுக்கு வருபவர்கள் உள்ளா-டைகளை வெளி ஆடைகளாக அணிந்து வருபவர்களும் உண்டு. அது அவர்களுக்கு பெஷன். ஆலய திருவிழா என்றால், பியூட்டி பாலருக்கு போகாத இளம் பெண்கள் இல்லை, தலை மயிரும் முகத்தில் கலையாத மேக்கப்பும், இன்று சர்வசாதாரணமாகிவிட்டது.

அதை விட சில பங்குகளில் மறைக்கல்வி வகுப்பில் வெள்ளை ஆடை அணிவது அதாவது பாடசாலை சீருடை அணிவது முக்கியமாக்கப்படவில்லை. மறைக்கல்வி வகுப்புக்கு வரும் மாணவர்கள் கல்யாண வீட்டுக்கு போவோர் போல் அவர்களுடைய உடை இருக்கும். காரணம், ஒரு நாள் தான் தங்கள் பிள்ளைகள் நிற ஆடைகளை உடுத்துகிறார்கள் என்பது பெற்றோர்களின் அங்கலாய்ப்பு. பெஷன் உடை அணிந்து மாணவர்கள் மறைக்கல்வி வகுப்புகளுக்கு வருகின்றார்கள். இதற்கு சில பங்கு தந்தையர்களும் ஒப்புதல் வழங்குகிறார்கள். மறைக்கல்வி வகுப்பில் ஆடைகளில் கவனம் செலுத்தப்பட வேண்டும். எந்த இடத்தில் என்ன உடை அணிய வேண்டும் என்ற ஒரு கட்டுப்பாடு எம்முள் இல்லவே இல்லை என்று தான் சொல்லவேண்டும்.

குழந்தைகளுக்கு 12ஆம் வகுப்பு முடியும் வரை சீருடைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஒருசில கல்லூரிகளும் இப்படித்தான் உடுத்த வேண்டும் என வரையறை வைத்துள்ளன. ஒருசில நிறுவனங்கள் கூட தங்கள் நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் இப்படித்தான் உடுத்த வேண்டும், இன்னின்ன ஆடைகள் தான் பயன்படுத்த வேண்டும் என்ற (Dress Code) ஆடை விதிகளைக் கொண்டு வந்துள்ளன. ஒரு நாட்டின் பண்பாடு. கலாச்சாரம் முதலியன மக்களுடைய அன்றாட பழக்கவழக்கங்கள் மூலமாக வெளிப்படும். அவற்றில் வெளியுலகிற்கு நம்மை அடையாளம் காட்டுவது நாம் உடுத்தும் உடைகள் தான். உடை உடுத்துபவரின் நாகரீகத்தை மட்டுமல்ல, உடுத்துபவரின் மனதையும் அவை படம்பிடித்துக் காட்டும்.

முதல் குழந்தைப் பருவம் (சிசு). இறுதி குழந்தைப் பருவம் (வயதான முதியோர்) நீங்கலாக சுயநினைவில் இருக்கக்கூடிய அனைவரும் கச்சிதமாக உடை உடுத்த வேண்டும் என்பது நம் அனைவருக்கும் தெரியும். மக்கள் குழுமக்கூடிய இடங்கள், நடமாடக்கூடிய இடங்கள், பணிபுரியும் இடங்களில் பிறரது கவனத்தைச் சிதைக்காத உடைகளை உடுத்தினால் நலமாக இருக்கும்.

நாகரீக ஆடைகள் தொலைக்காட்சிகள் மூலமாக மக்களை வந்தடைந்துள்ளதா? அல்லது மக்கள் மூலமாகத் தொலைக்காட்சிக்கு வந்து சேர்கின்றதா? எனக் கண்டு பிடிக்க முடியாதவாறு வெகு சுலபமாக ஆடை நாகரீகம் பரவி விடுகிறது. பலர் அணியும் ஆடைகளைப் பார்க்கும்போது எதற்காக ஆடை அணிய வேண்டுமோ அந்த நோக்கம் நிறைவேறுகிறதா என அவர்கள் பார்பதாகவே தெரியவில்லை.

கூட்டலும் - பெருக்கலும், கழித்தலும் - வகுத்தலும் வாழ்க்கையில் எவ்வளவு இருக்கின்றதோ அதையேதான் ஆடையிலும் பயன்படுத்துகின்றோம். வாழ்க்கையில் கூட்டலும், பெருக்கலும் பயன்படுத்த வேண்டிய இடத்தில் தெரியாததாலும், புரியாததாலும் கழித்தலையும், வகுத்தலையும் பயன்படுத்துகின்றோம். ஆடை அணிவதிலும் அதே முறையைத் தான் கடைப்பிடி-க்கின்றோம். ஆனால் தெரிந்தே பயன்படுத்துகின்றோம்.

வயது வந்தோரும் விதிவிலக்கில்லை, அதிகாரத்தில் இருப்போரும் விதிவிலக்கில்லை. குழந்தைகள் தங்களது பொழுதுபோக்கு நேரங்களில் பெரும்பான்மை நேரங்களை தொலைக்காட்சி முன்பே செலவிடுகின்றார்கள். திரைப்படங்கள், நாடகங்கள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் என ஒளிபரப்பாகும் பெரும்பான்மை நிகழ்வுகள் குழந்தைகள் பார்க்கும் படியாகவும் இல்லை, நம் கலாச்சாரத்தைப் பிரதிபலிப்-பதாகவும் இல்லை. பலருடைய ஆடைகள் கற்கால மனிதர்களையே பிரதிபலிப்பதாக இருக்கின்றன அவர்களாவது காடுகளில் மிருகங்களோடு மிருகங்களாக வாழ்ந்தார்கள்.

தற்போது சிறு குழந்தைகள் மட்டுமே கார்ட்டூன், சுட்டிக் குழந்தை நிகழ்வுகள், டிஸ்கவரி போன்றவற்றைப் பார்க்கின்றார்கள். வளரிளம் குழந்தைகள் விரும்பிப் பார்க்கும் அலைவரிசைகள் அனைத்தும் அரைகுறை ஆடை மனிதர்களையே ஒளிபரப்புகின்றது. வாலிபர்கள் விரும்பிப் பார்க்கும் விளையாட்டு நிகழ்ச்சிகளில்கூட ஆண்கள் கச்சிதமான ஆடைகளையும், பெண்கள் அரைகுறை ஆடைகளையும் அணிந்தபடிதான் விளையா-டுகின்றனர். இந்த நாகரீகம் எங்கிருந்து இறக்குமதியானது எனத் தெரியவில்லை. எப்படியோ பன்னாட்டுக் கலாச்சாரம் மற்றுள்ள துறைகளில் ஊடுருவியதை விட மக்கள் அணியும் ஆடைகளில் வெகு வேகமாகப் பரவிவருகின்றது. அதற்கு எண்ணெய் ஊற்றுவபோல் நம் நாட்டுத் தொலைக் காட்சித் தொடர்களும், திரைப்-படங்களும் அமைந்துள்ளன.

பாடசாலைப் படிப்பு காலம்வரை சீருடை அணிந்த குழந்தைகள் கல்லூரிகளுக்குச் சென்றவுடன் லைப் ஸ்டைல் (Life Style) என்று கூறிக்கொண்டு தங்களுக்குப் பொருந்தாத ஆடைகளுக்கு மாறிவிடுகின்றனர். அவர்கள் உள்ளத்தில் அடக்கமான ஆடை அணிபவர்கள் அநாகரீகமானவர்கள் அல்லது பட்டிக்காட்டு மக்கள்.

கண்ணியமான ஆடைகளுக்கு எப்போதும் மதிப்பு உண்டு என இவர்களுக்கு யார் எடுத்துச் சொல்வது? அன்று உடுத்த உடை இல்லாததால் மக்கள் ஆடை குறைத்து வாழ்ந்தார்கள். இடுப்பில் ஒரு துண்டு மட்டும் கட்டிக் கொண்டு பாடசாலைக்கு போன குழந்தைகள் உண்டு. உடுத்த உடை இல்லாதது அன்று பொருளாதாரப் பிரச்சனையாக இருந்தது. இன்று வறுமையால் அல்ல, செழுமையும், ஆடைக் குறைப்பும் கைகோர்த்து நடக்கின்றன. நாட்டில் நடக்கும் முக்கியமான விழாக்களின்போது திரையில் பிழைப்புக்காக அரைகுறை ஆடைகளில் நடிப்பவர்கள் கச்சிதமான ஆடைகளில் வரும்போது நம்மவர்கள் அரைகுறை ஆடைகளில் காட்சியளிப்பர். இந்த ஆடைக் குறைப்பு பல சமூகப் பிரச்சனைகளுக்கு காரணமாகின்றது எனப் பலரும் பேச ஆரம்பித்து விட்டார்கள்.

**ஆடை நமது**
**கலாச்சாரத்தைப்**
**பிரதிபலிக்க வேண்டும்.**
**ஆடை அம்மாவையும்,**
**மகளையும்**
**வேறுபடுத்திக் காட்ட**
**வேண்டும்.**
**ஆடை ஆசிரியரையும்,**
**மாணவியையும்**
**பிரித்துக்காட்ட**
**வேண்டும்.**
**ஆடை உடுத்துவதன்**
**நோக்கத்தை**
**நிறைவேற்ற வேண்டும்.**
**ஆடை**
**வயதுக்கேற்றவாறு**
**அமைந்திருக்க**
**வேண்டும்.**

முன்னாள் அமெரிக்க அதிபர் கால்வின் கூலிட்ஜ் தனது சொந்த ஊரிலிருந்து நண்பர்கள் சிலரை வெள்ளை மாளிகைக்கு விருந்துக்கு அழைத்திருந்தார். வெள்ளை மாளிகையில் சாப்பாட்டு மேசையில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது தெரியாததால் நண்பர்கள் கூலிட்ஜ் செய்வதை அப்படியே பின்பற்ற நினைத்தார்கள். அவர்கள் யோசனை காப்பி குடிக்கும் நேரம் வரை சரியாக இருந்தது. காப்பி குடிக்கும்போது அதிபர் காப்பியை சாசரில் ஊற்றி, சக்கரையையும், கிரீமையும் அதில் கலக்கினார். விருந்தினர்களும் அதையே செய்தனர். கூலிட்ஜ் கலந்த காப்பியை பூனைக்கு வைத்தார். இப்போது நண்பர்களுக்கு என்ன செய்வதெனப் புரியவில்லை.



இப்படித்தான் நம்மவர்களும் ஆடை அணிவதில் வெளிநாட்டவரைப் பின்பற்றகிறார்கள். ஏன், எதற்கு என்ற சிந்தனைகூட இல்லாமல் நமக்குத் தேவைதானா என்றும் பார்க்காமல், பொருந்துகிறதா என்றும் யோசிக்காமல் நாகரீகம் என நினைத்துக்கொண்டு தாங்கள் உடுத்தும் உடைகளில் மாற்றத்தைக் கொண்டு வருகிறார்கள்.

புகழ்பெற்ற ஆங்கில கவிஞர் வில்லியம் ஷேக்ஸ்பியர் ‘ஹாம்லெட்’ என்ற தனது ஆங்கில நாடகத்தில் பொலோனிஸ் என்ற அறிஞர் தன் மகனுக்கு கூறும் அறிவுரை அனைவரின் உள்ளத்தையும் தொடுவதாக இருக்கின்றது. எப்படி உடுத்த வேண்டும் என்றும் மகனுக்கு அறிவுறுத்துகின்றார்.

**எல்லோருக்கும் செவிகொடு**
**ஆனால் சிலருக்கு மட்டும் குரல் கொடு.**
**எல்லோருடைய கண்டனத்தையும் பெற்றுக்கொள்.**
**ஆனால் முடிவை நீ எடு.**
**உன் பணத்தால் வாங்க முடியாத**
**உன் நடத்தை உயர்வாக இருக்கட்டும்.**
**ஆனால் செயற்கையாக நடந்துகொள்ளாதே.**
**செழிப்பாய் இரு. ஆனால் பகட்டாய் இருக்காதே.**
**ஆடைதான் மனிதனை வெளிப்படுத்துகின்றது.**

இன்று நம் குழந்தைகளுக்கு இந்த அறிவுரையைச் சொல்லும் தகுதி நமக்கு இருந்து, கேட்கும் பிள்ளைகளாக அவர்களும் இருந்துவிட்டால்! இவை நிறை வேறாத கற்பனைதானோ?


**நாம் உண்பது நமக்காக!**
**நாம் உடுத்துவது பிறருக்காக!**
**நமது செயல் சமுதாயத்துக்காக!**
**நமது வாழ்வு மறுமைக்காக!**

இந்த சிந்தனை நம்மிடம் இருந்தால் நாம் அணியும் ஆடைகள் பிறரை பாவம் செய்யத் தூண்டாது. நாகரீக உடை அணியலாம். ஆனால் பிறரது சிந்தனையை, கவனத்தைச் சிதைக்காதவாறு, கண்களை உறுத்தாதவாறு அமைய வேண்டும்.

கண்ணியமான உடைகளுக்கு எவ்விடத்திலும், எல்லோரிடமும், எப்போதும் மதிப்பு உண்டு.



# விவிலிய வாசிப்பு




**விவிலியத்தை கொண்டு எப்படிச் செபிப்பது.**

இறைவனோடு எப்படி தனிப்பட்ட அன்புறவை வளர்த்துக் கொள்வது? எனது வாழ்வை எப்படி விவிலிய வாசிப்பின் மூலம் இன்னும் நல்லதாக மாற்றுவது? இந்த வினாக்களுக்கு இங்கு விடைகாண முயல்வோம்.

இறைவார்த்தையைச் செபிக்கிற பழக்கம் ஆதித்திருச்சபை முதல் இருந்து வந்திருக்கிறது. இவற்றை கட்டளை செபம், திருப்பலியில் பதிலுரைப் பாடல் ஆகியவற்றில் காண்கின்றோம். மக்கள் செபித்த செபங்கள் இறை வார்த்தையாக, விவிலியமாக மாறியிருக்கின்றன. (திருப்பாடல்கள்). இறைவார்த்தையைச் செபிக்கும் முறைகள் பல உள்ளன. இவற்றில் மிகவும் எளிதானது, விவிலியத்தில் இருக்கும் செபங்களையே எடுத்துச் செபித்து நம்முடைய செபமாக மாற்றிக் கொள்வது (ஆண்டவரே பேசும் அடியேன் கேட்கிறேன்)

செபமாலையை அர்த்தம் புரிந்து செபித்தாலே விவிலியத்தைச் செபித்ததாகிவிடும். ஏனெனில் விவிலியத்தின் மறையுண்மைகளைத்தான் செபமாலையாகச் செபிக்கிறோம். கர்த்தர் கற்பித்த செபமும், அருள்நிறை செபமும் விவிலியச் சார்புடையவை. விவிலியத்தைக் கொண்டு செபிக்கும் பழக்கம் திருச்சபையில் பல நூற்றாண்டுகளாக Lectio Divina (Divine Reading) என்னும் முறையில் எல்லோராலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. இடைக்காலத்தில், இது மடங்களில் இருப்பவர்களின் வேலை என்று பொதுமக்களிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக கைநழுவிப் போய்விட்டது. அதை மீட்டெடுக்கும் பணியும், பயன்படுத்தும் பழக்கமும் இப்போது வந்துள்ளது. அதைப்பற்றி இங்கு சிறிது காண்போம்.

இந்த வகை செபத்தில் Lectio, Meditatio, Oratio, Contemplatio என நான்கு நிலைகள் உள்ளன. அறிவுப்பூர்வமாக நமது புரிந்துணர்வுக்காக நாம் இப்படிப் பகுத்துப் பார்த்தாலும், உண்மையில் செபிக்கும்போது இதை நினைத்துக்கொண்டிருப்பதும், பகுத்துக்கொண்டிருப்பதும் நல்லது அல்ல. இவ்வகை செபம் செய்யும்போது நமது நோக்கம் இறுதி நிலையான Contemplatio அடைவதுதான். மற்ற நிலைகளை நாம் கடக்கும்போதுதான் அது புரியும். அதற்காக ஒவ்வொரு நிலையையும் துரிதப்படுத்துவதோ, இது முடிந்துவிட்டது அடுத்தது என்று நினைப்பதோ தவறு. அவை தானாக நிகழவேண்டும். ஒரு நிலையிலிருந்து மற்றதற்கு முதிர்ச்சியடைய வேண்டும். மகிழவேண்டும். எனவே இவற்றை அட்டவணை போட்டுச் செய்வதும் Step by Step என்று எண்ணுவதும் தவறு.

இந்த வகை செபத்தில் மிக அவசியமாகத் தேவையானது அறிவோ, ஆற்றலோ அல்ல. மாறாக விசுவாசமும், ஈடுபாடும், ஆவியின் ஏவுதலை ஏற்றுக் கொள்ளுகின்ற திறந்த மனதும், இறைவன் நம்மைக் கரம்பிடித்து நடத்தி ஒவ்வொன்றாக விளக்க, புரியவைக்கும் முயற்சியில் நம்மை நாம் கையளிப்பதும், விட்டுக்கொடுப்பதும், ஏற்றுக்கொள்வதும்தான். அதனால் இந்த வகை செபத்தால் வாழ்க்கைக்குத் தொடர்பில்லை என்று பொருள் இல்லை. ஆவியானவரால், இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு, வழிநடத்தப்படுபவர்களின் வாழ்க்கை நல்லதாகத்தான் இருக்கும். அல்லது நல்லதாக மாறும்.

**செபமுறைக்குச் சில முன் தயாரிப்புக்கள். (Lectio Divino)**

- ❖ விருப்பமான ஒரு நிலையில் (Posture) அமர்ந்துகொள்வது, கால்களை மடக்கி, முதுகுத் தண்டை நேராக நிமிர்த்தி அமர்வது நல்லது.
- ❖ உடலையும் மனதையும் ஒருமுகப்படுத்தி கவனத்தை நமது மூச்சுக்காற்றின் மீது பதிய வைக்கலாம். லேசாக நீண்ட சுவாசம் செய்யலாம்.
- ❖ நம்முள், நம்மைச் சுற்றி இறைப்பிரசன்னம் இருப்பதை உணரலாம்.
- ❖ தூய ஆவியின் துணைவேண்டிச் செபிக்கலாம், பாடல் பாடலாம்.

**முதல் நிலை வாசித்தல் (Lectio - Reading)**

சிறிய பகுதியாக, அதிக சிக்கல், குழப்பங்கள் இல்லாத பின்னணி விபரங்கள் தேவைப்படாத பகுதியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதை நிறுத்தி பொறுமையாக வாசிக்க வேண்டும்.

வாசித்தல் எனும்போது ஏதோ தெரிந்துகொள்ள வேண்டும் எனும் ஆசையில் வாசிப்பது போல் அல்ல, மாறாக உரையாடலில் பேசுகிறவருக்கு செவிமடுப்பது போல கவனமுடன் வாசிக்க வேண்டும். (Attitude of Careful Listening). இந்த நேரத்தில் இறை ஏவுதலால் எழுதப்பட்ட வார்த்தையிது, எனது வாழ்வுக்கு வழிகாட்டும் விளக்கு இது. நல்வாழ்வுக்கான பொக்கிஷம் இது. அதைக் கண்டுபிடிக்க வேண்டும், இறைவன் இதன் வழியாகப் பேசுகின்றார் என்ற சிந்தனையில் வாசிக்க வேண்டும். கடவுள் இங்கு இப்போது என்னுடன் பேசுகின்றார் என்ற மனநிலையில் வாசிக்க வேண்டும்.

வாசிக்கிற விவிலியப் பகுதி நமக்கு ஏற்கனவே தெரிந்திருந்தாலும் இன்று இங்கு, இந்த வாழ்க்கைச் சூழலில் வாசிக்கும்போது அதற்கு என்று தனிப்பொருள் இருக்கிறது. இதில் கூறப்பட்ட வார்த்தைகள் பிறருக்குக் கூறும் அர்த்தமும் செய்தியும் வேறு, எனக்கு இன்று அர்த்தம் தருகிற வார்த்தைகள் யாவை எனக் காணவேண்டும். சான்றாக, லூக் 17:11-19 பகுதியில் இயேசுவே எங்களுக்கு இரங்கும், உரத்தக் குரலில் கடவுளைப் போற்றிப் புகழ்ந்துகொண்டே இயேசுவிடம் திரும்பி வந்தார். எழுந்து செல்லும் உமது நம்பிக்கை உமக்கு நலமளித்தது. ஆகியவையாக அவை இருக்கலாம்.

**தொடரும்**

# திருத்தூதர் புனித யூதா–ததேயு

யூதா, திருத்தூதர் சின்ன யாக்கோபின் சகோதரர். இயேசுவின் மூத்த ஒன்றுவிட்ட சகோதரர். இயேசுவைப் போன்று இருப்பார். சிறந்த மறைநூல் அறிஞர். அன்னை மரியாவிடமிருந்து வேதாகமம், செபங்கள், யூத ரபிகளின் 613 சட்டப்பிரிவுகளையும் விளக்கங்களையும் கற்றவர். யூதாவும், அவர் சகோதரர்களும் இயேசுவின் நெருங்கிய நண்பர்கள். இயேசுவின் சகோதரர்களில் முதலில் இயேசுவைப் பின்பற்றி சீடரானார். பின் திருத்தூதராகத் திருப்பொழிவுப் பெற்றார்.

யூதா இயேசுவிடம் “ஆண்டவரே உம்மை உலகிற்கு வெளிப்படுத்தாமல், எங்களுக்கு வெளிப்படுத்தப்போவதாக சொல்கிறீரே ஏன்?” எனக் கேட்டார். இயேசு மறுமொழியாக “என்மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பர். என் தந்தையும் அவர்மீது அன்பு கொள்வார். நாங்கள் அவரிடம் வந்து அவருடன் குடிகொள்வோம்” என்றார் (யோவா 14:23) இயேசுவின் விண்ணேற்றத்தின் போது அங்கிருந்தார். பெந்தகோஸ்தே திருப்பொழிவில் விண்ணகக் கொடைகள் பெற்றவர்.

நற்செய்தியை கலிலேயா, சமாரியா, யூதேயாவிலுள்ள யூதர்களுக்குப் போதித்தார். இதுமேயா, சிரியா, மெசப்பத்தேமியா (ஈராக்), லிபியா சென்று மறைபோதித்தார். கி.பி 37ல் யூதா மெசபத்தேமியா வந்து பேதுருவால் பாபிலோன் சபை (1பேது 5:13) என்று அழைக்கப்பட்டதும் தோமாவால் நிறுவப்பட்டதுமான கிழக்கிந்தியத் திருச்சபையை வழிநடத்தினார். கி.பி 52இல் தோமா மெசப்பத்தேமியாவிலிருந்து வெளியேறும்போது யூதா இத்திருச்சபைக்குத் தலைவரானார். கி.பி 60இல் யூதா தம் திருமுகத்தை எழுதினார்.

யூதா எழுதிய திருமுகத்தில் “தூய்மைமிகு இறை நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு உங்கள் வாழ்வைக் கட்டி எழுப்புங்கள். தூய ஆவியின் துணையுடன் வேண்டுதல் செய்யுங்கள். கடவுளது அன்பில் நிலைத்திருங்கள். என்றுமுள்ள நிலைவாழ்வைப் பெற நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இரக்கத்தை எதிர்பார்த்திருங்கள்” (யூதா 1:20-21) என்று போதித்தார்.

துருக்கி நாட்டின் எதேசா நகரின் அரசருக்குத் தொழுநோய் இருந்தது. இயேசுவின் புதுமைகளைக் கேள்விப்பட்டிருந்தார். இயேசு தம் திருமுகத்தை ஒரு துணியில் பதித்து யூதாவிடம் கொடுத்திருந்தார். யூதா இந்தத் துணியை அரசரிடம் கொடுத்தார். அரசர் இயேசுவின் திருமுகத்திற்கு மிகுந்த மரியாதை செலுத்தினார். தொழுநோயிலிருந்து அற்புத சுகம் கிடைத்தது. அரசரும் மக்களும் திருமறையை ஏற்றுக்கொண்டு திருமுழுக்குப் பெற்றனர்.

யூதாவும் திருத்தூதர் பர்த்தலமேயுவும் அர்மேனியாவில் முதன்முதலில் மெய்மறையைப் போதித்தனர். இந்த இரு திருத்தூதர்களும் அர்மேனிய அப்போஸ்தலிக்கத் திருச்சபையின் பாதுகாவலர்கள். மீண்டும் மெசப்பத்தேமியாவில் நற்செய்தி போதித்தார். விசுவாசிகள் அதிகரித்தனர். எருசலேம் திருச்சங்கத்தில் கலந்துகொண்டார். திருத்தூதர் சீமோனுடன் யூதா சேர்ந்து லிபியா சென்று மறைபோதித்தார். பெர்சியாவில் நற்செய்தியைப் போதித்தார். மிகுந்த அறுவடை கிடைத்தது. கணக்கிட முடியவில்லை. அங்கு காட்டுமிராண்டி மக்களை மனமாற்றினார். மென்பண்புகள் அவர்களுக்குள் குடிவந்தன. நாகரிகமற்ற செயல்கள் மறைந்தன. இரக்கச் செயல்கள் பெருகின. இறைப்பணியாளர்கள் போல் மாற்றமடைந்தனர்.


பெர்சியாவில் சிலை வழிபாடுகளை இரு மந்திரவாதிகள் ஆதரித்து வந்தனர். புனிதர்களுக்கு அதிக தொல்லைக் கொடுத்தனர். புனிதர்கள் சிலைகளுக்கு ஆணையிட “புனிதர்கள் உண்மையான கடவுளின் சீடர்கள்” என சான்று பகர்ந்த சிலைகளுள் ஒளிந்திருந்த தீய ஆவிகள் ஆரவாரத்துடன் சிலைகளை நொருக்கிவிட்டு வெளியேறின.

இந்தியாவிலிருந்து வந்த படை பெர்சியாமேல் போர்தொடுத்தபோது பெர்சிய படைகள் தயாரிப்பு நிலையில் இருந்தது. இதே இரு மந்திரவாதிகள் கட்டளையிட சிலைகளிலிருந்த தீய ஆவிகள் “போர் நீண்ட காலம் நடைபெறும் பலர் மாண்டுபோவர்” என்றன. இளவரசனின் வேண்டுகோளுக்கு இணங்கி புனிதர்கள் “இதே மணி நேரத்தில் எதிரிகள் சமாதானம் பேச வருவர்” என்றனர். அவ்வண்ணமே நிகழ்ந்தது. இளவரசன் மந்திரவாதிகளையும் அவர்களை ஆதரித்தவர்களையும் உயிருடன் எரிக்க ஆணையிட்டான். புனிதர்கள் தலையிட்டு தண்டனை கைவிடப்பட்டது.

யூதாவின் சகோதரரும் எருசலேம் ஆயருமான திருத்தூதர் சின்ன யாக்கோபுவின் மறைசாட்சி மரணத்திற்குப் பின் யூதா எருசலேம் வந்தார். தம் சகோதார் திருத்தூதர் சீமோனை எருசலேமின் அடுத்த ஆயராக திருநிலைப்படுத்த உதவினார். கி.பி 65இல் பெர்சியாவில் சீமோனோடு யூதா மறைசாட்சியாக மரித்தார் என்று கூறப்படுகிறது. நம்பிக்கை இல்லாதவருக்கும், நம்பிக்கை இழந்தவருக்கும், கைவிடப்பட்டவர்களுக்கும் புனிதர் பாதுகாவலர். பேரிடருக்குள்ளாகி இவரிடம் மன்றாடுவோருக்கு புனிதரின் உதவி உடனே கிடைத்திருக்கிறது. புனிதரின் நினைவு நாள் ஐப்பசி 28



## இம்மாதப் புனிதர்

## மணமகன் தேவை

நாவலப்பிட்டியை சேர்ந்த 1979ஆம் ஆண்டு பிறந்த, அரசாங்க ஆசிரியையாக கடமையாற்றும் மணமகளுக்கு தகுந்த வரனை எதிர்பார்க்கின்றோம்.

**தொடர்பு கொள்ளும் எண்**

**0774209399**

(N3575)



## மணமகள் தேவை

கத்தோலிக்க சமயம், வத்தளையிலிருந்து தமிழ்ப் பெற்றோர் ஒரு படித்த, அன்புள்ள, ஒழுக்கமுள்ள மகளை தேடுகின்றனர். அவரது மகன் மிகவும் அழகிய, அன்பான, அறிவார்ந்த மற்றும் நல்ல மனிதர், மறையாசிரியர், வயது 36, உயரம் 5’ 4”. அவர் தொழில் நுட்ப கல்லூரியில் இருந்து அளவீட்டு ஆய்வுக்கு தகுதியானவர். உயர்ந்த சம்பளத்துடன் கூடிய ஒரு செயற்குழுவில் ஒரு புகழ்பெற்ற கட்டுமான நிறுவனத்திற்கான அளவு சர்வேயராக பணியாற்றி வருகிறார். சிவில் இன்ஜினியரிங் பட்டம் பெறும் நிலையில் உள்ளார். புகைப்படத்துடன் முழு விவரங்களுடன் **marraigeproposals2018@gmail.com**க்கு பதிலளிக்கவும்.

(N3707)

## சாரதி தேவை

வயது 50-70, கருணை இல்லம் (Home of Compassion) இரு மொழிகளும் தெரிந்தவர் விரும்பத்தக்கது.

**இல. 201/1 மஹாவத்தை வீதி, கொழும்பு 14.**

**நேரடித் தொடர்பு**

**தொ.பேசி எண் 0712522893**

(N3637)

# வருடாந்த திருவிழா

# புனித யூதா முனிந்திரர் திருத்தலம்

# இந்திகொல்ல



## ஒக்டோபர் 27 மற்றும் 28, 2018

**"புனித ஜூட் முனிவரே!**
**நல்ல மேய்ப்பர்களாக நாம் மாறிட**
**எங்கள் சார்பாக கடவுளிடம் பரிந்துரையும்"**

- **ஒக்டோபர் மாதம் 18ம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகும். அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு திருப்பலி இடம்பெறும்.**

- **ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி (வெள்ளி) முதல் 26ஆம் திகதி வெள்ளிவரை மாலை 6.45 மணிக்கு நவநாளும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் இடம்பெறும்.**

- **ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி மாலை 7.00 மணிக்கு கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு. மெக்ஸ்வெல் சில்வா ஆண்டகையின் தலைமையில் (வெஸ்பர்ஸ்) மாலை ஆராதனையும் தொடர்ந்து திவ்விய நற்கருணை திருப்பவனியும் இடம்பெறும்.**

- **ஒக்டோபர் மாதம் 28ஆம் திகதி ஞாயிறு இடம்பெறும் திருப்பலிகள்**
  - காலை 5.00 – சிங்கள மொழியில்
  - காலை 6.00 – ஆங்கில மொழியில்
  - காலை 7.30 – சிங்கள மொழியில்
  - **காலை 8.30 கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர், அதிதேமகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில்** திருவிழாத்திருப்பலி மற்றும் யூதா முனிவரின் திருச்சுரூப பவனி இடம்பெறும்.
  - காலை 10.30 – சிங்கள மொழியில்
  - நன்பகல் 12.30 – ஆங்கில மொழியில்
  - மாலை 7.00 – சிங்கள மொழியில்
  - காலை 11.30 – தமிழ் மொழியில்
  - மாலை 5.00 – சிங்கள மொழியில்

*மதிப்பிற்குரிய அருட்தந்தை ஜூட் ஷாமன் பர்னாந்து அடிகளார்*
*பங்கு பரிபாலகர்*
*புனித யூதா ததேயு திருத்தலம், இந்திகொல்ல*



அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்